திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:5, Issue:01, Pages:56
AUGUST-2025, Price Rs.20/-

ஆகஸ்ட் 2025,
விலை ரூ.20/-



ஸ்ரீவரலக்ஷ்மி விரதம் 08-08-2025



## திருமலையப்ப ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவம்
## 24-09-2025 முதல் 02-10-2025 வரை

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 23-09-2025 | செவ்வாய் | -- | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 24-09-2025 | புதன் | வைர கவச ஆபரணத்தில திருச்சி உத்ஸவம், துவஜாரோஹணம் | பெரிய சேஷ வாகனம் |
| 25-09-2025 | வியாழன் | சிறிய சேஷவாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 26-09-2025 | வெள்ளி | சிம்ம வாகனம் | முத்துப்பந்தல் வாகனம் |
| 27-09-2025 | சனி | கல்ப விருக்ஷ வாகனம் | சர்வ பூபால வாகனம் |
| 28-09-2025 | ஞாயிறு | பல்லக்கில் மோகினி அவதாரம் | கருட சேவை |
| 29-09-2025 | திங்கள் | ஹனுமத் வாகனம்<br>மாலை வஸந்தோத்ஸவம், தங்கத்தேர் | யானை வாகனம் |
| 30-09-2025 | செவ்வாய் | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 01-10-2025 | புதன் | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 02-10-2025 | வியாழன் | பல்லக்கு உத்ஸவம், தீர்த்தவாரி, அவப்ருதோத்ஸவம், சக்கரஸ்நானம் | திருச்சி உத்ஸவம், துவஜாவரோஹணம் |



*ஜாதஸ்ய ஹி த்$_4$ருவோ ம்ருத்யுர்*
*த்$_4$ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச।*
*தஸ்மாத$_3$பரிஹார்யேऽர்தே$_2$*
*ந த்வம் சோசிதுமர்ஹஸி॥*

பிறந்தவனுக்கு இறப்பு என்பது
நிச்சயமானது; இறந்தவனுக்கும் பிறப்பு
நிச்சயம். ஆகவே, தவிர்ப்பதற்கான
உபாயமே இல்லாத இந்த விஷயத்தில்
நீ துயரப்படுவது தக்கதன்று.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–27*

***அளிக்கும்பரமனைக் கண்ணனை ஆழிப்பிரான்தன்னை***
***துளிக்கும் நறுங்கண்ணித் தூமணிவண்ணனெம்மான் தன்னை***
***ஒளிக்கொண்ட சோதியை உள்ளத்துக் கொள்ளுமவர் கண்டீர்***
***சலிப்பின்றியாண்டெம்மைச் சன்மசன்மாந்தரம் காப்பரே***



**உபகரிக்குமிடத்தில் தனக்கு**
**மேலில்லாதபடி உபகரிக்குமவனும்**
**க்ருஷ்ணனாக வந்து அவதரித்தவனும்,**
**திருவாழியைக் கையிலேந்தி**
**மஹோபகாரங்கள் செய்பவனும், தேன்**
**வெள்ளமிடா நின்று நறுமணம் மிக்க**
**மாலையை அணிந்துள்ளவனும்,**
**அழுக்கற்ற மாணிக்கம் போன்ற**
**வடிவையுடையவனும், அளவற்ற**
**தேஜோரூபமான**
**விக்ரஹத்தையுடையவனுமான**
**எம்பெருமானை நெஞ்சிலே**
**தாங்குமவர்கள் எம்மை ஒருகாலும்**
**கைவிடாமல் அடிமைகொண்டு எத்தனை**
**ஜன்மமானாலும் ரக்ஷிக்குமவர்களாவர்.**

*– நம்மாழ்வார்*



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸ்ரீபாலாஜி அறுவை சிகிச்சை, ஆராய்ச்சி மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு மையம் [பர்ட்]

# BIRRD









- போலியோ மெல்லிடஸ், பெருமூளை வாதம், பிறவிக் கோளாறுகள், முதுகுத்தண்டு காயங்கள் மற்றும் எலும்பு சம்மந்தமான மூட்டு சிதைவு நோயாளிகளுக்கு முழுமையான இலவசமாக சேவைகளை வழங்குவதற்காக அதிநவீன மருத்துவ உபகரணங்களுடன் பர்ட் மருத்துவமனை நிறுவப்பட்டது.
- மக்கள் சேவையே மாதவ சேவை என்பதை கருத்தில் கொண்டு நோயாளிகளுக்கு மனிதாபிமான கண்ணோட்டத்துடன் இம்மருத்துவ மனைக்கு உங்கள் பங்களிப்பினை நன்கொடையாக வழங்கிடுங்கள்.
- நன்கொடைகளுக்கு வருமான வரிச்சட்டம் 80(ஜி) ன்படி வரி விலக்கும் உண்டு.

காசோலை/ வரைவோலையை "செயலாட்சித் தலைவர், தி.தி.தே." எனும் பெயரில் எடுத்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உதவி செயலாட்சித் தலைவர்
(நன்கொடைப் பிரிவு),
ஒருங்கிணைந்த நன்கொடையாளர்
நிர்வாக மையம்,
ஆதிசேஷு ஓய்வு இல்லம்,
கூடுதல் செயலாட்சித் தலைவர்
முகாம் அலுவலகம் அருகில்,
திருமலை,
தொ.எண் : 0877-2263472.

இயக்குனர், பர்ட் அறக்கட்டளை,
தி.தி.தே. திருப்பதி – 517 501.
தொ.எண். 0877-2264025, 2264619.

| | | |
|---|---|---|
| இணையதளம் | : | www.tirumala.org |
| மின்னஞ்சல் | : | officebirrd@gmail.com |
| மொபைல் செயலி | : | BIRRD HOSPITAL |

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்


# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஆகஸ்ட் 2025

மலர் 05 இதழ் 01




## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| வராஹ வைபவம் | - திரு. அ.ஜ.ரங்கநாதன், சென்னை. | 7 |
| மலையப்பன்தான் கண்ணன் கண்ணன்தான் மலையப்பன் | -பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி. | 10 |
| உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம் | - டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன், திருப்பதி. | 14 |
| கல்வியும் செல்வமும் பெருக பரிமுகன் வழிபாடு | - திரு.த.புருஷோத்தமன், சென்னை. | 15 |
| ஸ்ரீமகாலட்சுமியை வரவேற்க... | - திரு.எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி. | 18 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் | - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 22 |
| சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: பாலகிருஷ்ணரின் மாய லீலைகள் | -படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை. | 25 |
| ஸ்ரீசித்தி விநாயகர் விரத வழிபாடு | | 27 |
| திருநெடுங்குன்றம் | - பேராசிரியர் ஜி.நரசிம்மன், அனந்தபுரம். | 34 |
| 108 திவ்வியதேச வைபவம் : திருவேங்கடம் | - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 37 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் : கூரத்தாழ்வான் | - ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 40 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: திரிஜடை | - திரு.எஸ். ஸ்ரீதுரை, காஞ்சிபுரம். | 42 |
| ராசிபலன்கள் : ஆகஸ்ட் 2025 | - டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். | 47 |
| நீதிக்கதை: மூன்று வகை மாணாக்கர்கள் | - திரு.சதா. ஸ்ரீஹரிஹரன், கும்பகோணம். | 48 |
| சிறுவர் உலகம் : பல்சுவைப் பகுதி | | 49 |
| சித்திரக்கதை : மூத்தவனுக்கே முதல் வணக்கம் | | 52 |


**அட்டைப்பட விளக்கம்**

முன்னட்டை : ஸ்ரீமகாலட்சுமித் தாயார் (சித்திரப்படம் – திரு. பி. ரமேஷ்)

பின்னட்டை : ஸ்ரீவிநாயகப் பெருமான் (சித்திரப்படம் – திரு. பி. ரமேஷ்)


சிறப்பு ஆசிரியர் :
திரு. J. சியாமளா ராவ், ஐ.ஏ.எஸ்.
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.

வெளியீட்டாளர்-ஆசிரியர், பிரதான ஆசிரியர் (கூடுதல் பொறுப்பு) :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி., பி.ஜி.டிப்.இன் ஜே.எம்.சி.,

அச்சிடுபவர் :
திரு. R.V. விஜயகுமார், பி.ஏ., பி.இடி,
துணை செயலாட்சித் தலைவர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.

புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
“Sapthagiri”, 2nd Floor, T.T.D Press
Building, Tirupati - 517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360


நீங்கள் ஸப்தகிரி இதழை
www.tirumala.orgயில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri.helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்
-பிரதான ஆசிரியர்





# இயற்கையைப் பாதுகாக்கவே திருவிழாக்கள்!

விநாயகர் சதுர்த்தி என்பது மனித குலத்திற்குப் பல செய்திகளைத் தெரிவிக்கும் ஒரு பெரும் பண்டிகையாகும். இப்பண்டிகை இயற்கையின் அடிப்படையில் நமக்கு ஒரு தெளிவான செய்தியை அளிக்கின்றது. சில பண்டிகைகள் வீட்டில் மட்டுமே கொண்டாடப்படுகின்றன. ஆனால், விநாயகர் சதுர்த்தி மட்டுமே பொது இடங்களிலும் கொண்டாடப்படும் மிக முக்கியமான பண்டிகையாக விளங்குகின்றது.

விநாயக சதுர்த்தி விழா என்பது இயற்கையைப் பாதுகாத்திடவும், விவசாயம் செழித்திடவும் கொண்டாடப்படும் பெரும் திருவிழா என்று சொன்னால் அது மிகையன்று. விவசாயத்திற்கும் விநாயகருக்கும் நெருங்கியத் தொடர்பு உண்டு. விநாயகப் பெருமானை விவசாயத்தின் அடையாளமாகவும், விளைச்சலின் அடையாளமாகவும் கருதுகின்றனர். விநாயகர் சதுர்த்தி விழா மழைக் காலத்தின் துவக்கத்தில்தான் கொண்டாடப்படுகிறது. அறுவடைக்குப்பிறகு மீண்டும் பயிர் செய்ய இம்மாதத்தில்தான் விவசாயிகளும் விநாயகரை வழிபட்டு விளைச்சலைத் துவங்குவர். விநாயகரை வழிப்பட்ட பின்புதான் அறுவடை செய்வர்.

விநாயகரின் யானை முகம் இயற்கையையும், மானிட உடல் மனிதர்களையும் குறிக்கும். இது மனிதர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்தல் வேண்டும் என்பதற்கு ஒரு அடையாளமாகும். காடுகள் மனிதர்களுக்கு இயற்கை அளித்த பெரும் கொடையாகும். ஒரு காட்டையே உருவாக்கும் வல்லமை கொண்டது யானைகள். மேலும், விநாயகர் சதுர்த்தி விழா ஒருபுறம் வியாபார உலகிற்கும், மறுபுறம் இயற்கையின் பாதுகாப்பிற்கும் உபயோகப்படும் விதமாக நம் முன்னோர்கள் வழிவகுத்துச் சென்றுள்ளனர். விநாயக சதுர்த்தி மழைக்காலத்தில் கொண்டாடப்படுவதால் மழைநீர் ஏரி குளங்களிலும் குட்டைகளிலும் புகுந்து மண்ணை ஈரமாக்குகின்றன. அம்மண்ணைத் தோண்டி எடுத்து வந்து வீடுகள்தோறும், வீதிகள் தோறும் விநாயகர் வடிவங்களைச் செய்து வழிபடுவர். இதனால் ஏரிகளும் குட்டைகளும் தூர்வாரப்பட்டு நீர்நிலைகளில் தண்ணீர் அதிகளவில் அதிகரிக்கும். அதோடு விநாயகர் வழிபாட்டின்போது இலைகளையும் வழிபாட்டில் வைப்பர். இதனால் மரங்களிலும் புதிய இலைகள் துளிர்த்து மரங்களும் செழிப்பாக வளரும். மேலும் மரங்களும் புழு பூச்சிகளின் தாக்குதலிலிருந்து தப்பிக்கின்றன. மழைக் காலம் என்பதால் மரங்களும் நன்றாக வளர்ச்சியுறும் வாய்ப்பும் ஏற்படுகிறது.

சுமார் ஒன்பது நாட்கள் வரை பூஜிக்கப்பட்டு வரும் விநாயகரின் சிலைகள் அருகில் உள்ள ஏரிகளில் கரைக்கப்படுகின்றன. இதனால் ஏரிகளில் உள்ள மண்ணும் மறுசுழற்சி செய்யப்படுகின்றது. விநாயகப் பெருமானின் பூஜையில் வைக்கப்படும் இலைகள் ஏரிகளில் வீசுவதால் இலைகளிலிருந்து வரும் ரசங்களும் இயற்கையான முறையில் தண்ணீருக்கு சில ஔஷதங்களை வழங்குகின்றன. தண்ணீரில் கலந்துள்ள இலைகளின் ரசமானது தண்ணீரைத் தூய்மைப்படுத்துவதோடு விவசாயத்திற்குப் பயன்படும் தண்ணீருக்கு புதிய சக்தியை அளிக்கின்றன.


ஆனால், இன்றைய விநாயக சதுர்த்தி நாட்களில் மாறுபட்ட வானிலையே காணப்படுகின்றன. உயரமான விநாயகர் சிலைகளை வைப்பதற்காக மண்ணிற்குப் பதிலாக வானிலைக்கு தீங்கு விளைவிக்கும் பொருட்களை உபயோகிக்கின்றனர். அதேபோல் சிலைகள் அனைவரையும் ஈர்க்கும் விதமாக இருப்பதற்காக ஆபத்தை விளைவிக்கக்கூடிய இரசாயனப் பூச்சுக்களை உபயோகிக்கின்றனர். இவற்றை தண்ணீரில் கரைப்பதனால் நீர் மாசுபாடும், சுற்றுச் சூழல் மாசுபாடும் உண்டாகின்றன.

ஆதலால், இவற்றைத் தவிர்த்து சுற்றுப்புறச்சூழலை பாதுகாத்திடும் விதமாக நம் ஆலோசனைகள் இருத்தல் வேண்டும். இது மிகவும் உணர்திறன் வாய்ந்த விஷயமாதலால் முதலில் இம்மாற்றம் நமக்குள் ஏற்பட வேண்டும். விநாயகப்பெருமானின் பக்தர்கள் இயற்கைப் பாதுகாப்பிற்கு அரவணைப்பாக இருந்து பக்தியோடு பூஜைகள் செய்து அருள் பெறுதல் வேண்டும். திருவிழாக் காலங்களில் இயற்கையோடு இணைந்திடுவோம்! இயற்கையைப் பேணிக் காத்திடுவோம்!!

# வராஹ வைபவம்

திருமலை ஸ்வாமி புஷ்கரணியின் வடமேற்கு மூலையில் ஸ்ரீவேங்கடாசலபதி சன்னதிக்கு வடக்கே ஸ்ரீவராஹ ஸ்வாமி சன்னதி கொண்டுள்ளார். ஸ்ரீவேங்கடேஸ்வரர் சன்னதியை விடப் பழமையானது என்று நம்பப்படுகிறது. திருமலையை ஆதிவராஹ க்ஷேத்திரம் என்றும் குறிப்பிடுவதைப் பார்க்கிறோம். இரண்யாட்சன் வதத்திற்குப் பின்னர் பன்றி அவதாரத்தில் இங்குத் தங்கியிருந்ததாகச் சொல்லப்படுகிறது. அனைவரும் மூல மூர்த்திப் பெருமாளை தரிசிக்கும் முன்னர் வராஹ ஸ்வாமியைத் தரிசிக்க வேண்டும். பூஜை மற்றும் நைவேத்தியம் வராஹ ஸ்வாமிக்கே முதலில் நடைபெறுகிறது.

ஸ்ரீமந்நாராயணனின் அவதாரங்களைப் பார்த்தோமேயானால் வராஹ அவதாரம் "ஞானமூர்த்தி" என்றும் அறியப்படுகிறார். பூமியை மீட்டவர். இசை நாட்டியம் அறிந்த நாராயண தீர்த்தர் ஸ்ரீமத் பாகவதத்தை எல்லோருக்கும் போதித்து வந்தார். ஒருமுறை அவருக்குத் தீராத வயிற்றுவலி வரவே திருமலையில் பெருமாளை தரிசிக்கச் சென்றார். அங்கே, அவருக்கு ஒரு அசரீரி ஒன்று "திருவையாறுக்கு அருகில் பூபதிராஜபுரத்திற்குச் சென்றால் வயிற்று வலி தீரும்" எனத் தெரிவித்தது. அவரும் நடுக்காவிரி சென்று எந்தப் பக்கம் எப்படிச் செல்வது என்று தெரியாமல் தவித்தார்.



பின் அங்கேயே ஓய்வு எடுக்கும்போது மீண்டும் அசரீரி "ஒரு வெண்பன்றி காலை விடியலில் உன் முன் வந்து வழி காட்டும்" என அறிவித்தது. அவ்வாறே ஒரு வெண் பன்றியைக் கண்டு, அது செல்லும் திசையில் நடந்துக்கொண்டே இருந்தார். இறுதியாக ஒரு பெருமாள் கோயிலுக்குள் அந்தப் பன்றி தஞ்சமடைந்ததைப் பார்த்தார். அப்போதே அவருடைய தீராத வயிற்று வலியும் நீங்கிவிட்டது. அந்தப் பெருமாளை தரிசித்து, அந்தத் தலத்திலே தங்கி விட்டார். காலப்போக்கில் கிருஷ்ண லீலா தரங்கிணி நாடகத்தை அரங்கேற்றினார். "பூபதிராஜபுரம்" என்று அழைக்கப்பட்ட அக்கிராமம் "வரகூர்" என்று அழைக்கப்பட்டது.

திருமலையில் வராஹ அவதாரப் பெருமாளாக சேவை சாதித்து பன்றி வடிவில் பலருக்கு அனுக்கிரஹம் செய்துள்ளார். திருமலை, காஞ்சி, திருக்கோவிலூர், ஒப்பிலியப்பன் கோவில் போன்ற தலங்களில் நெடுமாலாகக் காட்சி தருபவர் ஸ்ரீமுஷ்ணத்தில் சிறிய மூர்த்தியாக அருள்கிறார். வராஹ அவதாரம் குறித்து வராஹ புராணம், வராஹ சரம சுலோகம், புராணங்கள், வேத குறிப்புகள் உள்ளன.

திருமங்கை ஆழ்வார் பெரிய திருமொழியில் *"மீனோடாமை கேழலரி குறளாய் முன்னு மிராமனாய்த் தானாய் பின்னு மிராம னாய்த் தாமோ தரனாய்க் கற்கியும் ஆனான்"* என தசாவதாரத்தைக் குறிப்பிட்டார். நாச்சியார் திருமொழியில் ஆண்டாள் *"பாசி தூர்த்துக் கிடந்த பார் மகட்குப் பண்டொரு நாள் மாசுடம்பில் நீர் வார மானம் இலாப் பன்றியாம்"* எனப் பசுமை படர்ந்து கிடந்த பூமிப் பிராட்டிக்காக அழுக்கேறிய உடலில் நீர் ஒழுக மானம் இல்லாத பன்றியாய் வடிவெடுத்தவர் ஒளியுடைய தேவர் திருவரங்கன் என வராஹ அவதாரத்தை விளக்கியுள்ளார்.

பொய்கை ஆழ்வார் முதல் திருவந்தாதியில் வராஹப் பெருமானைப் பற்றி ஆறு பாசுரங்கள் பாடியதில் அவரை வணங்காதவற்கு மோட்சம் இல்லை என்கிறார்.

இந்த ஊன உடம்பிற்கு இருள் நீக்கி ஞானம் தரக்கூடியவர் வராஹ ஞானபிரான் என்கிறார். இதையே ஆழ்வார்கள் பல இடங்களில் விரிவாகப் போற்றி எடுத்துரைத்தனர். வராஹப்பிரானை தொழாவிட்டால் வாழ்வு இல்லை என்றும், அவரின் பெருமையுடன் உருவ அமைப்பினையும் உபநிடதங்களில் உள்ளவாறு தெளிவுபடுத்துகிறார்கள். பெரிய வடிவில் உலகளந்தபோது பூமி அவர் கொம்பில் ஒட்டியிருந்ததாக வர்ணிக்கிறார்கள். பூதத்தாழ்வார் அழகிய மலர்களில் அழகிய வராஹ திருவுருவம் கொண்ட எம்பெருமான் திருவடிகளை வணங்குபவர்கள் என்றும் மகிழ்ச்சியுடன் இருப்பர் என்கிறார். பேயாழ்வார் உயிர்களை உத்தாரணம் செய்ய அவதாரம் எடுத்தார் என்றும், பூமிப் பிராட்டியின் திருமேனி ஆசையில் வராஹ வடிவு எடுத்து பூமியைக் காத்தார் என வர்ணிக்கிறார். திருமழிசை ஆழ்வார் *''நடந்த கால்கள் நொந்தவோ நடுங்க ஞாலம் ஏனமாய்''* பூமிதேவி தன்னைக் காப்பவர் காணாமல் இருந்தபோது பெரிய திவ்ய விக்ரஹமாக அவதரித்ததாகச் சொல்கிறார். திருவாய்மொழியில் நம்மாழ்வார் வராஹப் பெருமாள் அழகு தன் மனதில் நிற்கிறது என்றும், அதுவே பூமிதேவியையும் கவர்ந்தது எனவும் குறிப்பிடுகிறார்.

ஸ்ரீவிஷ்ணு சஹஸ்ரநாமத்தில் 987வது நாமம் "வைகான" என்பதில் பூமியைத் தோண்டி வராஹ அவதாரத்தில் அவதாரம் செய்பவன் என்றும், எல்லா துக்கங்களிலிருந்தும் விடுவிப்பவன் என்றும் பொருள்படும். "கான" என்பது தோண்டுதல் அல்லது பக்தர்களை எல்லாப் பிடியிலிருந்து விடுவிப்பவரைக் குறிக்கிறது. இது உடல், மனம், புத்தி ஆகியவற்றில் நமது தீய பற்றுதலிலிருந்து விடுதலை பெறுகிறது. திருமழிசை ஆழ்வார் திருச்சந்த விருத்தம் 96 வது பாசுரத்தில் அவரது எல்லையற்ற படைப்புகள், அறிவு, சக்தி மற்றும் பிற குணங்கள் மற்றும் எண்ணற்ற பக்தர்களின் பெருமைகளைப் பற்றிக் கூறுகிறார். ஏழு உலகங்களில் உள்ள அனைவராலும் பல ஆண்டுகளாக ஒன்றாக வணங்கப்படுகிறார் என்று அவர் கூறுகிறார். மீண்டும்

## ஆடிப்பெருக்கன்று காவிரிக்கு ஸ்ரீரங்கனின் சீர்

*ஸப்த ப்ராகார மத்யே ஸரஸிஜமுக்லோத்பாஸமாநே விமானே*
*காவேரீ மத்திய தேசே ம்ருதுபணி ராட்போகபர்யங்க பாகே*
*நித்ர முத்ராபிராமம் கடிநிகடசிர: பார்ச்வவிந்யஸ்த ஹஸ்தம்,*
*பத்மாதாத்ரீ கராப்யாம் பரிசிதசரணம் ரங்கராஜம் பஜேஹம்*

**என்னும் சுலோகத்தில் பராசர பட்டர் ஸ்ரீரங்கராதர் குறித்து கூறுகையில் *''காவேரீ மத்திய தேசே...''* என்பதிலிருந்து காவேரி தாய்க்கு ஸ்ரீரங்கநாதர் கொடுத்த முதலிடத்தை நாம் அறியலாம்.**

**ஆடிப்பெருக்கு அன்று அம்மா மண்டபத்தில் ஸ்ரீரங்கநாதர் எழுந்தருளுவார். அங்கு ஆஸ்தான பூஜைகள் நடைபெறும். காவேரித்தாய்க்கு வழங்கப்படுகின்ற மஞ்சள், குங்குமம், மலர்கள், புடவை, இரவிக்கை போன்றவற்றிற்கு வழிபாடு நடைபெறும். பின்னர் ரெங்கநாதர் தான் அணிந்து வந்த மாலையைக் கழற்றி, காவேரித் தாய்க்கு அன்பளிப்பாகக் கொடுப்பார். அதனை யானை மீது வைத்துக்கொண்டு யானைகளுடன் காவேரி ஆற்றங்கரைக்கு மங்கள வாத்தியங்கள் முழங்கிட, அர்ச்சகக் குழுவினர் காவேரித் தாய்க்கு பூஜை செய்து ஸ்ரீரங்கநாதர் அளித்த சீரினை சமர்ப்பிப்பர். அன்று ஆயிரக்கணக்கில் பெண்கள் காவேரித் தாய்க்கு பூஜைகள் செய்து தங்கள் மணவாழ்க்கை சிறப்புற்று விளங்கிட வேண்டிக் கொள்வர்.**



மீண்டும் பிறப்பதால் பாவங்கள், கவலைகள் மற்றும் துன்பங்கள் மட்டுமே ஏற்படும் என்பதால், இனி வரும் பிறவிகளில் இருந்து விடுபட ஆழ்வார் வேண்டுகிறார். *"வரம்பு இலாத பல் பிறப்பு அறுத்து வந்து நின் கழல் பொருந்தமாதிருந்த"* என்று பாசுரமிடுகின்றார். நம்மாழ்வார் திருவாய் மொழி 3.10.8 மற்றும் 9வது பாசுரங்களில் *"துக்கம் இல் ஞான சுடர் ஒளி மூர்த்தி"* எனக் கூறுகிறார்.

ஆழ்வார் எந்தத் துன்பமும் இன்றி மிகுந்த மகிழ்ச்சியுடன் இருக்கிறார் என்கிறார். ஒருவன் அவனைச் சரணடையும் போது அவன் எல்லா அதிசயங்களையும் செய்வதால், அவர்கள் எந்தக் கவலையிலிருந்தும் விடுபடுகிறார்கள்.

மேலும், அவரது அறிவு முற்றிலும் எந்த நோய்களிலிருந்தும் விடுபடும். எல்லா உயிர்களை யும் அவர் நடத்தும் விதம் அனைவரையும் எந்த துக்கங்களிலிருந்தும் விடுபடச் செய்கிறது. ஸ்ரீமன் நாராயணன், அடிக்கடி ஏற்படும் பிறப்பு இறப்புகளி லிருந்து நம்மை விடுவிப்பதற்காக நட்புடன் நிகர் உலகிற்குச் செல்ல விரும்பினார்.

வராஹ அவதாரத்தில் ஸ்ரீ வராஹ மூர்த்தி சம்சாரத்திலிருந்து தப்பிக்க அறிவுறுத்தினார். அவருடைய புகழைப் பாடுவதன் மூலம் சம்சாரத்தி லிருந்து தப்பிக்கலாம் என்கிறார். பாடலில் உள்ள ஒவ்வொரு எழுத்துக்கும், அவர் சொர்க்கத்தில் ஆயிரம் ஆண்டுகள் கொடுக்கிறார். ஜீவாத்மா சொர்க்கத்தில் இருக்கும் போதும், ஜீவாத்மா இன்பங்களோடு சேர்ந்து துதி பாடிக்கொண்டே இருக்கும். இறுதியாக ஜீவாத்மா ஸ்ரீ வைகுந்தத்தை அடைகிறது. இவ்வாறு வராஹப் பெருமான் புகழ் வராஹப் புராணத்திலும் காணப்படுகிறது.

வராஹ சரம சுலோகம் என்பது கடைசியாக பகவான் வராக அவதாரத்தில் கூறியதாகும். முன்னதாக மத்ஸ்ய, கூர்ம அவதாரத்தில் பேசாமல் பூமிப் பிராட்டியிடம் பேசினார். ஆதிவராஹ மூர்த்தியான பரமாத்மா பூமிப்பிராட்டியிடம் உரைத்த சரம சுலோகம் இதுதான். *"ஸ்த்திதே மநஸி ஸுஸ்வஸ்த்தே ஸரீரே ஸதி யோ நர தாதுஸாம்யே ஸ்த்திதே ஸ்மர்த்தா விச்வரூபஞ்ச மாமஜம் ததஸ்தம் ம்ரியமாணம் து காஷ்ட்ட பாஷாண ஸந்நிபம் அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்"* – மனதை அலைபாய விடாமல் நல்ல நிலையில் இருக்கின்ற போது, பலம், புஷ்டி, தேஜஸ் உள்ள போது, நாடித் துடிப்பும் சரியாக உள்ளபோது, புத்தி பேதமில்லாத போது பகவான் திருநாமத்தைச் சொல்பவர்கள் ரக்ஷிக்கப்படுவர். இப்படிப்பட்ட சரம சுலோக அடிப் படையாக நாம் வராஹப் பெருமானைத் துதிப்போம். வராஹப் பெருமானைத் தரிசித்து அருள் பெறுவோம்.

***– திரு. அ.ஜ. ரங்கராஜன், சென்னை.***

*திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி*

## திருமலைக்கு நடந்து செல்லும் பக்தர்களின் கவனத்திற்கு

- **60 வயதிற்கு மேற்பட்டோர், நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், ஆஸ்துமா, வலிப்பு, கீல்வாதம் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டோர் மலை ஏறுவதைத் தவிர்க்கவும்.**
- **இதயத்தில் ஸ்டென்ட் பொருத்தப்பட்டவர்களும், பருமனானவர்களும் மலை ஏறுவதைத் தவிர்க்கவும்.**
- **மலை ஏறும்போது ஏற்படுகின்ற மன அழுத்தம் மற்றும் மிக உயரத்தில் குறைவான ஆக்சிஜன் செறிவும் இதய பாதிப்பு மற்றும் ஆஸ்துமாவை மேலும் மோசமாக்கலாம்.**
- **நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட பக்தர்கள் தாங்கள் வழக்கமாக பயன்படுத்தும் மருந்து களைத் தவறாமல் தங்களுடன் கொண்டு வருதல் வேண்டும்.**
- **மருத்துவ உதவி தேவைப்படும் பட்சத்தில் அலிபிரி நடைபாதையில் உள்ள படி எண். 1500 காலி கோபுரம் மற்றும் இராமானுஜர் சன்னதி அருகில் உள்ள மருத்துவ மையங்களைத் தொடர்பு கொள்ளவும்.**
- **திருமலையில் 24/7 மணி நேரமும் அஸ்வினி மருத்துவமனை மற்றும் முதலுதவி மையங்கள் செயல்படுகின்றன.**
- **நாள்பட்ட சிறுநீரக பாதிப்பு உள்ளவர்களுக்கு அவசர டயாலிசிஸ் மருத்துவ சிகிச்சைக்கு திருப்பதி ஸ்விம்ஸ் மருத்துவமனையும் உள்ளது.**

# மலையப்பன்தான் கண்ணன் கண்ணன்தான் மலையப்பன்

பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963

*கண்ணன் பிறந்தான் எங்கள் கண்ணன் பிறந்தான்*
*புதுக் கவிதைகள் பிறந்ததம்மா*
*மன்னன் பிறந்தான் எங்கள் மன்னன் பிறந்தான்*
*மனக் கவலைகள் மறைந்ததம்மா*

என்ற பாடல் எல்லோருக்கும் தெரியும். கண்ணன் பிறந்த தினம் ஸ்ரீஜெயந்தி, கிருஷ்ண ஜெயந்தி என்றெல்லாம் பல பெயர்களில் கொண்டாடப்படுகிறது. கண்ணனை நினைத்தாலும் வணங்கினாலும், ஏன் ஒரே ஒரு முறை அவன் திருவுருவத்தைப் பார்த்தாலும் நிம்மதி தன்னால் வந்துவிடும்.

அவன் கதைகளைக் கேட்டால் இன்பம் கிடைக்கும். மங்கலங்கள் தன்னால் சேரும். கண்ணனின் அற்புதக் கருணை அது. நம்மாழ்வார் *''கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையீர், எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே''* என்றார்.

கண்ணன் பிறந்த உடன் எத்தனையோ ஆச்சரியங்கள் நடந்தன. வானம் ஒளி பெற்று இருந்தது. பல நட்சத்திரங்கள் மிகவும் பிரகாசமாக ஜொலித்தன. உலகெங்கும் உன்னதமான சகுனங்கள் தோன்றின. தேவகி வசுதேவருடைய கால் விலங்குகள் தானாகவே தெறித்து விழுந்தன. பெற்றோர்களுடைய வினைக் கட்டுக்களை ஒரு நல்ல பிள்ளை பிறந்தால் அழித்துவிடும் என்பதற்கு கண்ணனுடைய அவதாரம் உதாரணம்.

ஆனால் சாது சனங்களைத் துன்புறுத்தும் கம்சன், சிசுபாலன் முதலியவர்களுடைய நிலை வேறு மாதிரியாக இருந்ததாம். அவர்களுடைய கிரீடங்கள் எல்லாம் கீழே விழுந்து நொறுங்கியது. திடீரென்று தங்களுடைய வலிமை குறைவதாக உணர்ந்தார்களாம். அவர்கள் வீட்டுப் பெண்களின் காது குழைகள் கீழே அறுந்து விழுந்ததாம். அதாவது அவர்கள் கணவன்மார்களுக்கு காலன் என கண்ணன் பிறந்து விட்டான் என்பதை அறிவிக்கும் தீய சகுனங்கள் தோன்றியதாம்.

திருமங்கையாழ்வார் பாடுகிறார்.

*மாற்றரசர் மணி முடியும் திறலும் தேசும்*
*மற்றவர்தம் காதலிமார் குழையும் தந்தை*
*கால் தளையும் உடன் கழல வந்து தோன்றிக்*
*கத நாகம் காத்தளித்த கண்ணர் கண்டீர்*

இப்படிப் பாடிய திருமங்கையாழ்வார், கண்ணனுடைய அவதார விசேஷங்களையும் குறிப்பாக அவனுடைய லீலைகளையும் திருவேங்கடவனோடு இணைத்துப் பல பாசுரங்கள் பாடி இருக்கிறார். அதில் மலையப்ப ஸ்வாமி மீது மங்களாசாசனம் செய்தருளிய ஒரு பாசுரத்தை இந்த கிருஷ்ண ஜெயந்தி மாதத்திலே காண்போம்.



*நின்ற மாமருதிற்றுவீழ நடந்த நின்மலன்நேமியான்*
*என்றும் வானவர்கைதொழு மிணைத்தாமரை*
*யடியெம்பிரான்*
*கன்றிமாரி பொழிந்திடக் கடி தாநிரைக் கிடர்நீக்குவான்*
*சென்று குன்றமெடுத்தவன் திருவேங்கடமடை நெஞ்சமே!*

சயனித்தருளும் படியையும், நின்றருளும் படியையும் கீழ்ப்பாட்டில் அநுஸந்தித்தார்; நடந்தருளும்படியை இப்பாட்டில் அநுஸந்திக்கிறார்.

### வேங்கடவன் கண்ணன்தானே

கலியுகத்துக்கு முன் துவாபரயுகம். கண்ணன் அவதாரகாலம். அதற்கு தோள் தீண்டியாய் இருப்பது கலியுகம். எனவே கண்ணனையும் கலியுகத்தில் கண் கண்ட தெய்வமாய் விளங்கும் மலையப்பனையும் எளிதில் இணைக்கலாம்.

இந்தப் பாசுரத்தில் ஸ்ரீமத்பாகவதத்தில் ஸ்ரீகிருஷ்ணனின் லீலையாகச் சொல்லப்பட்ட சில சம்பவங்களை இணைத்துப் பாடி வேங்கடவனை கண்ணனாக மங்களாசாசனம் செய்கின்றார். கிருஷ்ண ஜெயந்தி கொண்டாடும் இம்மாதத்தில் இந்தப் பாசுரத்தின் அர்த்த விசேஷங்களில் கொஞ்சம் ஈடுபடலாம்.

கண்ணன் குழந்தைப் பருவத்தில் எத்தனையோ லீலைகள் செய்தான். அந்த லீலைகள் சில நேரங்களில் ஆயர்களுக்குச் சில தொல்லைகளையும் தந்தது. அதனால் அவர்கள் "என்ன குழந்தையை வளர்கிறாய்?" என்று யசோதையிடம் புகார் செய்தனர். யசோதை பல அறிவுரைகளைச் சொல்லிப் பார்த்தாள். சின்னக் குழந்தைதானே, எப்படிக் கேட்கும்?

இதனால் கோபித்த யசோதை, கிருஷ்ணனை ஒரு தாம்பு கயிற்றினால் கட்டி, அவன் எங்கேயும் சென்று விடக்கூடாது என்பதற்காக பக்கத்தில் இருந்த உரலில் பிணித்துவிட, கண்ணன் அந்த உரலையும் சேர்த்து இழுத்துக்கொண்டு தவழ்ந்து சென்றான். அங்கிருந்த இரட்டை மருதமரத்தின்

## கண்ணனும் மலையப்ப ஸ்வாமிதான்

**கண்ணனும் மலையப்ப ஸ்வாமிதான்! ஆம். அவதார காலத்தில் ஆயர்கள் இடர் தீர்ப்பதற்காக தன்னுடைய விரலால் கோவர்தன மலையைத் தூக்கிக் கொண்டு மலையப்ப ஸ்வாமியாகத்தான் காட்சி தந்தான். இந்த நிகழ்வைக் கொண்டாடாத ஆழ்வார்களே கிடையாது.**

*''குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி''* **என்று எளியவர்களைக் காக்கின்ற அவனுடைய விசேஷமான குணங்களுக்கு மங்களாசாசனம் செய்கின்றாள் ஆண்டாள்.**

*''குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்''* **என்று திருவேங்கடப் பாசுரத்தில் கண்ணன்தான் மலையப்பன், மலையப்பன்தான் கண்ணன் என்ற தத்துவத்தை நம்மாழ்வார் காட்டுகின்றார்.**

**ஆநிரைக்கு அன்று இடர் தீர்த்தவன் என்று பல இடங்களில் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்கின்றார். துவாபர யுகத்தில் மலையை அவன் தூக்கினான். கலியுகத்தில் ஏழு மலைகளும் சேர்ந்து சப்தகிரி நாதனாக தன்னைத் தூக்கும் படியாக நியமித்தான்.**

**எனவே கண்ணன்தான் மலையப்பன். மலையப்பன்தான் கண்ணன்.**



நடுவே எழுந்தருளிய பொழுது அவ்வுரல் குறுக்காய் நின்று இழுத்ததால் அம்மரங்களிரண்டும் முறிந்து விழுந்தன .

முன் நாரதர் சாபத்தால் மருத மரங்களாய்க் கிடந்த நளகூபரன், மணிக்ரீவன் என்னும் குபேர புத்திரர் இருவரும் சாபந்தீர்ந்து சென்றனர். ஏன் இவர்களுக்கு இந்தச் சாபம் வந்தது என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்?

இந்த குபேர புத்திரர்கள் முன்பு ஒரு காலத்தில் பல அப்ஸரஸ் ஸ்த்ரீகளுடனே ஆடையில்லாமல் நீராடிக் கொண்டிருக்கையில் நாரத மாமுனிவர் அங்கு எழுந்தருள, மங்கையர் அனைவரும் நாணங் கொண்டு ஆடையெடுத்து உடுத்து நீங்க, இந்த மைந்தர் மாத்திரம், மதுபான மயக்கத்தினால் ஆடையும் வெட்கமும் இல்லாமல் இருக்க, நாரதர் கோபங் கொண்டு மரங்கள் போலிருக்கிற நீங்கள் மரங்களாவீர் என்று சாபம் கொடுத்தார். உடனே அவர்கள் வணங்கி வேண்டிக் கொண்டதற்கு இரங்கி சாப விமோசனம் சொன்னார்.

"திருமால் கண்ணனாக அவதாரம் எடுத்து உங்களருகே நெருங்கும் சமயத்தில் இவ்வடிவம் ஒழிந்து முன்னைய வடிவம் பெற்று மீள்வீர்" என்று சாபவிடை கூறிப்போனார்.

## ஸ்ரீகாயத்ரீ வழிபாடு

**"காயத்ரி ஸர்வ வேதாநாம் மாதா" என்று (ஸ்ரீகாயத்ரி மந்திரமே எல்லா வேத மந்திரங்களுக்கும் தாய்) கூர்ம புராணம் கூறுகிறது.**

**உபநயனம் செய்து கொண்டவர்கள் வருடத்திற்கு ஒருமுறை பூணூல் மாற்றுதல் என்னும் விழாவாகச் செய்வர். ஹோமம் வளர்த்து பூணூலுக்கு பூஜைகள் செய்த பின் ஆசார்யர் மந்திரம் சொல்ல சொல்ல பூணூலை மாற்றிக்கொள்வர். இந்த நிகழ்வை ஆவணி அவிட்டம் என்றும் கூறுவர். ஒரு சிலர் பௌர்ணமி அன்றும் செய்து கொள்வர்.**



**அதற்கு அடுத்த நாள் காயத்ரி ஜபம் என்ற விழா நடைபெறும். வேதத்தின் தலைவியான ஸ்ரீகாயத்ரி தாயாரை நினைத்து செய்யும் பூஜை. அன்று 1008 முறை காயத்ரி மந்திரத்தைத் துதிப்பது குறிப்பிடத்தக்கது.**

**காயத்ரி மந்திரம் என்பது புனிதமானது. "பரம்பொருளே நம் புத்தியை ஒளிரச் செய்பவர்" என்றும் கொள்ளலாம். எவர் ஒருவர் இந்த நாமத்தைத் துதிக்கிறாரோ அவரை உன்னதமான நிலைக்குக் கொண்டு செல்வாள் என்பது நிச்சயம்.**

**இந்த நாமத்தைத் துதிப்பதினால் சூரியனின் அருளைக் கூடப் பெறலாம். ஐந்து திருவதனங்கள், பத்து திருக்கரங்களில் மும்மூர்த்திகளின் ஆயுதங்களை ஏந்தி தாமரை மலரில் வீற்றிருக்கும் அன்னை காயத்ரியை மனதார வழிபட்டு வாழ்வில் ஆயகலைகள் அனைத்தையும் நம் வசமாக்குவோம்.**

*''பொய்ம்மாய மருதான வசுரரை''* என்றும் பெரியாழ்வாருளிச் செய்திருத்தலால் சாபத்தினால் மரங்களான இவற்றில் கம்ஸனால் ஏவப்பட்ட இரண்டு அஸுரர்களும் ஆவேசித்துக் கிடந்தனர் என்று கொள்ளல் வேண்டும்.


**குன்றமெடுத்த வரலாறு வருமாறு**

கண்ணபிரானுடைய அதிமாநுஷ லீலைகளைக் கண்டு ஆயர்களனைவரும் இவனே நம் குலக்கொழுந்து; இவன் கட்டளைப்படியே நாம் நடக்க வேண்டும் என்று நிச்சயித்திருந்தனர்; இங்ஙனமிருக்கையில் சரத்காலம் வந்தது; அப்போது இடையர்கள் வருடம்தோறும் நடத்துவது போல் வழக்கப்படி இந்திரனுக்குப் பூஜை செய்யச் சோறும் தயிரும் நெய்யும் காய்கறிகளும் சேகரிப்பதைக் கண்டான் கிருஷ்ணன்.

பெரியோர்களே! நாமும் நம்முடைய பசுக்களும் எதனால் ஜீவிக்கிறோமோ அதற்கே பூஜை செய்வது முறை. இக்கோவர்த்தநகிரியே பசுக்களுக்குப் புல்லுந் தண்ணீருங் கொடுத்துக் காப்பாற்றுகின்றது; ஆகையால் நீங்கள் இப்பூசனை அனைத்தையும் இம்மலைக்கே இடுங்கள் என்றான். இடையர்கள் இதைக் கேட்டு அங்ஙனமே செய்ய, கண்ணபிரான் தானே ஒரு தேவதா ரூபம் கொண்டு அவற்றை முற்றும் அமுது செய்தான்.

இந்திரன் மிக்க கோபத்தோடு புஷ்கலாவர்த்தம் முதலிய பல மேகங்களை ஏவி, பசுக்களுக்கும் இடையர்க்கும் இடைச்சியர்க்கும் தீங்கு தரும்படி கல்மழையை ஏழு நாள் இடைவிடாது பெய்வித்தான். கண்ணபிரான் கோவர்த்தன மலையை எடுத்துக் குடையாகப் பிடித்து மழையைத் தடுத்து எல்லாவுயிர்களையுங் காத்து அருளினன். மருத மரங்களைச் சாய்த்து, அதிலே இருந்த குபேர புத்திரர்களுக்குச் சாபம் கொடுத்ததோடு அசுரர்களையும் அழித்தவன் கண்ணன். அதைப் போலவே மலையைக் குடையாக எடுத்து ஆயர்களையும் ஆநிரைகளையும் காத்தவன் கண்ணன். அந்தக் கண்ணன்தான் அன்று மலையை எடுத்தான். இன்று அந்த மலைமீது நின்றான்.

அந்த திருவேங்கடவன்தான் கண்ணன் என்று இந்தப் பாசுரத்தில் காட்டி அருளினார்.



## ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய கேள்வி பதில்

44. திருவாய்மொழி திவ்ய ப்ரபந்தத்தில் எந்த பாசுர விஷயத்தில் ஸ்வாமி சடகோபர் கண்ணபிரானின் திவ்ய லீலைகளை நினைத்து ஆறுமாதம் மோகித்தார்
பத்துடை அடியவர்க்கு எளியவன் (1-3-1)
பிறந்தவாறும் வளர்ந்தவாறும் (5-10-11)
கங்குலும் பகலும் (7-2-1)

45. மதுரகவியாழ்வார் அவதரித்த திருவவதார ஸ்தலம், திருநக்ஷத்ரம் யாவை?
திருக்கோளூர் - சித்திரை மாதம் - சித்திரை திருநக்ஷத்ரம்.

46. பகவத் ராமாநுஜர் பக்திரூபாபந்த ஞானத்தை அநுக்ரஹிக்க வேணும் என்று எந்த திவ்ய தேசப் பெருமானை ப்ரார்த்தித்து ஸ்ரீபாஷ்யத்துக்கு மங்களாசாசன ச்லோகம் அநுக்ரஹித்தார்?
திருவேங்கடமுடையான்.

47. ஆனி மாதம் திருமூலம் திருநக்ஷத்ரத்தின் தனித்தன்மை என்ன?
"ஸ்ரீசைலேச தயா பாத்ரம்" அவதார நாள்

48. ராமாநுஜ அவயவவிபூதி க்ரந்தத்தை அநுசரித்து, யதிராஜரின் திவ்ய மங்கள திருமேனியில் சிரஸ், வக்ஷஸ்தலம், ஸ்ரீபாதம் ஆகிய ஸ்தானங்களில் இருக்கும் ஆழ்வார் ஆசார்யர்கள் யார்?
சடகோபர், யாமுனாசார்யர், பிள்ளைலோகாசார்யர்.

49. மோர் முன்னார் ஐயன் (முதலில் மோர் சாதம் சாப்பிடுபவர்) என்று அழைக்கப்படும் ஸ்ரீமத் வரவர முனிகளின் சிஷ்யர் யார்?
பரவஸ்து பட்டர்பிரான் ஜீயர்

**- தெலுங்கில் : கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ.வே.நடாதூர் பாஷ்யாசார்ய ஸ்வாமி, ஸ்ரீபெரும்பூதூர்.**
**தமிழாக்கம் : திருமதி குமுதா வரதராஜன், சென்னை.**

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

**பதவுரை :**

*கடித* – சேர்ந்த, *பாப*–பாவங்களானது. *அபார*–எல்லையற்றதான, *துர்பட* – துஷ்டர்களுடைய, *படல* – ஸமூஹத்தையுடைய, *துர்கட* – எண்ணமுடியாத (நம்முடைய முயற்சியாலே இயலாததான), *நிகந* – அழிவுக்கு, *காரண* – காரணமானவனே! (கேவலம் க்ருபையினாலேயே எல்லாப் பாவங்களை அழிப்பவனே),

*ரணதரா* – யுத்த பூமியினுடைய, *ஆர*–சுற்றுப் புறத்தில், *ஆராத்* – தூரத்திலிருந்து, *பலாயன* – சத்ருவின் ஓட்டத்தால், *நிஜ* – தன்னுடைய, *நிதர்சித* – நிரூபிக்கப்பட்ட, *பஹுபல* – மிகுந்த வலிமைக்கு, *அயந*– நிலையானவனே, (இது கரதூஷணன் முதலிய ராக்ஷஸர்களின் வதையின் வெளிப்படை) *தரவா* – பெருமைமிக்க சங்கான பாஞ்சஜந்யத்தாலே, *ஆர* – சத்ரு ஸம்பந்தமான (துர்யோதனுடைய), *ஆராவ* – கோலாகலத்தையுடைய, நாசன – அழிவை (ச் செய்பவனே), *மதுவிநாசந* – மது என்ற ராக்ஷஸனை (அழித்தவனே), *மம* – என்னுடைய, *மநோதந* – உள்ளத்தில் செல்வத்தைப்



# உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம்

**– டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன், திருப்பதி, 99855 99669.**

போன்றவனே, *நிபுலயாய* – சத்ருவின் அழிவிற்காக, *ஆயாஹி* – வருவாய், *ந:* – எங்களை, *பாஹி* – காப்பாய், *இதம்* – இதை (அநிஷ்ட நிவ்ருத்தி, இஷ்டப்ராப்தியை), *அரம்* – விரைவாக, *மம*– எனக்கு, *கலய* – உண்டாக்கு, *பாவந*– மனத்தூய்மையை அளிப்பவனே! *தவ*–உன்னுடைய, *அதிசுபா* – மிகுந்த மங்களகரமான, *ஸா* – அந்த (குளிர்ச்சி, மென்மை, தூய்மை முதலிய குணச் சிறப்புடையவனாய்).

*ஸாரத்ருக் ததி:* – ஸாரத்தன்மையான கடாக்ஷ பரம்பரை, *ஸுதரஸா* – மிக வேகமாக, *மயி* – என்னிடம், *நிபதாத்*–படட்டும், *அயி வ்ருஷகிரீச* – ஓ! வ்ருஷ கிரிநாதனே!, *பவாந்* – நீ, *மயி* – என்னிடம், *வ்ருஷகிரௌ அபி* – வேங்கட மலையிலும், *ஸந்ததம்* – எப்போதும், *ஸஹரம:* – லக்ஷ்மீ தேவியோடு சேர்ந்தவனாய், *மோ மோத்து* – மிகுந்த மகிழ்ச்சியுடையவனாய் ஆகுக! *மம மந:* – என்னுடைய மனமானது, *ப்ரதிதிநம்* – ஒவ்வொரு நாளும், *உபேக்ஷித தத பரம்* – அதைவிட வேறான அதனை விருப்பமற்றதாய், (முன்பு தெரிவித்தபடி லக்ஷ்மீ தேவியோடு சேர்ந்து என்னிடம் வசிக்கும் நீ என்ற விஷயத்தை விட வேறான லௌகீக விஷயத்தில் விருப்பமற்றதாய்), *த்வயி* – உன்னிடம், *நம்நமயதே* – பக்தியோடு அவ்வப்பொழுது வணங்கிக் கொண்டிருக்கிறது. *ஸததம்* – எப்போதும், *உஜ்ஜ்வல* – பிரகாசிப்பவனே! *வ்ருஷகிரீச்வர* – வேங்கடமலை பிரபுவே! *தத்* – அதனால், *அரி* – சத்ருவான, *பாப* – பாவங்களையுடைய, *அபாஸநம்* – அழிக்க, குரு, செய்வாய்.

*இன்னும் ஜ்வலிக்கும்...*



# கல்வியும் செல்வமும் பெருக பரிமுகன் வழிபாடு

திரு.த. புருஷோத்தமன், சென்னை.

தூய மெய்ஞான வடிவமும், ஸ்படிகம் போன்ற தூய்மையானவரும், கல்வி அறிவிற்கு ஆதாரம் ஆனவருமாகிய ஹயக்ரீவரை மனதால் வணங்குகிறேன் என்று வேதாந்த தேசிகர் ஹயக்ரீவரைப் போற்றி உள்ளார்.

'ஹய' என்றால் 'குதிரை' என்றும், 'க்ரீவா' என்றால் 'கழுத்து' என்றும் பொருள். 'குதிரை முகம் உடையவர்' என்பது வடமொழியில் பொருள். ஹயக்ரீவர் என்பதைத் தமிழில் 'பரிமுகன்' எனக் குறிப்பிடுவர். 'பரி' என்றால் குதிரை. அதாவது குதிரை முகம் உடையவர்.

ஒருவருக்கு கல்விச் செல்வத்தை வழங்க வழங்க நமக்கு ஞானமும் கல்வியும் மேன் மேலும் அதிகரிக்கும். நமது வாழ்வின் இறுதிக் காலம் வரை உடன் வரக்கூடியது கல்விச் செல்வமாகும். அத்தகைய கல்விக்கு அதிபதி யான சரஸ்வதியை நவராத்திரி திருநாளில் கடைசி மூன்று நாள்கள் சரஸ்வதி பூஜை எனக் காலம் காலமாக வணங்கி வருகிறோம். அத்தகைய மேன்மையான சரஸ்வதி தேவியின் குருவாக விளங்குபவர்தான் ஹயக்ரீவர்.

*படிக நிறமும் பவளச் செவ்வாயும்*
*கடிகமழ் பூந்தாமரைபோற் கையும் -*
*துடியிடையும்*
*அல்லும் பகலும் அனவரதமும் துதித்தால்*
*கல்லும் சொல்லாதோ கவி*

எனக் கம்பர் சரஸ்வதியைப் போற்றித் தன் சரஸ்வதி அந்தாதியில் குறிப்பிடுகிறார். கம்பர் தனது தெய்வமாக வணங்கிய கலைமகளான சரஸ்வதியின் குருவாக விளங்குபவர்தான் ஹயக்ரீவர்.

ஒருவருக்கு நல்ல குணம், தலை சிறந்த வாக்குத் தன்மை, கூர்மையான அறிவு ஆகியவை வேண்டுமா னால் ஹயக்ரீவரை மனதார வணங்க வேண்டும்.

கல்விச்செல்வம் இருக்கும் இடத்தில் பொருள் செல்வம் இருக்காது என்று கூறுவார்கள். பொருள் செல்வம் இருக்கும் இடத்தில் கல்விச்செல்வம் இருக்காது என்று கூறுவார்கள். ஆனால் கல்விச் செல்வத்தையும் பொருள் செல்வத்தையும் தனது பக்தர்களுக்கு ஒரு சேர வழங்குபவர்தான் ஹயக்ரீவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அறியாமை என்னும் இருளில் இருந்து ஞானம் என்னும் ஒளியை நோக்கி அழைத்துச் செல்லும் ஞான ஆசிரியராக ஹயக்ரீவர் விளங்குகிறார். கல்விச் செல்வத்தையும் பொருள் செல்வத்தையும் வழங்கும் விதமாக சில தலங்களில் தனது மடியில் லட்சுமிதேவி யுடன் அருள் புரிகிறார். இவ்வாறு தனது மடியில் மகாலட்சுமியை அமர்த்திக் கொண்டதால் "லட்சுமி ஹயக்ரீவர்" என்ற திருநாமத்துடன் ஹயக்ரீவர் அழைக்கப்படுகிறார்.

கல்வியிலும், இசை, நடனம் போன்ற கலைகளி லும் சிறந்து விளங்குவதற்கு ஞானத்தின் இருப்பிட மாக விளங்கும் ஹயக்ரீவரை வணங்க வேண்டும். படிப்பில் சற்று மந்தமாக இருப்பவர்கள், நினைவு ஆற்றல் குறைவாக இருப்பவர்கள், பேச்சுத் திறன் குறைபாடு உள்ளவர்கள் ஹயக்ரீவரை வணங்கினால் அக்குறைகள் அனைத்தும் படிப்படியாக நீங்கும்.

சரளமான பேச்சாற்றல் அமைய ஹயக்ரீவருக்கு தேனை நிவேதனமாகச் சமர்ப்பித்து அந்தப் பிரசாதத்தை தினமும் நாக்கில் தடவி வந்தால் சிறந்த பேச்சாற்றல் வாய்க்கப்பெறும் என்றும் பல்வேறு புராணங்கள் கூறுகின்றன. சங்கு, சக்கரம், அக்ஷர மாலை மற்றும் ஸ்வாக்ய முத்திரை காண்பித்து அருள்பாலிக்கிறார்.

சில சமயம் வேதங்களை கையில் வைத்துக் கொண்டும் காட்சி தருகிறார். வெண்மை நிறத்தில் காணப்படுகிறார். வெண்மை நிறம் தூய்மை மற்றும் ஞானத்தைக் குறிக்கிறது.

நவராத்திரிப் பண்டிகையின் போது ஒன்பதாவது நாள் மிகச் சிறப்பாக ஹயக்ரீவர் பெருமானைப் போற்றிக் கொண்டாடுவார்கள். எல்லா திருவோண தினமும் ஹயக்ரீவருக்குச் சிறப்பானது ஆகும்.

## பாரம்பரியமான உடைகளை அணிவோம்! திருமலையின் புனிதத்தைக் காப்போம்!!

**இந்து சனாதன முறைப்படி எந்த தெய்வ நிகழ்ச்சிகளிலும் நாம் பாரம்பரியமான உடைகளை அணிதல் வேண்டும். குறிப்பாக ஆலயங்களுக்குச் செல்லும்போது நாம் நம் பண்பாட்டின்படி பாரம்பரியமான ஆடைகளையே உடுத்திச் செல்லுதல் வேண்டும். அவ்வகையில் திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களை நம் இந்து கலாசாரத்தின்படி பாரம்பரியமான ஆடைகளையே அணிந்து வர வலியுறுத்துகின்றது.**



**ஆண்கள் வேஷ்டி, மேல்துண்டு, சட்டை, குர்தா, பைஜாமா போன்ற வற்றை அணிதல் வேண்டும். பெண்கள் புடவை, இரவிக்கை, துப்பட்டாவுடன் கூடிய சுடிதார், சிறுமிகள் பாவாடை சட்டை போன்றவற்றையே அணிந்து வருதல் வேண்டும்.**

**முக்கியமாக ஆர்ஜித சேவை, சிறப்பு நுழைவு தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் கட்டாயம் இம்முறையினைக் கடைபிடிக்க வேண்டும். அவர்கள் குடும்ப வழக்கப்படி நெற்றியில் திலகமும் அணிதல் வேண்டும்.**

### அவதார நோக்கம்

படைக்கும் தெய்வமாக விளங்குபவர் பிரம்ம தேவன். அவரிடமிருந்து வேதங்களை மது மற்றும் கைடபர் என்ற இரு அசுரர்கள் பறித்துக் கொண்டனர். அந்த வேதங்களை பாதாள உலகத்திற்கு எடுத்துச் சென்று ஒளித்து வைத்து விட்டனர்.

வேதங்களைப் பறிகொடுத்த பிரம்மதேவர் செய்வதறியாது திகைத்தார். படைக்கும் தொழிலைச் செய்ய முடியாமல் தவித்தார். விஷ்ணு பகவானிடம் சென்று தன்னுடைய சிரமத்தை முறையிட்டார். விஷ்ணு பகவான் ஹயக்ரீவராய் உருவெடுத்து மது, கைடபர்களை வெற்றிகொண்டு வேதங்களை பாதாள உலகில் இருந்து மீட்டு பிரம்மாவிடம் ஒப்படைத்தார். பிரம்மாவும் மிகவும் மனம் மகிழ்ந்து விஷ்ணு பகவானை வணங்கி படைப்புத் தொழிலை மீண்டும் துவங்கினார்.

பல்வேறு திருத்தலங்களில் ஹயக்ரீவர் அருள்பாலித்து வருகிறார். கடலூர் மாவட்டம் திருவஹீந்திரபுரத்தில் உள்ள தேவநாத சுவாமி திருக்கோயிலில் ஹயக்ரீவர் எழுந்தருளியுள்ளார். வேதாந்த தேசிகர் இத்திருத்தலத்தில் கருட மந்திரத்தை ஜெபித்தார். அப்போது கருடாழ்வார் வேதாந்த தேசிகருக்கு ஹயக்ரீவ மந்திரத்தை உபதேசித்தார்.

இந்த ஹயக்ரீவ மந்திரத்தை ஜெபித்து ஹயக்ரீவப் பெருமானின் அருளைப் பெற்றார். வேதாந்த தேசிகருக்கு திருக்காட்சி தந்த ஹயக்ரீவர் அவருக்கு சகல கலைகளையும் கைவரச் செய்தார். ஹயக்ரீவரைப் போற்றும் வகையில் “ஹயக்ரீவ ஸ்தோத்திரம்” என்ற அரிய நூலை வேதாந்த தேசிகர் படைத்துள்ளார். ஹயக்ரீவப் பெருமானின் பெருமைகளை இந்த ஸ்தோத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். வேதாந்த தேசிகருக்கு ஹயக்ரீவர் அபார ஞானத்தை வழங்கினார்.

வித்தைகளுக்கு அதிபதியான ஹயக்ரீவரை குருவுக்குரிய வியாழக்கிழமை தினங்களில் ஆராதிப்பது விசேஷமானது.

நோட்டுகள், புத்தகங்கள், எழுதுகோல் ஆகியவற்றை ஹயக்ரீவர் சன்னிதியில்

திருப்பதியில் அலிபிரி பாதாள மண்டபம் அருகில் “ஸப்த கோ” பிரதக்ஷிணை மந்திரம் அமைந்துள்ளது. தி.தி.தே. பசுக்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது அனைவரும் அறிந்ததே.

ஏழு மலைகளின் அடையாளமாக ஏழு பசுக்கள் அவற்றின் கன்றுகள், வேணு கோபால ஸ்வாமி விக்ரஹம், “கோ” பூஜை, “கோ” தரிசனம் குறிப்பாக ஸ்ரீவேங்கடேஸ்வரா ஸப்த கோ பிரதக்ஷிணை மந்திரத்தில் நிறுவப்பட்டுள்ளன.

தேவர்கள் பாற்கடலை கடைந்தபோது அமிர்தத்துடன் கல்ப விருக்ஷம், காமதேனு, மகாலட்சுமியும் வெளிப்பட்டனர். காமதேனுவின் சந்ததியே பசுக்களாகும். இவ்வுலகில் காமதேனுவின் மூலமாகத்தான் கால்நடை இனமே தோன்றியதாகப் புராணங்கள் கூறுகின்றன. இந்த கோ பிரதக்ஷிணை மந்திரத்தை தரிசித்தால் கிரஹ சாந்தி கிட்டும். பக்தர்கள் தாங்கள் தேர்ந்தெடுக்கும் பசுக்களின் எடைக்கேற்ப துலாபார சேவை மூலமாக பணம், உணவுப்பொருட்கள், மாட்டுத் தீவனங்கள் தானம் செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஸப்த கோசாலையில் கோவிந்தனைத் தரிசித்து, கோபிரதக்ஷிணம் செய்த பின்னர் மலை ஏறத்தொடங்கலாம்.






# திருமலையில் ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவர்



திருவேங்கடவன் கொலுவீற்றிருக்கும் திருமலையில் ஸ்வாமி புஷ்கரணி கரையில் வராஹ ஸ்வாமி ஆலயத்தின் வடக்குத் திசையில் மாத்ரு ஸ்ரீ வெங்கமாம்பா அன்னதானக் கூடம் அருகில் ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவர் ஸ்வாமி ஆலயம் அமைந்து உள்ளது. இந்த ஆலயத்தில் லக்ஷ்மி ஹயக்ரீவருக்கு தினமும் நித்ய பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

தெலுங்கு சிராவண பௌர்ணமியன்று சிறப்பான முறையில் வழிபாடுகள் நடைபெறுகின்றன. அன்று அக்ஷராப்யாஸம் என்று முதன் முதலில் குழந்தை களுக்கு எழுத கற்றுக் கொடுக்கும் விழாவும் நடைபெறுகிறது. நாமும் ஒரு முறையாவது ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவரைத் தரிசித்து, லக்ஷ்மி கடாக்ஷத்துடன் கல்வி ஞானம் என்கிற சரஸ்வதி கடாக்ஷத்தையும் பெறுவோம்.

சமர்ப்பித்து மாணவர்கள் அருளாசி பெறுவது இங்கு ஐதீகமாக உள்ளது. தேர்வுக் காலத்தில் ஏராளமான பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் வந்து இந்தப் பெருமாளின் அனுக்கிரகத்தை நாடி வழிபடுகிறார்கள்.

சென்னை மயிலாப்பூரில் தேசிகர் சன்னதியிலும் ஹயக்ரீவரைத் தரிசிக்கலாம். காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டு அருகே உள்ள சிங்கப்பெருமாள் கோயிலில் இருந்து 3 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது செட்டி புண்ணியம் ஹயக்ரீவர் திருக்கோயில். தேவநாதப் பெருமாள் கோயிலில் உள்ள “யோக ஹயக்ரீவர்” மிகவும் பிரசித்தி பெற்றவர்.

இது தேவநாதப் பெருமாள் கோயிலாக இருந்தாலும் கூட “செட்டி புண்ணியம் ஹயக்ரீவர் கோயில்” என்றே மக்கள் கூறுகின்றனர். இங்குள்ள யோக ஹயக்ரீவர் நான்கு திருக்கரங்களுடன் சங்கு, சக்கரதாரியாக யோக நிலையில் சேவை சாதிக்கிறார்.



# ஸ்ரீமகாலட்சுமியை வரவேற்க...


**திரு. எம் அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி**
**97503 33265**


தாமரைப் பூவில் வாசம் செய்யும் ஸ்ரீமகாலட்சுமித் தாயார் சித்தி, புத்தி, போகம், முக்தி தருபவள். நெல்லிமரத்தில் மகாலக்ஷ்மி வாசம் செய்வதால் துவாதசியன்று நெல்லிக் கனியை உணவில் சேர்த்துக் கொண்டால் ஏகாதசி விரதத்தின் பலன் கிடைக்கும். ஆதிசங்கரருக்கு துவாதசியன்று நெல்லிக்கனி தானம் செய்த பெண்மணிக்கு அவர் கனகதாரா ஸ்தோத்திரம் பாடி லக்ஷ்மி அருளால் பெருஞ்செல்வம் கிடைக்கச் செய்தார்.

### லட்சுமி வாசம் செய்யும் இடங்கள்

பசுவின் பின்புறத்தில் மகாலட்சுமி வாசம் செய்வதால் ஆலயங்களில் அதிகாலையில் கோபூஜை செய்தபின் தரிசனம் ஆரம்பமாகிறது.

யானை மற்றும் குதிரையின் முகங்களில் லட்சுமி வாசம் செய்கிறாள். தீபாவளியன்று அதிகாலை மட்டும் மகாலட்சுமி நல்லெண்ணையில் வாசம் செய்கிறாள். "வீரம் உடையவர்கள், சோம்பல் இல்லாமல் சுறுசுறுப்பாக இருப்பவர்கள், தவம் உடையவர்கள், ஈகை குணம் கொண்டவர்கள், செல்வத்தை நன்கு அனுபவிப்பவர்கள் ஆகியவர்களை நான் அடைகிறேன்" என்கிறாள் மகாலட்சுமி.

கோமாதா (பசு)வை மகாலட்சுமியின் அம்சமாகக் கருதி பூஜை செய்வது நம் நாட்டில் உள்ள பழக்கம். பசுவின் பின்புறம் மகாலட்சுமி வசிக்கிறாள் என்பதால் பசுவின் பின்புறத்தைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்ள வேண்டும்.

பூரணகும்பம், மஞ்சள், குங்குமம், திருமண் சூர்ணம், பசு, கோலம், சந்தனம், வாழை, வெற்றிலை,மாவிலைத் தோரணம், திருவிளக்கு, யானை, கண்ணாடி, உள்ளங்கை, தீபம் ஆகிய மங்கலப் பொருட்களில் மகாலட்சுமி வாசம் புரிகிறாள்.

மஹாவிஷ்ணுவிற்குப் பிடித்த துளசி லட்சுமியின் அம்சம் ஆகும். வீட்டில் துளசி மாடம் வைத்து தினமும் அதைச் சுற்றி வந்து வழிபட்டு வந்தால் எல்லாச் செல்வங்களும் கிடைக்கும்.

வாழை, மாவிலை, எலுமிச்சைப்பழம் ஆகியவைகளிலும் மகாலட்சுமி வாசம் செய்கிறாள். அதனால்தான் சுபகாரியங்களில் இவை பயன்படுத்தப்படுகின்றன. பெண்களின் தலைமுடி முன் வகிட்டில் மகாலட்சுமி வாசம் செய்வதால் திருமணமான பெண்கள் முன்வகிட்டில் குங்குமம் இட்டுக் கொண்டால் லட்சுமி கடாட்சம் என்பர். லட்சுமி விரத பூஜை நடத்தப்படும் வீடுகளில் மகாலட்சுமி வாசம் செய்வாள்.

### மகாலட்சுமியின் ஸ்தோத்திரங்கள்

ஸ்ரீவைஷ்ணவத்தை நிலை நாட்டிய வேதாந்த தேசிகர் ஸ்ரீஸ்துதி என்னும் ஸ்தோத்திரத்தில் ஸ்ரீமகாலட்சுமியை மங்கலத்துக்கெல்லாம் மங்கலமானவள் என்று புகழ்ந்து பாடுகிறார்.

ஒரு பக்தனுக்கு பகவானின் அனுக்ரகம் வேண்டும் என்றால் புருஷகார பூதையான மகாலட்சுமியை முதலில் சரணடைய வேண்டும்.

நம்மாழ்வார், *"அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறை மார்பா"* என்று கணப் பொழுதுகூட பிரியாது மகாவிஷ்ணுவுடன் கூடி இருக்கும் மகாலட்சுமியைச் சரண் அடைவதே உயர்ந்தது என்று கூறியுள்ளார்.

லட்சுமியின் பெருமையை ஸ்ரீசூக்தம், ஸ்ரீஸ்துதி, கனகதாரா ஸ்தோத்திரம், மகாலட்சுமி அஷ்டகம், அஷ்டோத்திர

சதநாமாவளி ஸ்தோத்திரம் போன்றவை விளக்குகின்றன. திருமழிசையாழ்வாருக்கு குழந்தைப் பருவத்தில் ஞானப்பால் ஊட்டியது மகாலட்சுமியே.

குபேரனிடம் செல்வம் இருந்தாலும் அத்துடன் புகழ், ஆரோக்கியம், நல்வாழ்வு போன்ற பல செல்வங்களை உரியவர்களுக்கு வாரி வழங்குபவள் ஸ்ரீமகாலட்சுமியே. செல்வத்தை ஒருவருக்கு வாரி வழங்கும் தெய்வம் மகாலட்சுமி. அவளது அருள் இருந்தால் ஒரே நாளில் குபேரன் ஆகிவிடலாம்.

**மகாலட்சுமியின் தோற்றம் :**

மகாவிஷ்ணுவுடன் இருக்கும் பொழுது லட்சுமிக்கு இரண்டு கரங்கள். ஆனால் தனியாக சன்னதியிலோ அல்லது தனிக் கோயிலிலோ நான்கு திருக்கரங்கள் கொண்டவள்.

தாயாரின் முன் இரு கரங்கள் அபய வரத ஹஸ்தங்களாகவும், பின் இரண்டு கரங்களில் தாமரை மலர் ஏந்தியும் இருப்பாள். லட்சுமியின் திருக்கரங்கள் ஸ்வர்ண ஹஸ்தம் எனப்படுகிறது. எல்லா லட்சுமிகளும் அபய வரத ஹஸ்தத்துடன் அருள்புரிவர்.



**வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்**



*ஸதீர்த்த்$_2$யஸந்தே$_3$சத ஆபதந்தம்*
*தி$_3$ஷ்ட்யா மஹாபூர்ணமுதீ$_3$க்ஷ்ய தத்ர ।*
*தத்பாத$_3$பத்$_3$மே ப்ரணிபத்ய ஹர்ஷாத்$_3$*
*ராமாநுஜார்யஸ்ஸ ச ப$_3$ாஷ்பபூர்ண: ।।*

(43)

**ஆளவந்தாரின் மற்ற சிஷ்யர்களால் (ராமாநுஜரை ஆட்கொள்ளும்படி) நியமிக்கப்பெற்று மதுராந்தகத்தை அடைந்திருந்த பெரியநம்பியையும் அங்கேயே தெய்வச் செயலாலே கண்டு அவருடைய திருவடித் தாமரையிணையை வணங்கி, ஆனந்தக்கண்ணீர் நிறைந்தவரானார் இராமாநுஜாசார்யர்**

– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது

**மகாலட்சுமியின் பெயர்கள் :**

மகாலட்சுமி ஓரிடத்தில் நிலைக்க மாட்டாள். அதனால் சஞ்சலா, சபலா என்ற பெயர்களும் அவளுக்கு உண்டு.

ஸ்ரீலட்சுமி மாதுளம் கனியில் இருந்து உதித்ததால் மாதுளங்கி என்றும், பத்மாசனால் வளர்க்கப்பட்டதால் பத்மா என்றும், அக்னி குண்டத்தில் வாசம் செய்ததால் அக்னி கர்ப்பை என்றும், ரத்தின வடிவம் எடுத்ததால் ரத்தினாவதி என்றும், ஜனக மகாராஜனுக்கு மகளானதால் ஜானகி என்றும், பூமிக்குள்ளே கலப்பையின் நுனியிலிருந்து வெளிப்பட்டதால் சீதை என்றும், பாற்கடலிலிருந்து தோன்றியதால் ஸ்ரீ என்றும் போற்றப்படுகிறாள்.

**மகாலட்சுமி பூஜை :**

ஸ்ரீலட்சுமிக்கு உலூகம் எனப்படும் ஆந்தை ஒரு வாகனம். மேற்கு வங்கத்தில் லட்சுமி பூஜையின் போது ஆந்தையை வழிபடுவது வழக்கம்.

ஸ்ரீலட்சுமிக்கு ஏற்ற நாள் வியாழக்கிழமை மாலை குபேர காலம் எனப்படுகிறது. பௌர்ணமியில் வரும் வியாழன் சிறப்பு. வளர்பிறை பஞ்சமி, வெள்ளியன்று வரும் அஷ்டமியும் சிறந்தது.

மகாலட்சுமியின் பரிபூரண அருளைப் பெற்றது சுக்கிர வாரம் எனப்படும் வெள்ளிக்கிழமை. சுக்கிரனின் அதிதேவதை மகாலட்சுமி. எனவே வெள்ளிக்கிழமைகளில் சூரியன் உதயமான இரண்டு மணி நேரத்திற்குள் பூஜிப்பது, தரிசனம் செய்வது மகாலட்சுமியின் அருள் பெற உதவும். அதிலும் காலை 6.00 மணி முதல் 7.00 மணிக்குள் சுக்ர ஹோரையில் மகாலட்சுமியை வணங்குவது சாலச் சிறந்தது.

ஸ்ரீலட்சுமி செல்வத்தின் அதிபதி. தீபாவளி அன்று லட்சுமி பூஜை செய்வதால் செல்வம் இரட்டிப்பாகப் பெருகும். புதுக்கணக்கு எழுதுபவர்கள் தீபாவளி அன்று லட்சுமி பூஜை செய்து விட்டு நோட்டுப் புத்தகங்களின் மீது சந்தனம், மஞ்சள், குங்குமம் வைத்து மலர்த்தூவி பூஜை செய்து பிறகு வியாபாரத்தை ஆரம்பிப்பார்கள்.

மகாலட்சுமியை நவராத்திரியின்போது அஷ்டோத்திரம், அஷ்டகம் மற்ற துதிகளையும் துதித்து வணங்க சகல நன்மைகளும் கிடைக்கும்.

அதிகாலையிலும், மாலையிலும் வீட்டில் பெண்கள் விளக்கேற்றி வைத்து, லட்சுமியை வரவேற்க லட்சுமி சுலோகங்கள், அஷ்டகம் போன்றவற்றைச் சொல்லிக் கொண்டிருந்தால் லட்சுமியின் அருள் கிடைக்கும். வீடுகளில் லட்சுமி படம் வைத்து வெள்ளிக் கிழமைகளில் தூபம் காட்டி,

## ஸ்ரீ வரலட்சுமி தாயார்



வரமகாலட்சுமி வழிபட்டால் நீண்ட ஆயுள், புகழ், செல்வம், உடல் நலம் உண்டாகும். வரலட்சுமி விரத பூஜை செய்தால் உடனடியாக திருமண யோகம் கைகூடும். எட்டு விதச் செல்வங்களைத் தருவதுடன் தாலிப்பாக்கியத்தையும் வரலட்சுமி வழங்குகிறாள். இதனால்தான் மணமான பெண்கள் மகாலட்சுமியைப் போற்ற வரலட்சுமி விரதத்தை மேற்கொள்ளுகின்றனர். மகாலட்சுமி நித்திய சுமங்கலி என்று அழைக்கப்படுகிறாள். எனவேதான் அவளை நினைத்து பெண்கள் வரலட்சுமி விரதம் மேற்கொள்கிறார்கள். வரலட்சுமி விரதம் இருக்கும் பெண்களுக்கு மாங்கல்ய பலம் நீடிப்பதோடு செல்வம், தைரியம், வெற்றி, அரசு பதவி, குழந்தைப் பேறு, கல்வி உள்ளிட்ட எல்லா வளங்களும் வந்து சேரும். மகாலட்சுமிக்கு நெய் விளக்கே உகந்தது.

ஸ்ரீவரலட்சுமி நோன்பை கடைபிடித்தவர்கள் பெரும் பயனை அடைந்தார்கள் என்று பத்ம புராணம் கூறுகிறது. நாம் செய்யும் பாவ, புண்ணியத்துக்கு ஏற்றபடி ஸ்ரீவரலட்சுமி நமக்கு செல்வத்தை வழங்குவாள். வரலட்சுமி விரதம் இருக்கும் பெண்களிடம் அஷ்ட லட்சுமிகளும் மகிழ்ந்து அன்புடன் இருப்பார்கள் என்பது ஐதீகம்.

ஸ்ரீவரலட்சுமிக்கு அன்னம், பருப்பு, வடை, பாயசம், கொழுக்கட்டை, அப்பம், இட்லி முதலியவற்றுடன் பழ வகைகளை நைவேத்தியம் செய்ய வேண்டும். ஸ்ரீவரலட்சுமி பூஜைக்கு பயன்படுத்தும் கும்பத்தை பிறகு பத்திரப்படுத்தி, சுத்தமான இடத்தில் வைத்துக் கொள்ளலாம். வேறு பூஜைகள் நடத்தும் போது அதை பயன்படுத்தலாம். ஸ்ரீவரலட்சுமி பூஜைக்கு பயன்படுத்தும் கும்பம் எதிர்பாராத விதமாக நெளிந்து விட்டாலோ, சேதம் அடைந்து விட்டாலோ வீட்டில் வைத்துக் கொள்ளாமல் தானமாக கொடுக்கலாம்.

ஸ்ரீவரலட்சுமி பூஜையின் போது சந்தனத்தில் லட்சுமியைச் செய்து வழிபடலாம். ஆனால் மறுநாள் அதை நீர் நிலைகளில் கரைத்து விட வேண்டும். ஸ்ரீவரலட்சுமி தினத்தன்று புண்ணிய நதிகளில் நீராடலாம். இது ஓராண்டு லட்சுமி வழிபாட்டுக்குரிய பலன்களை நமக்குத் தரும்,

ஸ்ரீவரலட்சுமியை எந்த அளவுக்கு தாமரை மலர்களால் அலங்கரித்து வழிபாடு செய்கிறோமோ, அந்த அளவுக்கு புண்ணியம் சேரும். வரலட்சுமி, வழிபாட்டின்போது மறக்காமல் அஷ்டலட்சுமி ஸ்தோத்திரம் சொல்வது மிகவும் நல்லது. மகாலட்சுமி அஷ்டகத்தை மும்முறை பாராயணம் செய்தல் நன்று.

திருப்பதி-திருச்சானூரில் திருவேங்கடவனின் பட்டமஹிஷியான ஸ்ரீபத்மாவதித்தாயார் ஆலயத்தில் ஸ்ரீவரலட்சுமி விரத வழிபாடு மிகச் சிறப்பான முறையில் தி.தி.தே. நடத்தி வருகின்றது. இந்த வழிபாட்டில் பங்கேற்க கட்டணம் செலுத்தியவர்களுக்கு பூஜைப்பொருட்களுடன் பிரசாதங்களும் தேவஸ்தானமே வழங்குகிறது.



தீபாராதனை செய்ய வேண்டும். உப்பு பாத்திரத்தில் உப்பு குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். காலையும் மாலையும் தீபம் ஏற்றினால் லட்சுமிக்கு மிகவும் பிடிக்கும்.

### மகாலட்சுமியைப் பூஜித்தவர்கள்

மகாலட்சுமியை நாராயணன் திருப்பாற்கடலில் சித்திரை, தை, புரட்டாசி மாதங்களில் பூஜிக்கிறார். பிரம்ம தேவன் மகாலட்சுமியை புரட்டாசி மாத சுக்லாஷ்டமியில் பூஜிக்கிறார். மனுதேவன் மகா லட்சுமியை வருஷ முடிவிலும், தை, மாசி மாத சங்கராந்தியிலும் பூஜிக்கிறார். தேவேந்திரன் மகாலட்சுமியைப் பூஜித்து அஷ்ட ஐச்வர்யங்களை யும், ஐராவதத்தையும், அமராவதி பட்டணத்தையும் பெற்றார்.

### மகாலட்சுமியின் தலப்பெருமை :

வருத்தத்தால் மகாவிஷ்ணுவைப் பிரிந்த மகாலட்சுமி விஷ்ணுவைத் திரும்பவும் சேர்ந்த இடம் ஸ்ரீவாஞ்சியம் என்ற தலம் நன்னிலத்திற்கு அருகில் உள்ளது. ஸ்ரீ என்றும், திரு என்றும் அழைக்கப்படும் மகாலட்சுமியை விஷ்ணு வாஞ்சையால் விரும்பி சேர்ந்த இடம் இத்தலம் என்பதால் இத்தலத்திற்கு ஸ்ரீவாஞ்சியம் (திருவாஞ்சியம்) என்ற பெயர் ஏற்பட்டது.

காஞ்சி ஸ்தூபத்தில் ஒரு கம்பத்திலும், சாரநாத் தோரணத்திலும் யானைகளோடு திருமகள் உருவங் களைக் காணலாம். பல்லவர் காலத்துச் சிற்பங்களில் கஜலட்சுமியைக் காண முடியும். கஜ லட்சுமியின் உருவங்கள் இரண்டு மாமல்லபுரத்தில் உள்ளது. திருக்குறுங்குடியில் கோபுர முகப்பின் நடுவில் அபூர்வமான செதுக்கு வேலைப்பாடு அமைந்த கஜலட்சுமியைப் பார்க்கலாம். சீல கிரந்தம் எனும் புத்த நூல் மகாலட்சுமி வழிபாட்டினை விளக்குகிறது. முதல் மற்றும் இரண்டாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த குஷானர்களின் சிற்ப ரீதியில் அமைந்த, செந்நிறக் கல்லால் ஆன, சற்றுச் சிதைந்த லட்சுமியின் உருவம் ஒன்று டில்லி காட்சிச் சாலையில் உள்ளது.

வராக அவதாரத்தில் திருமால் பூமியைத் தோண்டி விட்டுத் தம் சிரமத்தை மறந்திருக்கத் திருமகளைத் தம் தொடை மீது நிறுத்திய வடிவத்தை மாமல்லபுரத்தில் இவ்வமைப்புடைய சிலை உள்ளது.

### மகாலட்சுமியின் வடிவங்கள்

ஸ்ரீ மகாலட்சுமிக்கு இரண்டு வடிவங்கள் உண்டு. ஒன்று ஸ்ரீதேவி என்ற லட்சுமி. மற்றொன்று பூதேவி என்ற பூமிதேவி வடிவம். லட்சுமிதேவி, வைகுண்டத் தில் ரமாதேவி, சொர்க்கத்தில் சொர்க்கலட்சுமி, பாதாள உலகில் நாகலட்சுமியாக இருக்கிறாள். அவள் ராஜாக்களிடம் ராஜ லட்சுமியாகவும் விளங்குகின்றாள். விலங்குகளிடத்தில் சோம லட்சுமியாகவும், புண்ணியவான்களிடம் ப்ரீதிலட்சுமி யாகவும், வேதாந்திகளிடம் தயாலட்சுமியாகவும் இருக்கிறாள்.

மகாலட்சுமி மஹாவிஷ்ணுவின்இருதயத்தில் வாசம் செய்பவள். பெருமாள் திருமார்பில் உள்ள லட்சுமிக்கு யோகலட்சுமி என்றும், இருபக்கமும் உள்ள தாயாருக்கு போகலட்சுமி என்றும், தனிச்சன்னதியில் அருள்புரிபவளுக்கு வீரலட்சுமி என்றும் பெயர்.

### மகாலட்சுமியின் அருள் கிட்டிய விருட்சங்கள் :

வில்வ வனத்தில் மகாலட்சுமி வாசம் செய்வ தால் மாதப்பிறப்பு, அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தி, அஷ்டமி, நவமி, திங்கட்கிழமை ஆகிய நாட்களில் வில்வத்தை மரத்திலிருந்து பறிக்கக் கூடாது.

லட்சுமியை வில்வத்தால் அர்ச்சனை செய்து பூஜிக்கலாம். வில்வமரத்தை வலம் வருவது மகாலட்சுமியை வலம் வருவதற்கு சமமாகும்.

வாமன புராணத்தில் மகாலட்சுமியின் திருக்கரங் களில் இருந்து வில்வ விருட்சம் தோன்றியது என்று கூறப்பட்டுள்ளது.

வில்வ மர முட்கள் சக்தி வடிவம், கிளைகள் வேதம், வேர்கள் 14 கோடி ருத்ரர்கள் என்று கருதப் படுகிறது. இவ்வளவு சிறப்பு கொண்ட வில்வ மரமே மகாலட்சுமி சொரூபமாக விளங்குகிறது.

துளசி செடியிலும் மகாலட்சுமி எழுந்தருளி வாசம் செய்கிறாள். இதேபோல் மஞ்சளிலும் இருக் கிறாள். அதனால் துளசி செடியுடன் மஞ்சள் செடியை யும் சேர்த்து நம் வீட்டில் வளர்ப்பது நல்லது.

மகாவிஷ்ணுவிற்குப் பிடித்த துளசி லட்சுமியின் அம்சம் ஆகும். வீட்டில் துளசி மாடம் வைத்து தின மும் அதை சுற்றி வந்து வழிபட்டு வந்தால் எல்லாச் செல்வங்களும் கிடைக்கும்.



மாத்ருஸ்ரீ தரிகொண்ட
வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

சென்ற இதழின் தொடர்ச்சி...

வாயு தேவனுக்கும் சேஷனுக்கும் இடையே வாக்கு வாதம் நடைபெற்றது. வாயு "சேஷா! நீ மிகவும் கர்வம் கொண்டவனாக இருக்கிறாய். பெரியவர்கள் சிறியவர்கள் என்று பாராமல் வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறாய். இருந்தாலும் நீ எனக்கு எம்மாத்திரம்? என்னுடைய பலம் என்ன? உன்னுடைய பலம் என்ன? எனக்கும் உனக்கும் யானைக்கும் கொசுவுக்கும் உள்ள வித்தியாசம். அதை நினைத்துப்பார்த்துக் கொள். நான் எல்லா உயிர்களிடத்திலும் அந்தர்யாமியாக இருப்பவன். நான் உன்னைக் காட்டிலும் உயர்ந்தவன் என்றான்.

அதைக்கேட்ட சேஷன், "பிரபஞ்சனா! என்னைக் குறைவாக மதிப்பிடாதே. மலைகளும் காடுகளும், ஆறுகளும் அனைத்து உயிரினங்களும் வாழுகின்ற இப்பூமண்டலத்தை தாங்குகின்றவன் நான். நான்தான் உயர்ந்தவன். உலக நாயகனாகிய ஸ்வாமியைச் சுகமாகத் தாங்குபவன். என்னை ஏளனமாகப் பார்க்காதே" என்றான்.

இந்த வாதபிரதிவாதங்களுக்கு முடிவு கட்டும் விதமாக "பாம்புகளின் தலைவனே! நான் உன்னில் உள்ளேன். அதனால்தான் உனக்கு சக்தி. நான் இல்லை என்றால் நீ சக்தியிழந்தவனாவாய். நானே மூலத்தத்துவம். எவ்விதத்திலும் நீ என்னைக் காட்டிலும் குறைந்தவனே என்றான்.

அவன் பேசியதைக்கேட்ட சேஷன் – இனி அந்த பேச்செல்லாம் எதற்கு? இதற்கு ஒரு முடிவு கட்டுவோம். நீயும், நானும் மல்யுத்தம் செய்யலாம். யார் பலசாலி என்பது பார்ப்பவர்களுக்கும் தெரியும். வா! வா! என்று கர்ஜிக்க, திருக்கோயிலிலிருந்த மாதவன் வெளியில் ஏதோ கூச்சல் கேட்கிறதே அது என்ன என்று பார்ப்போம் என வெளியில் வந்தார்.

ஸ்வாமி ஹரியைக் கண்ட சேஷனும், வாயுவும் வணங்கி நின்றனர். அவரிடம் நடந்தவைகள் அனைத்தையும் எடுத்துக் கூறினார்கள். மேலும், "ஸ்வாமி நாங்கள் மல்யுத்தம் செய்ய எண்ணியுள்ளோம். தாங்கள் எங்களை ஆசிர்வதிக்க வேண்டும்" என்றனர்.

ஸ்வாமி விஷ்ணு அவர்களுடைய பிடிவாதத்தைக் கண்டார். இது ஒரு விளையாட்டு தானே பார்க்கலாம் என நினைத்துக் கொண்டார். அதே நேரத்தில் இவர்கள் விரும்புகின்ற இந்த மல்யுத்தப் போட்டியில் ஏதோ ஒரு உள் நோக்கம் இருப்பதையும்கூட அவர் உணர்ந்தார். இச்சூழலில் இவ்விருவரையும் சமாதானப்படுத்துவது என்பதும் சாத்தியமில்லை என்பதினால் "சேஷா, வாயு! நீங்கள் இருவரும் வீரத்தில் சிறந்தவர்கள். காரணம் இல்லாமல் மல்யுத்தம் செய்வதினால் உலகத்தில் வீண் குழப்பங்கள் உண்டாகும். என்னை நீங்கள் கேட்டுக் கொண்டதினால் நான் இதற்கு ஒரு வழியைக் கூறுகிறேன். வேங்கடாத்ரி என்னும் இம்மலை வெப்பத்தினால் உண்டானது. வேங்கடாத்ரியை ஆதிசேஷன் தன் பிடியை விடாமல் சுற்றி வளைத்துக் கொண்டு இருப்பான். காற்றாகிய நீயோ உன் வலிமை முழுவதையும் திரட்டி

இம்மலையைப் பறக்கச் செய்தால் நீயே பலசாலி ஆவாய். இருவருடைய வலிமையைச் சோதிப்பதற்கு இதை விட சிறந்த உபாயம் இல்லை என்றார். இருவரும் தன்மானம் உடையவர்கள் அதனால் சரியென்றனர்.

ஸ்வாமி ஹரியின் வழிக்காட்டுதல்படி ஆதி சேஷன் வேங்கடாத்ரி முழுவதும் தன் ஆயிரம் தலைகளுடன் படம் விரித்து அப்படியே ஆலிங்கனம் செய்து கொள்ளும் விதமாக விடாமல் உறுதியாகப் பற்றிக் கொண்டார். வாயுதேவன் அம்மலையைச் சுற்றி கெட்டியாகப் பற்றிக் கொண்டிருக்கும் ஆதி சேஷனை மிகவும் உன்னிப்பாகக் கவனித்து, தன் வலிமையை அதிகப்படுத்திக் கொண்டு முதலில் அம்மலையை அசைப்பதற்கு முயற்சி செய்தான்.

இச்சமயத்தில் பூமண்டலம் நடுங்கியது. பிரம்மா, இந்திரன் முதலான தேவர்கள் எல்லாம் வாயுதேவனிடம் சென்று "வாயுதேவா! நீ இப்படி செய்வது நல்லதல்ல!

நீங்கள் இருவரும் செய்யும் விபரீத செயல்களால் உயிர்ச் சேதங்கள் ஏற்படுகின்றன. இது போன்ற செயல்கள் கல்பாந்தத்தில் செய்யக் கூடியது. எனவே நாங்கள் கூறுகிறோம். நீ உன்னுடைய இந்தச் செயலை உடனே நிறுத்தி விடு" என்றனர்.



## திருமலையப்ப ஸ்வாமி பவித்ரோத்ஸவம்

நித்ய கல்யாணம் பச்சைத்தோரணம் என பல விழாக்கோலம் காணும் திருமலை திருத்தலத்தில் வருடம் முழுவதும் தெரிந்தோ, தெரியாமலோ மனிதர்கள் செய்யும் தவறுகளுக்கு பரிகாரமாக செய்யப்படுவதே இந்த பவித்ரோத்ஸவ சேவையாகும். பவித்ரோத்ஸவ சேவையானது திருவேங்கடமுடையான் ஆலயத்தில் சிராவண மாதம் (தமிழில் ஆவணி) மூன்று நாட்கள் நடைபெறும்.

பவித்ரோத்ஸவத்தை முன்னிட்டு மூன்று நாட்களும் ஸ்ரீபூதேவியருடன் திருமலையப்ப ஸ்வாமிக்கு ஸ்நபன திருமஞ்சனம் நடைபெறுவதோடு மட்டுமின்றி மாலை நேரத்தில் திருமாட வீதிகளில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்புரிவர்.

இந்த உத்ஸவத்தில் திருவேங்கடமுடையான் ஆலயத்தில் மட்டுமின்றி அதன் உப ஆலயங்களான ஸ்ரீவராஹ ஸ்வாமி, ஸ்ரீபேடி ஆஞ்சநேய ஸ்வாமி ஆலயங்களிலும் நடைபெறும். அச்சேவையின்பொழுது மூலமூர்த்திகள், அனைத்து உற்சவ மூர்த்திகள், கோபுர சிகரம், விமான வேங்கடேஸ்வர ஸ்வாமி, துவஜஸ்தம்பம் என அனைத்து இடங்களிலும் பவித்திர மாலைகள் அணிவிக்கப்படும். சுமார் 500 வருடங்களுக்கும் மேலாக இந்த உற்சவம் திருமலையில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வருடம் ஆகஸ்ட் நான்காம் தேதி திங்கட்கிழமையன்று அங்குரார்ப்பணத்துடன் துவங்கும். மறுநாள் 05-08-2025, செவ்வாய்க்கிழமை அன்று பவித்ரங்களைப் பிரதிஷ்டைச் செய்வர். 6 ஆம் தேதி புதன் கிழமையன்று பவித்ரங்கள் சமர்ப்பணம் நடைபெறும். 07-08-2025 வியாழனன்று பூர்ணாஹுதியுடன் பவித்ரோத்ஸவம் நிறைவு அடையும். இதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி நாமும் இந்த பவித்ரோத்ஸவத்தில் பங்கேற்று பவித்ரராவோம்.

ஆனால் வாயு தேவன் அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்கவில்லை. இன்று ஏதோ ஒரு முடிவு தோல்வியோ வெற்றியோ தெரிந்து விட வேண்டியதுதான் என்றான்.

இதைக்கண்ட பிரம்மா இந்திரன் முதலானோர் சேஷனாவது நம் வார்த்தையைக் கேட்டு நடந்து கொள்வான் என்னும் நம்பிக்கையில் "சேஷா! நீ மிகவும் பலசாலி. உன்னுடைய வலிமை என்னவோ ஸ்ரீஹரிக்குத் தெரியும். கௌரி மனோகரனுக்குத் தெரியும், எங்களுக்கும் தெரியும்" எனப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தபோதும், அவர்கள் பேச்சை அவன் கண்டு கொள்வதாக இல்லை. இருந்தாலும் பிரம்மா இந்திரன் முதலானோர் மீண்டும் ஒரு முறை கேட்டுக் கொள்ளலாம் என நினைத்தனர்.


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

திருமலையானின் அக்ஷர தீபிகை

ஸப்தகிரி



மலர் எழுத்தால் ஸ்வாமியை அர்ச்சிக்கும் ஸப்தகிரி உங்களுடையது. அதனை மேன்மேலும் வளர்ச்சியடைய செய்வதும் ஸ்ரீவாரி சேவையே...

- பரந்தாமனைத் தரிசிப்பதற்கும், அவரைச் சென்றடைவதற்கும் எத்தனையோ வழிகள் உண்டு.
- அனாதைகளின் காப்பாளன், ஆபத்தைத் தவிர்ப்பவனான அந்த ஏழுமலையானை அக்ஷர (எழுத்துப்) பூவினால் ஆராதிக்கின்றனர்.
- திருமலையானின் அக்ஷரப் பிரசாதமான ஸப்தகிரியைப் படிப்பதும், படிக்க வைப்பதும் அவனுக்குச் செய்யும் திருத்தொண்டே.
- "ஸப்தகிரி" படியுங்கள். உங்கள் அன்பானவர்களையும் படிக்க வையுங்கள். திங்கள்தோறும் திருமலையானை இந்த ஸப்தகிரி மூலம் தரிசியுங்கள். சிறப்பைத் தெரிந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் 'ஸப்தகிரி' வாசகரானால்... உங்கள் அன்பானவர்களுக்குப் பரிசாக அளியுங்கள். சந்தா செலுத்த வையுங்கள். உங்கள் பக்கத்து வீட்டாருக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் ஸப்தகிரி குறித்து கூறுங்கள்.
- உங்கள் அன்பானவர்களையும் ஸப்தகிரி மூலம் ஸ்வாமி திருவருளைப் பெற வையுங்கள்.


## 2025, செப்டம்பர் மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 02-05 | திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பவித்ரோத்ஸவம் |
| 04 | ஸ்ரீவாமன ஜெயந்தி |
| 04-07 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் பவித்ரோத்ஸவம் |
| 06-07 | நாராயணவனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் |
| 06 | அனந்த பத்மநாப ஸ்வாமி விரதம் |
| 14 | கண்ணன் திருநட்சத்திரம் |
| 21 | மஹாளய அமாவாசை |
| 24 – | திருமலையப்பஸ்வாமி பிரம்மோத்ஸவம், |
| – அக்.02 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் நவராத்ரி உத்ஸவம் |
| 28 | திருமலையப்ப ஸ்வாமி கருட சேவை |
| 29 | சரஸ்வதி பூஜை, |
| 30 | துர்காஷ்டமி |

சேஷா! நீ வலிமையுடையவன். மேருமலையின் குமாரனான "வேங்கடாத்திரியை" உன் ஆயிரம் தலைகளால் படம் விரித்து சுற்றி வளைத்து உறுதியாகக் கட்டி அணைத்து பற்றிக் கொண்டிருப்பதினால் வாயுதேவன் ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறான். நீங்கள் இருவரும் பலசாலிகளே.

நீங்கள் தோல்வியை ஏற்றுக் கொள்ள மாட்டீர்கள். இருவருக்கும் தன்மான உணர்வு அதிகம். இருப்பினும், நீங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து அமைதியைக் கடைபிடியுங்கள். மக்களை அஞ்சும்படி செய்யாதீர்கள்.

மேலும், உனக்கு வேறொன்றையும் கூற வேண்டும். "பாம்பின் அரசே! நீ சாமான்னியமானவனா? உன்னுடைய சகோதரர்கள் எல்லாம் மூடர்கள் என்று தெரிந்து கொண்டு, சாத்வீக மூர்த்தியான ஸ்வாமிக்கு நம்பிக்கைக்குரியவனாய் இருக்கின்றாய். இக்குணத்தினால் முரட்டு குணத்தை விட்டு விட்டாய். தேவையில்லாமல் எதற்கு குரோதம் பாராட்ட வேண்டும்?

தெலுங்கு மூலம் : பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்.
தமிழாக்கம் : டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

பெருமை அறிவோம்...

# பால கிருஷ்ணரின் மாய லீலைகள்

சிந்தை மயக்கும் விந்தை கற் சிற்பங்கள்

–படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை, 9443171383

பாற்கடல் பாம்பணையில் கிடந்துள்ள ஸ்ரீபரந்தாமன் உலகில் நடைபெறும் தீமைகளை தடுத்து, வாழும் உயிர்களுக்கு வளங்கள் பல தந்தருள எழுந்தருளிய அவதாரங்கள் பத்தாகும். இப்புராண வரலாற்று சுவடுகளில் மிளிரும் கருத்துக்கள் பாரதநாடு மட்டுமின்றி உலக அளவிலும் பரவி மக்கள் வாழ்வியலில் கலந்து ஒளிர்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

நாலாயிர திவ்யப்பிரபந்தத்தில் பெரிதும் பேசப்படுகின்ற ஸ்ரீகிருஷ்ணாவதார சிறப்பினைப் பற்றி பெரியாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் தாங்கள் அருளிய பாசுரங்களில் அதனின் பெருமையை பலவித எடுத்துக்காட்டுடன் கூறி உள்ளனர் என்பதும், ஆண்டாள் அருளிய திருப்பாவை மற்றும் நாச்சியார் திருமொழி ஆகியவற்றில் மாயக் கண்ணனைப் பற்றிப் புகழாரம் மலிந்துள்ளதைக் காணலாம்.

## கிருஷ்ண அவதாரம்

மதுராபுரி மன்னன் உக்கிரசேனன் மகன் கஞ்சன் எனும் கம்சன் முற்பிறவியில் காலநேமி எனும் அசுரனாகவும் இப்பிறவியில் கம்சனாகவும் அவதரித்தான்.

இவன் மக்களை மிகவும் கொடுமையாக நடத்தி வந்தான். தன் தாய் தந்தையரையே சிறையில் அடைத்தவன் எனில் அவனது கொடுமைக்கு வேறு சான்று வேண்டுவதில்லை. கம்சன், உடன் பிறந்த தங்கை தேவகியைத் தன் நண்பன் வசு தேவனுக்குத் திருமணம் செய்து வைத்தான். தேவகி வயிற்றில் பிறக்கும் எட்டாவது குழந்தையே தன்னைக் கொல்லும் என்பதை அசரீரி மூலம் கேட்டு அறிந்த கம்சன் புது மணத்தம்பதிகளைச் சிறையிட்டான். அதன்



பிறகு அவர்களுக்குப் பிறந்த ஏழு குழந்தைகளையும் கொன்று விட, எட்டாவதாகப் பிறக்கும் சிசுவைக் கொல்ல முயற்சிப்பான் என்று கவலை கொண்ட வசுதேவர், தேவகி தம்பதியின் மனத்துயரினை துடைக்கும் வண்ணம், ஸ்ரீமந்நாராயணமூர்த்தி எழுந்து அருளி பிறந்துள்ள குழந்தை எனது அவதாரமாகும் என்று உணர்த்தி குழந்தையை கோகுலத்தில் யசோதையின் மகனாகத் தந்து விட அருளாசி புரிந்தார். அதன்படி குழந்தையை வசுதேவர் கோகுலத்தில் கொண்டு சேர்த்தார்.



அங்கு ஆதிசேஷன் அம்சமாகப் பிறந்திருந்த பலராமனுடன் இணைந்து வளர்ந்து வந்தார் கிருஷ்ணர். இதனையறிந்த கம்சன் அவர்கள் இருவரையும் கொல்ல பல அரக்க வீரர்களை அனுப்புகிறான்.

முதலில் விஷப்பால் ஊட்டிய அரக்கி பூதனையும், அதனைத் தொடர்ந்து வண்டிச் சக்கரம் உருவில் வந்த சகடாசுரன், அவனின் நண்பனாக காற்று உருவில் வந்த திருணாவர்த்தசுரன் மற்றும் கன்று உருவில் வந்த வத்ஸாசுரன், கொக்கு எனும் புள் உருவில் வந்த பகாசுரன் மற்றும் அகாசுரன், கழுதை உருவில் வந்த தேனுகாசுரன், சிறுவர்கள் வடிவில் வந்த பிரலம்பாசுரன், காளை உருவில் வந்த அரிஷ்ட அசுரன், குதிரை உருவில் வந்த கேசி, ஆடு மேய்க்கும் இடையன் போல் வந்த வ்யோமாசுரன் இவனின் கழுத்தைப் பிடித்து வதம் என இப்படி கம்சனால் ஏவப்பட்டவர்கள் அனைவரையும் பலராமன் மற்றும் ஸ்ரீபால கிருஷ்ணன் வதம் செய்தார்கள்.

அதனைத் தொடர்ந்து கம்சனின் அரண்மனையில் உள்ள குவலயபீடம் எனும் பட்டத்து யானையையும் பின்பு சானூரன், முஷ்டிகன் எனும் இரு மல்யுத்த மல்லர்களையும் நிறைவில் கம்சன் என அனைவரும் சகோதரர்கள் கரங்களால் வதம் செய்யப்பட்டு மோக்ஷம் அடைந்தார்கள் என்று ஸ்ரீகிருஷ்ணாவதாரச் சிறப்பினைப் பற்றி புராணங்கள் எடுத்துரைக்கின்றது.

இவ்வரலாற்று சுவடுகளை தன்னுள் தாங்கி உள்ள மேற்காணும் சிற்பங்கள் திண்டிவனம், மாடம்பாக்கம் திருவிடந்தை ஆகிய திருக்கோயில்களில் உள்ள தூண் சிற்பங்களாகும். இந்தியா முழுவதும் உள்ள திருக்கோயில்களில் இச்சிறப்பு மிக்க சிற்பங்கள் போல் பல உள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீகோதண்டராமஸ்வாமி பவித்ரோத்ஸவம், ஒண்டிமிட்டா







### நிகழ்ச்சி நிரல்

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 23-08-2025 | சனி | --- | அங்குரார்ப்பனம் |
| 24-08-2025 | ஞாயிறு | பவித்திரம் பிரதிஷ்டை | |
| 25-08-2025 | திங்கள் | பவித்திரம் சமர்ப்பணம் | |
| 26-08-2025 | செவ்வாய் | பூர்ணாஹூதி | |



# ஸ்ரீசித்தி விநாயகர் விரத வழிபாடு

**ஸ்ரீவிநாயகர் சதுர்த்தி விழாவினை முன்னிட்டு ஸ்ரீசித்தி விநாயகர் வழிபாட்டு முறை ஸப்தகிரி வாசகர்களுக்காக ...**

விநாயக சதுர்த்தி நாளன்று அதிகாலையில் வீட்டைத் தூய்மைப்படுத்தி, மாவிலைத் தோரணங்கள் கட்டி அலங்கரித்தல் வேண்டும். தூய்மையானப் பகுதியில் ஒரு பீடத்தை அமைத்து, அதன் மீது விநாயகரின் விக்ரகத்தை வைக்கவும். விநாயகர் விக்ரகத்திற்கு எதிரில், பீடத்தின் மீது அரிசியும், அதன் மீது செம்பு/வெள்ளி/மண்பாத்திரத்தை வைத்து அலங்கரிக் கவும். அதில் சிறிது அக்ஷதை, மலர்கள், மாவிலைகளையும் அதன் மீது தேங்காய் வைத்து கலசத்தை அமைக்கவும். பின் மஞ்சளால் கணபதியை வைக்கவும். பூஜைக்கு முன்னதாக ஒரு பாத்திரத்தில் உத்தரணி வைத்து கொண்டு அருகிலேயே மற்றொரு சிறிய பாத்திரம் வைத்து கொள்ள வேண்டும்.

முதலில் குங்குமப் பொட்டு வைத்து கொண்டு விநாயகரை வணங்கி இவ்விதமாகப் பிரார்த்தனைச் செய்தல் வேண்டும்.

**சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் ।**
**பிரசன்னவதனம் த்யாயேத் ஸர்வவிக்னோப சாந்தயே ॥**
**அயம் முஹூர்தஸ்ஸு முஹூர்தோஸ்து ॥**

**ததேவலக்னம் சுதினம் ததேவ தாராபலம் சந்த்ரபலம் ததேவ ।**
**வித்யாபலம் தைவபலம் ததேவ லக்ஷ்மீபதே தேம்க்ரி யுகம் ஸ்மராமி॥**

**லாபஸ்தேஷாம், ஜயஸ்தேஷாம் குதஸ்தேஷாம் பராபவ: ।**
**யேஷா மிந்தீவரச்யாமோ ஹ்ருதயஸ்தோ ஜனார்தன:॥**

**ஆபதாமபஹர்தாரம் தாதாரம் சர்வசம்பதாம்।**
**லோகாபிராமம் ஸ்ரீராமம் பூயோபூயோ நமாம்யஹம்॥**

**சுமுகச்சைகதந்தச்ச கபிலோ கஜகர்ணக:**
**லம்போதரச்ச விகடோ விக்னராஜோ கணாதிப:**
**தூமகேது ர்கணாத்யக்ஷ: பாலசந்ரோ கஜானன:**
**வக்ர துண்ட ச்சூர்பகர்ணோ ஹேரம்ப: ஸ்கந்தபூர்வஜ:**
**அஷ்டாவஷ்டௌ ச நாமானி ய: படேச்ச்ருணுயாதபி**
**வித்யாரம்பே விவாஹேச ப்ரவேச நிர்கமேததா**
**சங்க்ராமே சர்வகார்யேஷு விக்னஸ்தஸ்ய நஜாயதே**
**அபீப்ஸிதார்த ஸித்தர்த்யம், பூஜிதோ யஸ்ஸு ரைரபி**
**சர்வவிக்னச்சிதே தஸ்மை கணாதிபதயே நம:॥**

என்று வணங்கி பின்பு ஆசமனம் செய்யவும். இடது கையில் உத்தரணி பிடித்துக் கொண்டு தண்ணீர் பாத்திரத்திலிருந்து மூன்று முறை தண்ணீரை வலது கையில் வைத்து கொண்டு "ஓம் கேசவாய ஸ்வாஹா, ஓம் நாராயணாய ஸ்வாஹா, ஓம் மாதவாய ஸ்வாஹா" என்று கூறியபடி தண்ணீரை அருந்தவும். ஹஸ்தம் ப்ரக்ஷாள்ய என்றவாறு உத்தரிணியில் தண்ணீரை எடுத்து கொண்டு கைகளை கழுவுதல் வேண்டும்.

**"ஓம் கோவிந்தாய நம:"** என்று கூறியபடி உத்தரணியால் தண்ணீரை வலது கையில் இட்டுக் கொண்டு அர்க்ய பாத்திரத்தில் விடவும். ஆசமனம் செய்த நீரினை பூஜையில் வேறு எதற்கும் உபயோகித்தல் கூடாது. பின்னர் கைகளைக் குவித்து வணங்கி, **"ஓம் விஷ்ணவே நம:, ஓம் மதுசூதனாய நம:, ஓம் திரிவிக்ரமாய நம:, ஓம் வாமனாய நம:, ஓம் ஸ்ரீதராய நம:, ஓம் ருஷிகேசாய நம:, ஓம் பத்மநாபாய நம:, ஓம் தாமோதராய நம:, ஓம் சங்கர்ஷணாய நம:, ஓம் வாசுதேவாய நம:, ஓம் ப்ரத்யும்னாய நம:, ஓம் அனிருத்தாய நம:, ஓம் புருஷோத்தமாய நம:, ஓம் அதோக்ஷஜாய நம:, ஓம்**

நாரசிம்மாய நம:, ஓம் அச்சுதாய நம:, ஓம் ஜனார்தநாய நம:, ஓம் உபேந்த்ராய நம:, ஓம் ஹரயே நம:, ஓம் ஸ்ரீகிருஷ்னாய நம: என்று கூறுதல் வேண்டும். பிறகு "உத்திஷ்டந்து பூத பிசாசா: யே தே பூமி பாரகா: ஏதேஷாம் அவிரோதேன ப்ரஹ்மகர்ம ஸமாரபே" – எனக் கூறி உத்தரணியால் நீரினை வலது கையில் ஊற்றிக் கொண்டு அந்நீரினை அனைத்து பக்கமும் தெளித்தல் வேண்டும்.

### ப்ராணாயாமம்

ஓம் பூர்புவஸ்ஸுவ: தைவீ காயத்ரீ சந்த: ப்ராணாயாமே வினியோக: பிராணயாமம் செய்து, காயத்ரி மந்திரத்தை உச்சரித்தல் வேண்டும்.

"ஓம் பூ: ஓம் புவ: ஓம் சுவ: ஓம் மஹ: ஓம் ஜன: தப: ஓக் ம் சத்யம் ஓம் தத்ஸ விதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோன: ப்ரசோதயாத் ஓமாபோ ஜ்யோதி ரஸோ Sம்ருதம் ப்ரஹ்ம பூர்புவஸ்ஸுவரோம்" தீபாராதனைக் காட்டி இவ்விதமாக சங்கல்பம் செய்து மூன்று முறை ப்ராணாயாமம் செய்தல் வேண்டும்.

### சங்கல்பம்

ஓம் மமோபாத்த சமஸ்த துரிதக்ஷயத்வாரா ஸ்ரீபரமேஸ்வர உத்திஸ்ய, ஸ்ரீ பரமேஸ்வர ப்ரீத்யர்தம், சுபே சோபனே முஹுர்தே அத்ய ப்ரஹ்மண: த்விதீய பரார்தே ச்வேதவராஹ கல்பே வைவஸ்வத மன்வந்தரே அஷ்டாவிம்சதிதமே கலியுகே ப்ரதமபாதே ஜம்பூத்வீபே பரத வர்ஷே பரத கண்டே மேரோர் தக்ஷிண திக்பாகே ஸ்ரீசைலஸ்ய.... ப்ரதேசே (ஸ்ரீசைலத்திற்கு எத்திசையில் உள்ளதோ அத்திசையைக் கூறுதல் வேண்டும்). அஸ்மின் வர்தமானே வ்யாவ ஹாரிக சாந்த்ர மானேன ப்ரபவாதி ஷஷ்டி சம்வத்ஸராணாம் மத்யே ஸ்ரீவிஷ்வாவசு நாம சம்வத்ஸரே, தக்ஷிணாயனே வர்ஷ ருதௌ, பாத்ரபத மாஸே சுக்லபக்ஷே, சதுர்த்யாம் திதௌ சௌம்ய வாஸரே யுக்தாயாம் சுபநக்ஷத்ரே, அஸ்யாம் சுபயோகே, சுபகரணே ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம் சுபதிதௌ ஸ்ரீமான்...கோத்ர: நாமதேய:... ஸ்ரீமத:... கோத்ரஸ்ய... நாம தேயஸ்ய (பூஜை செய்பவரின் கோத்திரம், பெயர் கூறுதல் வேண்டும்).

"தர்மபத்னீ சமேதஸ்ய அஸ்மாகம் சஹகுடும்பானாம் க்ஷேம ஸ்தைர்ய தைர்ய விஜய ஆயுராரோக்ய ச்வர்யாபிவ்ருத்தயர்தம் சதுர்வித பலபுருஷார்த்த சித்த்யர்தம், இஷ்ட காம்யார்த சித்த்யர்தம், மனோவான்சா பல சித்த்யர்தம், சமஸ்த துரிதோபசாந்த்யர்தம், ஸமஸ்த சன்மங்களா வாப்த்யர்தம் வர்ஷே வர்ஷே ப்ரயுக்த ஸ்ரீ வரசித்தி விநாயக சதுர்தீ உத்திச்ய, ஸ்ரீவரசித்தி விநாயக ஸ்வாமி தேவதா ப்ரீத்யர்தம் கல்போக்த ப்ரகாரேண யாவச்சக்தி த்யாநாவாஹனாதி ஷோடசோபசார பூஜா விதானேனாம் ஸ்ரீவரசித்தி வினாயக வ்ரத பூஜாம் கரிஷ்யே" என்று கூறி வலது கையின் நடுவிரலால் தண்ணீரைத் தொடுதல் வேண்டும். அதௌ நிர்விக்னேன பரிசமாப்த்யர்தம் ஸ்ரீகனாபதி பூஜாம் கரிஷ்யே. ததங்க கலசபூஜாம் கரிஷ்யே.

### கலச பூஜை :

"கலசம் கந்த புஷ்பாக்ஷதைரப்யர்ச்ய தஸ்யோபரி ஹஸ்தம் நிதாய" கலசம் வைக்கும் இடத்தில் மஞ்சள் குங்குமம் வைத்து, அதன்மீது கலசத்தை வைத்து, அந்த கலசத்திற்கு கந்தாக்ஷதைகளை வைத்து, அதில் துளசி மலர்களை வைத்து வலது கையை கலசத்தின் மீது வைத்தல் வேண்டும். பின்னர்,

கலசஸ்ய முகே விஷ்னு: கண்டே ருத்ர ஸ்ஸமாச்ரித:
மூலே தத்ர ஸ்திதோ ப்ரஹ்மா மத்யே மாத்ருகணா ஸ்ஸ்திதா:
குக்ஷௌ து சாகராஸ்ஸர்வே ஸப்த த்வீ பா வஸுந்தரா
ருக்வேதோSத யஜுர்வேத ஸ்ஸாமவேதோஹ்யதர்வண:
அங்கைச்ச ஸஹிதாஸ்ஸர்வே கலசாம்பு ஸமாச்ரிதா:
அயாந்து தேவ பூஜார்தம் துரிதக்ஷயகாரகா:

இச்சுலோகம் கூறியவாறு தண்ணீரில் இலையைத் திருப்புதல் வேண்டும்.

ஓம் கங்கே ச யமுனேக்ருஷ்ணே கோதாவரி சரஸ்வதி ।
நர்மதே சிந்து காவேரீ ஜலேSஸ்மின் தன்னி திம்குரு ॥
கலசோதகேன பூஜாத்ரவ்யாணி தேவம் ஆத்மானம் ச சம்ப்ரோக்ஷ்ய

வெற்றிலையால் கலசத்தில் உள்ள தண்ணீரை பூஜை பொருட்களின் மீதும், இறைவன் மீதும் தெளித்து, தம் மீதும் தெளித்தல் வேண்டும். பின்னர் மஞ்சள் கணபதியை வணங்குதல் வேண்டும்.

### விக்னேஸ்வர பூஜை

*கணாநான்த்வாம் கணபதிக்ம் ஹவாமஹே கவிம் கவீனா முபமச்ரவ:ஸ்தவம் ।*
*ஜ்யேஷ்டராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மண்யஸ்பத்ய: ஆனச்ருண் வன்னூதிபிஸ்ஸீத சாதனம் ॥*
*ஸ்ரீமஹாகணாதிபதயே நம: த்யானாவாஹனாதி ஷோடசோபசார பூஜாம் கரிஷ்யே*

நடுவிரலால் நீரினைக் தொடுதல் வேண்டும்.

### தியானம்

*"ஓம் சுக்லாம் பரதரம் விஷ்னும் சசிவர்ணம் சதுர்புஜம் பிரசன்னவதனம் த்யாயேத் சர்வ விக்னோபசாந்தயே"* எனும் சுலோகம் கூறி பூக்கள் அக்ஷதை கலந்து மஞ்சள் கணபதியின் பாதங்களில் வைத்தல் வேண்டும். பூஜையை இறைவனின் பாதங்களுக்கு மட்டுமே செய்தல் வேண்டும். தலை மீது பூக்களையோ, அக்ஷதையோ தூவுதல் கூடாது.

ஓம் ஸ்ரீ மஹாகணபதீம் த்யாயாமி த்யானம் சமர்பயாமி, ஓம் ஸ்ரீ மஹாகணபதீம் ஆவாஹயாமி, ஓம் ஸ்ரீ மஹாகணபதே நம: ஆசனம் சமர்பயாமி (பூக்கள், அக்ஷதை தூவி வணங்கவும். பின் உத்தரணியால் நீரினைக் காண்பித்து அர்க்ய பாத்திரத்தில் இட்டு) "பாதயோ: பாத்யம் சமர்பயாமி,

ஹஸ்தயோ: அர்க்யம் சமர்பயாமி, முகே சுத்த ஆசமனீயம் சமர்பயாமி" எனக்கூறி உத்தரணியால் நீரினை மஞ்சள் கணபதிக்கு காண்பித்தல் வேண்டும். அகர்பத்தியை ஏற்றி வெல்லம் அல்லது பழத்தினை நைவேத்திய மாக வைத்து சோடஷோபசார பூஜையைச் செய்தல் வேண்டும்.

"யதாபாகம் குடம் நிவேதயாமி ஸ்ரீமகா கணாதிபதி ஸ்ஸுப்ரசன்னோ, சுப்ரீதோ, வரதோ பவது ஸ்ரீமகாகணாதிபதி ப்ரசாதம் சிரஸா க்ருஹ்ணாமி" என்று கூறி பூஜை செய்த அக்ஷதைகள் இரண்டினை எடுத்து தலைமீது இட்டு கொள்ளல் வேண்டும்.

"ஸ்ரீமகாகணாதிபதியே நம: யதாஸ்தானம் ப்ரவேசயாமி.

சோபநார்தே க்ஷேமாய புனராகமனாயச" என்று கூறி ஆசமனம் செய்து மேற்கூறியபடி மீண்டும் சங்கல்பம் செய்தல் வேண்டும். "அத ஸ்ரீவரசித்தி விநாயக பூஜாம் கரிஷ்யே ததங்க ப்ராணப்ரதிஷ்டாபனம் கரிஷ்யே" எனக் கூறி வலது கையின் நடுவிரலால் நீரினைக் தொடுதல் வேண்டும்.

## ஸ்ரீவரசித்தி விநாயக ப்ராணபிரதிஷ்டை

விக்ரகம் மீது பூக்களால் சிறிது பஞ்சாமிருதத்தை வைத்து...

"ஓம் ஆம் ஹ்ரீம் க்ரோம் யம் ரம் லம் வம் சம் ஷம் ஸம் ஹம் இத்யாத்யேன ப்ரானப்ரதிஷ்டாபனம் க்ருத்வா நமஸ்க்ருத்வா (நமஸ்காரம் செய்து) ஓம் ஸ்ரீ வரசித்தி விநாயகாய நம:

"ஓம் ஸ்வாமின் சர்வஜகன்னாத யாவ த்பூஜாவஸானகம்
தாவத்த்வம் ப்ரீதிபாவேன பிம்பேSஷ்மின் சன்னிதிம்குரு
அவாஹிதோ பவ ஸ்தாபிதோபவ சுப்ரஸன்னோபவ,
சிரசாணம் குரு அவகுண்டிதோபவ, வரதோபவ, ப்ரஸீத, ப்ரஸீத, ப்ரஸீத" எனக் கூறி விநாயக விக்ரகத்தின் பாதங்களில் அக்ஷதை மலர்களை வைத்து பூஜித்தல் வேண்டும்.

## சோடஷோபசார பூஜை

*பவசஞ்சித பாபௌக வித்வம்சன விசக்ஷணம் ।*
*விக்னாந்தகார பாஸ்வந்தம் விக்னராஜ மஹம் பஜே ॥*
*ஓம் ஏக தந்தம் சூர்பகர்ணம் கஜவக்த்ரகம் சதுர்புஜம்।*
*பாசாங்குசதரம் தேவம் த்யாயேத்ஸித்தி விநாயகம் ॥*
*உத்தமம் கணநாதஸ்ய வ்ரதம் சம்பத்கரம் சுபம் ।*
*பக்தாபீஷ்டப்ரதம் தஸ்மாத் த்யாயேத்தம் விக்னநாயகம் ॥*
*த்யாயத்கஜானனந்தேவம் தப்தகாஞ்சன சன்னிபம் ।*
*சதுர்புஜம் மஹாகாயம் சர்வாபரண பூஷிதம் ॥*
*ஸ்ரீவரசித்தி விநாயக ஸ்வாமினே நம: த்யாயாமி*

விநாயகரின் திருப்பாதங்களில் பூக்கள், அக்ஷதைகள் வைத்து வணங்குதல் வேண்டும்.

## ஆவாஹணம்

ஓம் அத்ராகச்ச ஜகத்வன்த்ய சுரராஜார்சிதேச்வர।
அனாதநாத சர்வஞ்ஞ கௌரீகர்ப சமுத்பவ ॥
ஸ்ரீவரசித்தி விநாயக ஸ்வாமினே நம: ஆவாஹயாமி.

அக்ஷதை போடுதல் வேண்டும்.

## ஆசனம்

மௌக்திகை: புஷ்யராகைச்ச நானாரத்னைர்விராஜிதம்।
ரத்னசிம்ஹசனஞ் சாரு ப்ரீத்யர்தம் ப்ரதிக்ருஹ்யதாம் ॥
ஸ்ரீவரசித்தி விநாயக ஸ்வாமினே நம: ஆசனம் சமர்பயாமி.

மீண்டும் அக்ஷதை அல்லது மலர்களைத் தூவுதல் வேண்டும்.

## அர்க்யம்

கௌரீபுத்ர நமஸ்தேSஸ்து சங்கரப்ரியனந்தன।
க்ருஹாணார்க்யம் மயாதத்தம் கந்தபுஷ்பாக்ஷதைர்யுதம் ॥
ஸ்ரீவரசித்தி விநாயக ஸ்வாமினே நம: அர்க்யம் சமர்பயாமி.

உத்தரணியில் நீரினை ஸ்வாமிக்கு காண்பித்து அர்க்ய பாத்திரத்தில் இடுதல் வேண்டும்.

## பாத்யம்

கஜவக்த்ர நமஸ்தேSஸ்து சர்வாபீஷ்ட ப்ரதாயக ।
பக்த்யாபாத்யம் மயாதத்தம் க்ருஹான த்விரஜாநன ॥
ஸ்ரீவரசித்தி விநாயக ஸ்வாமினே நம: பாத்யம் சமர்பயாமி.

ஸ்வாமியின் திருப்பாதங்களின் அருகே உத்தரணியால் நீரினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

## ஆசமனீயம்

அனாதநாத சர்வக்ஞ கீர்வான கணபூஜித ।
க்ருஹாணாசமனம் தேவ துப்யம் தத்தம் மயாப்ரபோ॥
ஸ்ரீவரசித்தி விநாயக ஸ்வாமினே நம: ஆசமனீயம் சமர்பயாமி.

ஸ்வாமிக்கு சிறிது நீரினைக் காண்பித்து அர்க்ய பாத்திரத்தில் இடுதல் வேண்டும்.

## மதுபர்கம்

ததிக்ஷீரசமாயுக்தம் மத்வாஜ்யேன சமன்விதம் ।
மதுபர்கம் க்ருஹாணேதம் கஜவக்த்ர நமோSஸ்துதே॥
ஸ்ரீவரசித்திவிநாயக ஸ்வாமினே நம: மதுபர்கம் சமர்பயாமி.

ஸ்வாமிக்கு தேன் சமர்பித்தல் வேண்டும்.

## பஞ்சாமிருத ஸ்நானம்

பஞ்சாம்ருதைர்தேவ க்ருஹான கணநாயக ।
அனாதநாத சர்வஞ்ஞ கீர்வான கணபூஜித பஞ்சாம்ருத
ஸ்நானம் சமர்பயாமி ॥

விக்ரகத்தின் மீது பஞ்சாமிர்தத்தை தெளித்தல் வேண்டும்.

**சுத்தோதக ஸ்நானம்**

கங்காதி சர்வ தீர்தேப்ய: ஆஹ்ருதை ரமலைர்ஜலை: ।
ஸ்நானம் குருஷ்ய பகவன்னுமாபுத்ர நமோ ऽஸ்துதே ॥
சுத்தோதக ஸ்நானம் சமர்பயாமி.

கலச நீரினால் ஸ்நானம் செய்யவும்.

**வஸ்திரம்**

ரக்த வஸ்த்ரத்வயம் சாரு தேவயோக்யன்ச மங்களம் ।
சபப்ரதம் க்ருஹாணத்வம் லம்போதர ஹராத்மஜ ॥
வஸ்த்ரயுக்மம் சமர்பயாமி. வஸ்திரம் சமர்பிக்கவும்.

**யக்ஞோபவீதம்**

ராஜிதம் ப்ரஹ்மசூத்ரன்ச காஞ்சனன்சோத்தரீயகம் ।
க்ருஹாண தேவ சர்வதக்ஞ பக்தானாமிஷ்டதாயக ॥
உபவீதம் சமர்பயாமி. பூணூல் சமர்பிக்கவும்.

**கந்தம்**

சந்தநாகரு கற்பூர கஸ்தூரி குங்குமான்விதம் ।
விலேபனம் சுரச்ரேஷ்ட ப்ரீத்யர்தம் ப்ரதிக்ருஹ்யதாம் ॥
கந்தம் சமர்பயாமி. சந்தனத்தால் அலங்கரிக்கவும்.

**அக்ஷதை**

அக்ஷதான் தவளான் திவ்யான் சாலீயான் தண்டுலான் சுபான் ।
க்ருஹாண பரமானந்த சம்புபுத்ர நமோ ऽஸ்துதே ॥
அக்ஷதான் சமர்பயாமி. அஷதை சமர்பிக்கவும்.

**புஷ்பம்**

சுகதினிச சு புஷ்பாணி ஜாஜீகுந்தமுகானி ச ।
ஏகவிம்சதி பத்ராணி சங்க்ருஹாண நமோ ऽஸ்துதே ॥
புஷ்பாணி பூஜயாமி. மலர்களால் பூஜிக்கவும்.

**அங்க பூஜை**

கீழே உள்ள திருநாமங்களை ஒருவர் கூற மற்றோர் அக்ஷதைகளால் பூஜிக்கவும்.

ஓம் கணேசாய நம: – பாதௌ பூஜயாமி
ஓம் ஏகதந்தாய நம: – குல்பௌ பூஜயாமி
ஓம் சூர்பகர்ணாய நம: – ஜானுனீ பூஜயாமி
ஓம் விக்னராஜாய நம: – ஜங்கே பூஜயாமி
ஓம் ஆகுவாஹனாய நம: – ஊரூ பூஜயாமி
ஓம் ஹேரம்பாய நம: – கடிம் பூஜயாமி
ஓம் லம்போதராய நம: – உதரம் பூஜயாமி
ஓம் கணநாதாய நம: – நாபிம் பூஜயாமி
ஓம் கணேசாய நம: – ஹ்ருதயம் பூஜயாமி
ஓம் ஸ்தூலகண்டாய நம: – கண்டம் பூஜயாமி
ஓம் ஸ்கந்தாக்ரஜாய நம: – ஸ்கந்தௌ பூஜயாமி
ஓம் பாசஹஸ்தாய நம: – ஹஸ்தௌ பூஜயாமி
ஓம் கஜவக்த்ராய நம: – வக்த்ரம் பூஜயாமி
ஓம் விக்னஹந்த்ரே நம: – நேத்ரே பூஜயாமி
ஓம் சூர்பகர்ணாய நம: – கர்ணௌ பூஜயாமி
ஓம் பாலசந்த்ராய நம: – லலாடம் பூஜயாமி
ஓம் சர்வேஸ்வராய நம: – சிர: பூஜயாமி
ஓம் விக்னராஜாய நம: – சர்வாண்யங்கானி பூஜயாமி

**ஏகவிம்சதி பத்ர பூஜை**

ஒவ்வொரு நாமம் கூறும்போதும் அடைப்புக் குறியில் உள்ள இலைகளால் பூஜித்தல் வேண்டும்.

ஓம் சுமுகாய நம: மாசீ பத்ரம் பூஜயாமி (மாசி)
ஓம் கணாதிபாய நம: ப்ருஹதீபத்ரம் பூஜயாமி (ப்ருஹதி)
ஓம் உமாபுத்ராய நம: பில்வ பத்ரம் பூஜயாமி(வில்வம்)
ஓம் கஜானனாய நம: தூர்வாயுக்மம் பத்ரம் பூஜயாமி (அருகம்புல்)
ஓம் ஹரசூனவே நம: தத்தூர பத்ரம் பூஜயாமி (ஊமத்தை)
ஓம் லம்போதராய நம: பதரீபத்ரம் பூஜயாமி (இலந்தை)
ஓம் குஹாக்ரஜாய நம: அபாமார்க பத்ரம் பூஜயாமி (உத்தரேணி)
ஓம் கஜகர்ணாய நம: துளசீ பத்ரம் பூஜயாமி (துளசி)
ஓம் ஏகதண்டாய நம: சூதபத்ரம் பூஜயாமி (மாவிலை)
ஓம் விகடாய நம: கரவீர பத்ரம் பூஜயாமி (அரளி)
ஓம் பின்னதன்தாய நம: விஷ்ணு க்ராந்தபத்ரம் பூஜயாமி (விஷ்ணு கிராந்தி)
ஓம் வடவே நம: தாடிமீ பத்ரம் பூஜயாமி (மாதுளை)
ஓம் சர்வேஸ்வராய நம: தேவதாரு பத்ரம் பூஜயாமி (தேவதாரு)
ஓம் பாலசந்த்ராய நம: மருவக பத்ரம் பூஜயாமி (மருவு)
ஓம் ஹேரம்பாய நம: சிந்துவார பத்ரம் பூஜயாமி (நொச்சி)
ஓம் சூர்பகர்ணாய நம: ஜாஜீ பத்ரம் பூஜயாமி (மல்லி)
ஓம் சுராக்ரஜாய நம: கண்டகீ பத்ரம் பூஜயாமி (புல்(அ)அருகம் புல்)
ஓம் இபவக்த்ராய நம: சமீ பத்ரம் பூஜயாமி (வன்னி)
ஓம் விநாயகாய நம: ஆஸ்வத்த பத்ரம் பூஜயாமி (அரசு)
ஓம் சுரசேவிதாய நம: அர்ஜுன பத்ரம் பூஜயாமி (மருதம்)
ஓம் கபிலாய நம: அர்கபத்ரம் பத்ரம் பூஜயாமி (வெள் எருக்கை)
ஓம் ஶ்ரீகணேஸ்வராய நம: ஏகவிம்சதி பத்ரம் பூஜயாமி

பின்னர் ஶ்ரீவிநாயக அஷ்டோத்தர சத நாமாவளி கூறியபடி ஸ்வாமியை பூக்கள் அல்லது அக்ஷதையால் பூஜித்தல் வேண்டும்.

# விநாயக அஷ்டோத்தர சத நாமாவளி

ஓம் கஜானநாய நம:
ஓம் கணாத்யக்ஷாய நம:
ஓம் விக்னராஜாய நம:
ஓம் விநாயகாய நம:
ஓம் த்வைமாதுராய நம:
ஓம் த்விமுகாய நம:
ஓம் ப்ரமுகாய நம:
ஓம் சுமுகாய நம:
ஓம் க்ருதினே நம:
ஓம் சுப்ரதீபாய நம: (10)
ஓம் சுகநிதயே நம:
ஓம் சுராத்யக்ஷாய நம:
ஓம் சுராரிக்னாய நம:
ஓம் மகாகணபதயே நம:
ஓம் மான்யாய நம:
ஓம் மகாகாலாய நம:
ஓம் மஹாபலாய நம:
ஓம் ஹேரம்பாய நம:
ஓம் லம்பஜடராய நம:
ஓம் ஹ்ரஸ்வக்ரீவாய நம: (20)
ஓம் மஹோதராய நம:
ஓம் மதோத்கடாய நம:
ஓம் மஹாவீராய நம:
ஓம் மந்த்ரிணே நம:
ஓம் மங்களஸ்வராய நம:
ஓம் ப்ரமதாய நம:
ஓம் ப்ரதமாய நம:
ஓம் ப்ராக்ஞாய நம:
ஓம் விக்னகத்ர்ரே நம:
ஓம் விக்ன ஹந்த்ரே நம: (30)
ஓம் விஸ்வநேத்ரே நம:
ஓம் விராட்பதயே நம:
ஓம் ஸ்ரீபதயே நம:
ஓம் வாக்பதயே நம:
ஓம் ச்ருங்காரிணே நம:
ஓம் ஆச்ரிதவத்ஸலாய நம:
ஓம் சிவப்ரியாய நம:
ஓம் ப்ரமுகாய நம:
ஓம் சீக்ரகாரிணே நம:
ஓம் பலாய நம: (40)
ஓம் பலோத்ததிதாய நம:
ஓம் பவாத்மஜாய நம:
ஓம் புராணபுருஷாய நம:
ஓம் பூஷ்ணே நம:
ஓம் புஷ்கரோக்ஷிப்த வாரிணே நம:
ஓம் அக்ரகண்யாய நம:
ஓம் அக்ரபூஜ்யாய நம:
ஓம் அக்ரகாமினே நம:
ஓம் மந்த்ரக்ருதே நம:
ஓம் சாமிகரப்ரபாய நம: (50)
ஓம் சர்வ கத்ரே நம:
ஓம் சர்வ நேத்ரே நம:
ஓம் சர்வஸ்மை நம:
ஓம் சர்வோபாஸ்யாய நம:
ஓம் சர்வசித்தி ப்ரதாய நம:
ஓம் சர்வசித்தயே நம:
ஓம் பஞ்சஹஸ்தாய நம:
ஓம் பார்வதீ நந்தனாய நம:
ஓம் ப்ரபவே நம:
ஓம் குமார குரவே நம: (60)
ஓம் அக்ஷௌப்யாய நம:
ஓம் குஞ்ஜராசுரபஞ்ஜனாய நம:
ஓம் ப்ரமோதத்தனனாய நம:
ஓம் மோதகப்ரியாய நம:
ஓம் காந்திமதே நம:
ஓம் த்ருதிமதே நம:
ஓம் காமினே நம:
ஓம் கபித்த பனசப்ரியாய நம:
ஓம் ப்ரஹ்மசாரிணே நம:
ஓம் ப்ரஹ்ம ரூபிணே நம: (70)
ஓம் ப்ரஹ்ம வித்யாதிதானபுவே நம:
ஓம் ஜிஷ்ணவே நம:
ஓம் விஷ்ணு ப்ரியாய நம:
ஓம் பக்த ஜீவிதாய நம:
ஓம் ஜீதமன்மதாய நம:
ஓம் ஐச்வர்ய காரணாய நம:
ஓம் ஜ்யாயஸே நம:
ஓம் யக்ஷகின்னர சேவிதாய நம:
ஓம் கங்காசுதாய நம:
ஓம் கணாதீசாய நம: (80)
ஓம் கம்பீரனினதாய நம:
ஓம் வடவே நம:
ஓம் அபீஷ்டவரதாய நம:
ஓம் ஜ்யோதிஷே நம:
ஓம் பக்த நிதயே நம:
ஓம் பாவகம்யாய நம:
ஓம் மங்களப்ரதாய நம:
ஓம் அவ்யக்தாய நம:
ஓம் அப்ராக்ருத பராக்ரமாய நம:
ஓம் சத்யதர்மிணே நம: (90)
ஓம் சகயே நம:
ஓம் சரசாம்புநிதயே நம:
ஓம் மஹேசாய நம:
ஓம் திவ்யாங்காய நம:
ஓம் மணிகிங்கிணீமேகலாய நம:
ஓம் சமஸ்ததேவதா மூர்தயே நம:
ஓம் சஹிஷ்ணவே நம:
ஓம் சததோத்திதாய நம:
ஓம் விகாதகாரிணே நம:
ஓம் விஸ்வக்த்ருசே நம: (100)
ஓம் விஸ்வரக்ஷாக்ருதே நம:
ஓம் கல்யாண குரவே நம:
ஓம் உன்மத்தவேஷாய நம:
ஓம் அபராஜிதே நம:
ஓம் சமஸ்த ஜகதாதாராய நம:
ஓம் சர்வைஸ்வர்ய ப்ரதாய நம:
ஓம் ஆக்ராந்திசிதசித்ப்ரபவே நம:
ஓம் விக்னேஸ்வராய நம:
ஓம் வரசித்தி விநாயக ஸ்வாமினே நம:

**அஷ்டோத்திர சதநாமபூஜாம் சமர்ப்பயாமி**

அட்சதை – மலர்களை திருப்பாதங்களில் சமர்பித்தல் வேண்டும்.

**தூபம்**

*தசாங்கம் குக்குலோபேதம் சுகந்தம் சுமனோஹரம்।*
*உமாசுத நமஸ்துப்யம் க்ருஹாண வர தோபவ ॥*
*திவ்ய பரிமள தூபமாக்ராபயாமி.*

அகர்பத்தி காண்பிக்கவும்.

**தீபம்**

*ஸாஜ்யம் த்ரிவர்திசம்யுக்தம் வஹ்னிநா யோதிதம் மயா।*
*க்ருஹாண மங்களம் தீபம் ஈசபுத்ர நமோஸ்துதே॥*
*தீபம் சமர்பயாமி.*

தீபத்தை காண்பித்தல் வேண்டும்.

**நைவேத்யம்**

உடைத்த தேங்காய், பலகாரங்கள், வடை பருப்பு, பழங்கள் முதலானவற்றை ஸ்வாமிக்கு முன்னர் நைவேத்தியம் வைத்தல் வேண்டும்.

சுகந்தான் சுக்ருதான்ச் சைவ மோதகான்க்ருத பாசிதான் ।
நைவேத்யம் க்ருஹ்யதாம் தேவ சரண முத்கை: ப்ரகல்பிதான் ॥
பக்ஷ்யம் போஜ்யம் ச லேஹ்யன் ச சோஷ்யம் பானீய மேவசஇதம்
க்ருஹாண நைவேத்யம் மயா தத்தம் விநாயக மஹாநைவேத்யம் சமர்பயாமி.

நைவேத்யத்தின் மீது சிறிது நீரினைத் தெளித்து ஸ்வாமிக்குப் படைத்தல் வேண்டும்.

**தாம்பூலம்**

பூகீ பலசமாயுக்தம் நாகவல்லீதளைர்யுதம் ।
கற்பூர சூர்ண சம்யுக்தம் தாம்பூலம் ப்ரதிக்ருஹ்யதாம்॥
தாம்பூலம் சமர்பயாமி.

வெற்றிலை, பாக்கு, பழம், தக்ஷிணையோடு தாம்பூலம் சமர்பித்தல் வேண்டும்.

**புஷ்பம்**

சச்சிதானந்த விக்னேச புஷ்கலானி தனானி ச।
பூம்யான்ஸ்திதானி புஷ்பாணி ஸ்வீகுருஷ்ய வினாயக ॥
ஸ்வர்ணமந்த்ரபுஷ்பம் சமர்பயாமி.

**நீராஜனம்**

க்ருதவர்தி சஹஸ்ரைச்ச கற்பூர சகலைஸ்ததா ।
நீராஜனம் மயாதத்தம் க்ருஹான வரதோபவ ॥
ஆனந்த கற்பூர நீராஜனம் சமர்பயாமி.

கற்பூர ஹாரதி காண்பித்த பிறகு ஹாரதி தட்டின் மீது நீரினைத் தெளித்து கண்களுக்கு ஒற்றிக் கொள்ளல் வேண்டும்.

**புஷ்பாஞ்சலி**

மலர்கள், அக்ஷதைகளை எடுத்து கொண்டு நின்றபடி இச்சுலோகத்தைத் துதித்தல் வேண்டும்.

சமுகச்சைகதந்தச்ச கபிலோ கனாகர்ணக:
லம்போதரச்ச்விகடோ விக்னராஜோ கணாதிபா
தூமகேது கணாத்யக்ஷோ பாலசந்த்ரோ கஜானன:
வக்ரதுண்ட மஹாகாய கோடிசூர்ய சமப்ரப
அவிக்னம் குருமே தேவா சர்வகார்யேஷு சர்வதா ॥
மந்த்ர புஷ்பாஞ்சலி சமர்பயாமி.

**பிரதக்ஷிண நமஸ்காரம்**

யானி கானி ச பாபானி ஜன்மாந்தர க்ருதானி ச ।
தானிதானி ப்ரணச்யன்தி ப்ரதக்ஷிண பதே பதே ॥
பாபோஹம் பாபகர்மோஹம் பாபாத்மா பாப சம்பவ: ।
த்ராஹிமாம் க்ருபயா தேவ சரணாகத வத்ஸல ॥
அன்யதாசரணம் நாஸ்தி த்வமேவ சரணம் மம
தஸ்மாத்காருண்யபாவேன ரக்ஷரக்ஷ கணாதிபா
ஆத்மப்ரதக்ஷிண நமஸ்காரான் சமர்பயாமி

பிரதக்ஷிணம் செய்து வணங்கவும். அதன் பின் மீண்டும் அமர்ந்து சிறிது அக்ஷதைகளை கையில் எடுத்து கொள்ள வேண்டும். சிறிது நீரினை அக்ஷதை மீது தெளித்து இச்சுலோகம் கூறுதல் வேண்டும்.

**க்ஷமா பிரார்த்தனை**

யஸ்ய ஸ்ம்ருத்யாச நாமோக்த்யா தப:பூஜா க்ரியாதீஷு
ந்யூனம் சம்பூர்னதாம் யாதி சத்யோ வந்தே தம் கணாதிபம்।
மந்த்ரஹீனம் க்ரியாஹீனம் சக்திஹீனம் மஹப்ரபோ
யத்பூஜிதம் மயா தேவ! பரிபூர்ணம் த தஸ்து தே!
அனயா த்யான நாவஹனாதி சோடஷோபசார பூஜ யாச
அஷ்டோத்தர நாமார்சனயாச அவசர மஹாணிவேதனயாச
பகவான் சர்வாத்மக:சர்வம் ஸ்ரீமஹாகணாதிபதி தேவதார்பண மஸ்து
ஸ்ரீமஹாகணாதிபதி தேவதா சுப்ரீத: சுப்ரஸன்னோ வரதோ பவது॥

எனக்கூறி அக்ஷதை, நீரினை விடுதல் வேண்டும்.

அகால ம்ருத்யுஹரணம் சர்வவ்யாதி நிவாரணம் சமஸ்த
பாபக்ஷயகரம் ஸ்ரீமஹாகணபதி பாதோதகம் பாவனம் சுபம்

பஞ்சாமிருதம், தேங்காய் நீரை தீர்த்தமாக எடுத்து கொள்ளவும். பூஜைக்குப் பின்னர் அக்ஷதைகளை தலைமீது போட்டுக் கொள்ளவும். சர்வே ஜன சுகினோ பவந்து, ஓம் சாந்தி சாந்தி சாந்தி எனக் கூறி வினாயகரின் விரத கதையைப் படித்தல் வேண்டும்.

**விநாயகர் விரத கதை**

தர்மராஜன் கௌரவர்களிடம் பகடையாடி தோற்று, ராஜ்யத்தை இழந்தான். தன் தம்பிகள் மற்றும் மனைவியோடு வனத்திற்குச் சென்றான். அவ்வனத்தில் சூத மகரிஷியின் ஆசிரமத்திற்குச்

சென்றான். மகரிஷியை வணங்கி "மகாத்மா! கௌரவர்கள் அரசுரிமையைக் கைப்பற்றி எங்களை வனத்திற்கு அனுப்பினர். தாங்கள்தான் கருணை காட்டி மீண்டும் அரசு உரிமையைப் பெறுவதற்கான வழியைக் கூறுதல் வேண்டும்" எனக் கோரினான்.

அப்போது சூத மகரிஷி "பாண்டவர்களே! அனைத்து விரதங்களிலும் மிக உன்னதமான விரதம் ஒன்று உள்ளது. அந்த விரதம் மானிடர்களுக்கு அனைத்து செல்வங்களையும், போக பாக்கியங் களையும்அளித்து பாவங்களை அழிக்கக் கூடியது. இவ்விரதத்தைக் குறித்து பரமசிவன் தன் மைந்தன் குமார ஸ்வாமிக்கு உபதேசித்தார். அதனை உங்களுக்கு கூறுகிறேன் கேளுங்கள்" என்றார்.

ஒரு முறை சிவபெருமானிடம் குமார ஸ்வாமி "ஸ்வாமி! நல்ல புதல்வர்கள், தன தானியங்கள் பெறுவதற்கான வழியைக் கூறுங்கள்" என்று கேட்டார். அதற்கு சிவபெருமான் "குமாரா அனைத்து செல்வங்களும் கிட்டுவதற்கான சிறந்த விரதம் விநாயகர் விரதம் ஆகும். அந்த விரதத்தை பாத்ரபத (ஆவணி) சுக்ல சதுர்த்தி அன்று கடைப்பிடித்தல் வேண்டும்" என்று கூறினார்.

இவ்விரதத்தை தேவதைகளும், முனிவர்களும், கந்தர்வர்களும், கின்னரர்களும் பக்தியோடு கடை பிடித்துள்ளனர். தர்மராஜா நீயும் இந்த விரதத்தை மேற்கொள். உனக்கு வெற்றி, அரசு உரிமை, செல்வங்கள் கிட்டிடும். இந்த விரதத்தை கடை பிடித்து தமயந்தி நளனை கணவனாக அடைந்தாள்.

ஒருமுறை விநாயகர் சதுர்த்தி அன்று விநாயகரைப் பார்த்து சந்திரன் ஏளனமாகச் சிரித் தான். அதனைக் கண்டு பார்வதிதேவி கோபமுற்றார். சந்திரா சதுர்த்தியன்று உன்னை பார்ப்பவர்கள் நீங்காத பழியை அடைவர் எனச் சாபம் அளித்தார். தன் தவறை உணர்ந்த சந்திரன் பார்வதி தேவியிடம் மன்னிப்புக் கோரி சாப விமோசனத்திற்கு வழியைக் கேட்டான். அதற்கு பார்வதி தேவி பாத்ரபத (ஆவணி) மாதம் சதுர்த்தி அன்று விரதமிருந்து விநாயகரை வழிபட்டால் இன்னல்கள் நீங்கும் என்றார். பாத்ரபத (ஆவணி) மாதத்தில் சுத்த சதுர்த்தி அன்று ஒரு வேளை சந்திரனைக் கண்டால் அன்றைய பகலில் விநாயகர் விரதம் கடைபிடித்தளால் எப்பேற்பட்ட பழியும் நீங்கும் என்று சூதர் தர்மராஜாவிடம் கூறினார்.

பகிரதன் கங்கையை பூமிக்கு வர வைத்த தும், தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து அமிர்தம் பெற்றதும், சாம்பவான் தன் தொழுநோய் நீங்கப் பெற்றதும் இவ்விரதத்தை மேற்கொண்ட தால்தான் என சூதர் மேலும் விவரித்தார்.

சூதர் கூறியபடி தர்மராஜாவும் இந்த விரதத்தை பக்தியோடு கடைபிடித்து எதிரிகளை அழித்து மீண்டும் அரசு உரிமையைப் பெற்றான். விநாயகரை வழிபடுவதால் அனைத்து கோரிக்கைகளும் நிறை வேறும். ஆதலால்தான் அப்பெருமானை "வரசித்தி விநாயகர்" என்கின்றனர்.

விநாயகப் பெருமானை வழிபடுவதால் கல்வி ஞானம், நல்ல மக்கட்பேறு, சிறந்த மணாளன், சௌபாக்கியம் யாவும் கிடைத்திடும்.

## உத்யாபன

**யக்ஞேன யக்ஞ மயஜந்த தேவா: தானி தர்மாணீ ப்ரதமான்யசன்**
**தே ஹனாகம் மஹிமான: சசந்தே யத்ரபூர்வே சாத்யா ஸ்ஸந்தி தேவா:**


**ஶ்ரீமஹாகணாதிபதயே நம: யதாஸ்தானம் ப்ரவேசயாமி**
**சோபனார்தம் புனராகமனாயச**

எனும் மந்திரம் படித்து விநாயகப் பெருமானை ஈசான்ய திசையில் திருப்பி ஸ்வாமிக்கு உத்யாபனம் கூறுதல் வேண்டும்.

நித்ய பூஜை செய்து சதுர்த்தியில் இருந்து 3,5,7,9,11 நாட்களில் நிமஜ்ஜனம் செய்வோர் இந்நாட்களில் இம்மந்திரத்தைப் படித்தல் வேண்டும்.

## பூஜையின் பலன் :

விநாயகர் முழுமுதற்கடவுள். அவரை பூஜிப்பதால் சகல செல்வங்களை அடைந்து, வீண் பழி பாவங்களில் இருந்து விடுபட்டு, முக்தியையும் அடையலாம்.



# திருநெடுங்குன்றம்

– பேராசிரியர் ஜி. நரசிம்மன், அனந்தபுரம்

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

இலட்சுமணன் – சத்துருக்கனன் என்ற இரு புதல்வர்களைச் சுமித்திரை பெற்றெடுத்தாள்.

*தளை அவிழ் தருவுடைச் சயிலகோபனும்*
*கிளையும் அந்தரமிசைக் கெழுமி ஆர்ப்புற*
*அளை புகும் அரவினோடு அலவன் வாழ்வுற*
*இளையவற் பயந்தனள், இளைய மென்கொடி*

–கம்ப பால. திரு. அவதார. 107

*படம் கிளர் பல் தலைப் பாந்தள் ஏந்துபார்*
*நடம் கிளர்தர, மறை நவில நாடகம்*
*மடங்கலும் மகமுமே வாழ்வின் ஓங்கிட*
*விடம் கிளர் விழியினாள் மீட்டும் ஈன்றனள்*

–கம்ப. பால. திரு. அவதார. 108

இவ்வாறு பிறந்து வளர்ந்து வரும் நாளில் இராமனுக்குத் திருமணம் நடந்த பிறகு விதியின் வலிமையால் அரண்ய வாசத்திற்கு வந்த சீதையை இராவணன் கவர்ந்து சென்றான். பின்னர் தம்பி லட்சுமணன் அனுமனுடனும் இலங்கைக்குச் சென்று சீதையை மீட்டுத் திரும்பினர். இராமன் அப்போது சேதுவின் கரையைக் கடந்து என்னைப் பூசித்தார்கள். அதனால் “இராமேஸ்வரம்” எனும் பெயர் வந்தது. மேலும் அவர்கள் இந்த மலையில் நின்று என்னைத் தியானம் செய்தனர். அவருடைய திருவடி பதிந்துள்ள அடையாளத்தை “இதோ இந்தப் பாறையில்தான் உள்ளது காணுங்கள்'' எனக் கட்டளையிட்டார். பிறகு சிவபெருமான் வேதச் சுவடிகளைச் சுகரிடம் கொடுத்து, இதை நன்றாகக் கற்று இவ்வுலகில் நீதி, தர்மம் இவை தலை தூக்க மக்களுக்கு உபதேசம் செய்க என்று கூறி ஆசீர்வதித்தார்.

கிருத யுகத்தில் இராமனாக ஸ்ரீமந்நாராயணன் அவதரித்து அரக்கர்களை அழித்து, தர்மத்தை நிலை நாட்டினார். திருதா யுகத்தில் அதர்மம் எவ்வித இடையூறும் இன்றி வளர்ந்து துவாபர யுகத்தில் நலிந்து கலியுகத்தில் தர்மம் மறையும் நிலைக்கு வந்து விட்டது. எனவே, இந்த வேதச் சுவடியை நன்றாகக் கற்று இவ்வுலக மக்களுக்கு உபதேசம் செய்து தர்மத்தை மீண்டும் நிலை நாட்டுக” எனக் கூறினார். சிவன் மேலும் “நீர் இங்கு தவம் செய்த காரணத்தினால் இந்த மலைக்கு சுகப்பிரம்ம ரிஷி பர்வதம் எனும் பெயரால் விளங்கும்” என்று கூறி ஆசிர்வதித்தார்.

“நான் தங்களைத் துதித்து தவம் செய்த காரணத்தினால் இம்மலைக்குச் சுகபிரம்மரிஷி மலை எனும் நாமமும் சூட்டினீர்கள். தாங்கள் என் பொருட்டு தீர்க்கநெடு, ஆசாலம் – மலை எனும் பொருளில் நெடுமலை, நெடுங்குன்றாக நின்ற காரணத்தினால் தாங்கள் உமையோடு எழுந்தருளி உம் சந்நிதியை வந்து சேவிக்கும் மக்களுக்குத் தீர்க்காசலேஸ்வரர் என்னும் திருப்பெயரால் அருள வேண்டும்” என்று வேண்டினார்.

*“தக்கரிய நெடுங்குன்றாய் அமர்ந்து ஓங்கி*
*அவனியிலே வாழ்கின்ற மாந்தர் உய்ய*
*தீர்க்க-நெடு அசலம் - குன்று என்று நல்ல*
*திவமுடைய நெடுங்குன்றாய் அமர்ந்து நீங்கள்*
*தீர்க்காசல ஈஸ்வரர் என்று அரும்பேர் தன்னால்*
*இத்தலத்தில் உமையோடு கோயில் கொண்டு*
*எழுந்தருளி''*

(269–270)

பின்னர், சுகப்பிரம்மரிஷி அன்பிற்கு இணங்கி தீர்க்காசலேஸ்வரர் எனும் பெயர் கொண்டு இத்திருத்தலத்தில் சிவன் கோயில் கொண்டார். சுகர் வேதச்சுவடியைப் படிக்கத் தொடங்கினார். ஒன்றும் விளங்காமல் போகவே திருமாலைச் சேவித்தால் அச்சுவடியின் உட்பொருள் விளங்கும் என எண்ணி இராமனின் அடையாளமாக கல்லில் பதிந்துள்ள திருப்பாதங்களைக் கண்டு தொழுதார். அப்போது திருமால் சுகர் முன் தோன்றினார்.

“எம்பெருமானே! நீர் இராம அவதாரம் எடுத்து இராவணனை அழித்து இலங்கையில் இருந்து சீதை இலட்சுமணனோடு அனுமனோடு அயோத்தி நகருக்குத் திரும்பியபோது அடியேன் இல்லை. ஆகையால் யான் கண்டு பாக்கியம் பெறுமாறு தாங்கள் மூவருடன் சென்றதையும் அயோத்தியில் மகுடம் தரித்து அமர்ந்து இச்சுவடியில் உள்ள வேதத்தின் உட்பொருளை உரைக்க வேண்டும்'' என்று வேண்டினார். உடனே சுகருக்குத் திருமால் ஞானக் கண்களைக் கொடுத்தார். சுகர் இராமன், இலட்சுமணன் சீதை அனுமனுடன் திருமால், திருநெடுங்குன்றத்தில் காட்சியளித்தார் அப்போது,

*''தேவுடைய மீனமாய் ஆமையாய் ஏனமாய்*
*அரியாய்க் குரளாய்*
*மூவுருவில் ராமனாய்க் கண்ணனாய் கற்கியாய்*
*முடிப்பான் கோயில்''*

–பெரிய திருமொழி 4.9.9

என்ற ஆழ்வாரின் பாசுரத்திற்கேற்ப சுகர் தச ஆவதாரங்களை நினைத்து மனதில் துதிக்கலானார். உடனே எம்பெருமான் திருமால் சுகரிடமிருந்து பெற்ற சுவடியை அனுமனிடம் கொடுத்தார். பக்தியுடன் சுவடியைப் பெற்றுக் கொண்ட அனுமன், தாயார் எதிரில் பத்மாசனம் இட்டு அமர்ந்து படிக்கலானார். அனுமனின் குரல் கேட்டு அனைவரும் பரவசம் அடைந்தனர். அனுமனின் குரல் வளத்தைக் கண்டு மகிழ்ச்சியுற்ற திருமால் அனுமனின் கல்வி ஆற்றலைப் புகழ்ந்து பாராட்டி “முக்திகோபநிஷத்” என்னும் உபநிடத்தை உபதேசம் செய்தார்.

பின்னர், சிவன் அளித்த ஓலைச்சுவடியின் பொருளைத் திருமால் வழி உணர்ந்து மகிழ்ச்சி உற்றார் சுகர். பிறகு, திருமாலை நோக்கி “இறைவா, தங்கள் அருளினால் ஞானக்கண் பெற்று இராம லக்ஷமணன் சீதை அனுமன் இவர்கள் அளித்த தரிசனத்தைக் கலியுகத்தில் மக்களும் கண்டு களிக்க வேண்டும்.

ஆதலால் இத்தலத்தில் சிவபெருமான் தீர்க்காசலேஸ்வரர் எனும் திருப்பெயரால் எழுந்தருளியிருத்தல் போன்று தாங்களும் லட்சுமணன், அனுமன் சீதை, சமேதரராக ஸ்ரீராமச்சந்திர பெருமாள் எனும் திவ்விய நாமத்தோடு இத்தலத்தில் இன்று இருக்கும் தன்மைபோல் என்றும் வீற்றிருந்து அருள் பாலிக்க வேண்டும்” என்று சுகர் வேண்டினார். அதற்குத் திருமால் புன்முறுவல் பூத்து “உமது விருப்பத்தின் படியே நாம் இங்குக் கோயில் கொண்டு மக்களுக்கு வரம் அளிப்போம்” என உரைத்தார்.

சுகப்பிரம்ம ரிஷி பெரிதும் மகிழ்ச்சியுற்று ஸ்ரீராமச்சந்திர பெருமாளைச் சேவித்து ஆசி பெற்றுக் கொண்டு தீர்க்காசலேஸ்வரர் கோயிலுக்குச் சென்றார். இலிங்க வடிவத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானை வலம் வந்து வணங்கி அப்பெருமானின் ஆசியும் பெற்றார்.

*''ஓங்கிடும் தீர்காசல ஈசனையும்*
*ஒன் ராமச்சந்திர பெருமாள் தனையும்*
*பாங்குடை நன்மன மலரைக் கொண்டு*
*வாதம் பணிந்து வணங்குவோர் எல்லாம்*
*நீங்கிடா செல்வம் அனைத்தும் பெற்று*
*நீர் உலகில் நலமாக வாழ்வோம் வாழ்ந்து*
*தேங்கிடும் பொருளினனோடு வான் உலகத்தில்*
*தேவராக வீற்றிருப்பாரே''* (311)

*முற்றும்.*

**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.**

**பக்தர்களுக்கு விண்ணப்பம்**

திருமலையில் திருமுடிக்காணிக்கையைச் செலுத்துவது பாரம்பரியமாகக் கடைபிடிக்கப்பட்டு வருகின்ற ஒரு நேர்த்தி கடனாகும். திருமலையில் தலைமுடிக் காணிக்கைச் செலுத்துவதற்கு எவ்விதமான கட்டணத்தையும் தி.தி.தே. பெறுவதில்லை. ஆகையால் பக்தர்கள் தலைமுடிக் காணிக்கையைச் செலுத்தும்போது முடி இறக்குபவர்கள் பணம் கேட்டால் அவர்களின் விவரங்களை டோல்ப்ரீ எண். **1800-425-4141** க்குத் தெரிவியுங்கள்.

– செயலாட்சித் தலைவர்

# குறுக்கெழுத்துப் புதிர் -109

### இடமிருந்து வலம்


1. வில் விஜயனுக்கு கிருஷ்ணர் …(9) தேரோட்டினார்.
8. இதிலிருந்து கண்ணன் எழுப்புவது வேணு கானம்…(7).
9. திரௌபதியின் மானத்தை கிருஷ்ணர்…(5) அளித்து காத்தார்.
17. வேதவியாசர் எழுதிய கண்ண பரமாத்மாவின் வரலாற்று நூல்…(8)
18. மருத மரமாக இருந்து சாப விமோட்சனம் பெற்றவர்கள்…(11)

### வலமிருந்து இடம்

05. பாலகன் கண்ணனுக்கு பூதனை ஊட்டிய நஞ்சுபால் …(8) மாறியது.
11. கிருஷ்ணருடன் வசுதேவர் நதியை கடக்க வழி விட்டவர்….(5)
14. பிருந்தாவனத்தில் கோவிந்தனிடம் பிரேமை கொண்ட பெண்கள்…(4)

### மேலிருந்து கீழ்

01. துரியோதனனின் அவைக்கு கிருஷ்ணர்…(8)ச் சென்றார்.
02. ஸ்ரீகிருஷ்ணரின் மீது பாரதியார் பாடியது…(4).
03. கண்ணனைக் கொல்ல சகடா சுரன் வந்த ரூபம் வண்டிச்…(5).
04. ஸ்ரீகிருஷ்ணர் அருளிய கீதையில் 11வது அத்யாயம்…(9) யோகம்.
05. கண்ணபிரானைக் கொல்ல பூதனை வந்த தோற்றம்…(10).
06. பார்த்தனுக்கு நம்பிக்கை ஏற்பட பரந்தாமன் காட்டியது…(5) தரிசனம்.
07. கண்ணன்…(5) தலைமீது நடனம் ஆடினார்.



தொகுப்பு : திரு.டி.ஆர். மனோகர், தஞ்சாவூர், 99426 44807.

புதிருக்கு விடை அறிய 44ம் பக்கம் பார்க்கவும்…

10. ருக்மணியை கண்ணன் கவர்ந்து வந்த தேசம்…(5) நாடு.
12. ஸ்ரீகிருஷ்ணர் குழந்தையாக வாழ்ந்த கோகுலம்…(3) பாடி.
13. பாமரர்களுக்காக பகவான் போதித்தது…(4) கீதை.
14. மாதவனை மணக்க மார்கழி நோன்பிருந்தவள்…(2)

### கீழிருந்து மேல்

15. வசுதேவருக்கும் தேவகிக்கும் ஸ்ரீகிருஷ்ணன் பிறந்தது…(5) குழந்தை.
16. கரிய திருமேனியுடைய திருமாலுக்கு “கண்ணன்” என்று பெயர் சூட்டியவர் …(4) முனிவர்.
19. வத்சாசுரன் என்ற அசுரன் கிருஷ்ணரைக் கொல்ல வந்த தோற்றம்…(8)
20. ஸ்ரீகிருஷ்ணர் அவதார சமயத்தில் மஹாலக்ஷ்மித் தாயார் … (4)யாக அவதரித்தாள்.

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

தான் பகவான் திருமார்பில் இருப்பதைத் தெரிந்தும், பகவானின் மார்பில் ரிஷி உதைத்ததால் பொறுமையே வடிவாய் இருக்கும் திருமகள் இதனைப் பொறுக்காமல் பகவானைப் பிரிந்து, கோதாவரி நதிக்கரையில் கொல்லாபுரம் என்ற இடத்தில் ஒரு குடிசையில் எழுந்தருளித் தவம் செய்யத் தொடங்கினாள்.

எம்பெருமான், பரமபதத்தையும் விடுத்து பாற்கடலையும் கைவிட்டு, பிராட்டியைத் தேடும் முயற்சியில் திருமலையில் ஒரு புளிய மரத்து அடியில் புற்றில் வாழத் தொடங்கினார். அவதாரங்களிலும் காட்ட இயலாத எளிமைத் தன்மை (ஸௌலப்யம்) அர்ச்சாவதாரத்தில் நன்கு விளங்கும் இடமாகத் திருமலை ஆயிற்று. நாரதரின் தூண்டுதலால் சிவபிரானும், பிரமனும், முறையே பசுவாகவும் அதன் கன்றாகவும் மாறினர். பிராட்டியாகிய திருமகள், பசுவைக் காக்கும் இடைச்சியாக மாறி, திருமலைப் பகுதியில் சந்திரகிரி என்னும் இடத்தை அடைந்து, அந்நகர மன்னனிடம் பசுவையும், கன்றையும் விற்க. விற்பவள் திருமகள். விற்கப்பட்டவர்கள் சிவனும், பிரமனும். எத்தனையோ பிறவிகளில் செய்த மகத்தான புண்ணியம் அந்தப் பசுவின் பாலை, அரச குடும்பத்துக்கே செலவிட வேண்டும் என்பது மன்னனின் உறுதியான கட்டளை.


ஆனால் பால் எங்கு போய்ச் சேர்ந்தது? தினமும் இந்தப் பசு தன்னை மேய்க்கும் இடையனுக்கும் தெரியாமல், மலை மேல் ஏறி, புளிய மரத்தடிப் புற்றில் இடங்கொண்ட எம்பெருமான் மீது பொழிந்தது.


பாலைக் கறந்த பின்பு வெற்று மடியோடு வந்து நிற்கும் பசுவின் செயல், மாடு மேய்க்கும் இடையனுக்கும் நாடு காக்கும் மன்னனுக்கும், முதலில் புரியாத புதிராக இருந்தது. மன்னனின் கடுமையான ஆணையால், இப்பசுவை விடாது பின் தொடர்ந்து இடையன், புற்றின் மீது பசு பால் பொழிவதைக் கண்டு சீற்றம் விஞ்சிய நிலையில், தன் கையில் உள்ளக் கோடரியால், பசுவைத் தாக்கத் தொடங்கியபோது, அந்த அடி, பசுவின் மீது விழாத வண்ணம் தான் மேலே கிளம்பித் தன் தலையால் ஏற்றான் பகவான். காயத்திலிருந்து பெருகிய இரத்த வெள்ளம் பசுவின் மீது படியவும், பசுவானது அரசனின் அரண்மனையை அடைந்து, மணி அடித்துக் கதறியது. மன்னன் பசு காட்டிய வழியில் பின் தொடர்ந்து புற்றைக் கண்டு இரத்தப் பெருக்கோடு கூடிய புற்றையும், அதன் அருகில் இறந்து கிடக்கும் இடையனையும் கண்டு இடையனை யாரோ கொன்றிருக்க வேண்டும் என்று நினைத்து இருந்தபோது புற்றில் இருந்து வெளிவந்த பகவான்

# திருவேங்கடம்

**– உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.**







அரசனை நோக்கி, தனக்குப் பாலூட்டிய பசுவையும் தடுத்து, இடையனின் மரணத்திற்கும் காரணமாகிய அரசன், பேயாய் அலைந்து திரியுமாறு சபித்தான். அரசன் பகவானிடம் சரண்புக "நீயே அடுத்த பிறவியில் ஆகாசராஜன் என்ற பெயரில், இப்பகுதிக்கு மன்னனாக வந்து, பிராட்டியையே பத்மாவதி என்ற பெயரில் மகளாகப் பெறும் வாய்ப்பினைப் பெற்று, அவளை எனக்கு மணம் செய்து கொடுக்கும் பேற்றினைப் பெறுவாய்" என்று ஆசி அருளினார். மேலும், ஆகாசராஜன் தனக்கு, விலை மதிப்பற்ற, மணிகள் பதிக்கப் பெற்ற கிரீடத்தைத் திருமணத்தின் போது அணிவிப்பான் என்றும், அது கலியுகம் முடியும் வரையில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும், தான் அணியப்போவதாகவும் அருளினான்.

இவ்வாறு எம்பெருமான் ஸ்ரீவேங்கடநாதன் அவதரிப்பதற்கு முன்பே, அப்பகுதியில் இரண்யாட்சனை அழித்து, பூமி தேவியைக் காத்த வராகப் பெருமான் கோயில் கொண்டிருந்தார். அதனால் இம்மலைக்கு முதலில் வருகை தந்தது வராகப் பெருமானே. பின்பு வந்தவர்தான் வரம் தரும் பெருமாளான திருவேங்கடவன். வராகப் பெருமானைச் சந்தித்தான் எம்பெருமான். பூமாதேவியின் நாயகனாகிய வராகப் பெருமான் தனக்கு உரிய திருமலைப் பகுதியில் 100 அடி நிலத்தை திருவேங்கடவனுக்கு அளந்து கொடுத்த தோடு தன்னிடம் பணிவிடை புரிந்து வந்த வகுள மாலை என்ற பெயருடைய சிறந்த தாயையும், பணி புரிய அனுப்பினார். (யசோதையே இவள்) யசோதை கண்ணனின் திருமண வைபவத்தைக் கண்டு மகிழாததால் இப்போது வகுளமாலையாக வந்து மகிழ்கிறாள்.

புற்றில் வாழ்ந்தபோது கோடரியால் பெற்ற காயத்திற்கு மருந்திட்டு ஆற்றி, அமுது ஊட்டும் பெரும் பணியை இவள் செய்கிறாள். வராகப் பெருமான் செய்த பேருதவிக்கு ஈடாக, திருவேங்கடவன் தன் வழிபாட்டிற்கு முன்பே பக்த கோடிகள், ஸ்வாமி புஷ்கரணிக் கரையில் விளங்கும் வராக நயினாரை வழிபட்ட பின்பே, தன்னை வழிபட வேண்டும் என்று நியதியை ஏற்படுத்துகிறார்.

ஆகாச ராஜனுக்கு பிராட்டி, பத்மாவதி என்ற திருப்பெயருடன் தோன்றுகிறாள். வேட்டைக்கு சென்ற வேங்கடவன், தோழிய ருடன் விளங்கிய பத்மாவதியைக் கண்டு, அரசனின் சோலைக்குள் அனுமதியின்றி புகுந்த குற்றத் திற்காக கல்லடி படுகிறான்.

"திரேதா யுகத்தில் குசத்து வசர் என்கிற ரிஷி, தமது தவ ஆற்றலால் வேதவதீ என்ற பெயரில், பிராட்டியையே தன் மகளாகப் பெற்றார். பேரழகியான அவள், எம்பெருமானையே தன்



## ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு...

**ஸப்தகிரி சந்தாதாரர்கள் தயவு செய்து முகவரியில் மாற்றம் இருந்தால் அல்லது அதை முறைபடுத்துவதன் பொருட்டு தங்கள் முழு முகவரி, அஞ்சல் எண், செல்போன் எண்ணை அலுவலக பணி நாட்களில் (காலை 10:30 மணி முதல் மாலை 5:00 மணிக்குள்) நேரில் வந்தோ அல்லது தபால் மூலமாகவோ தெரியப் படுத்தவும். மேலும்,** chiefeditortpt@gmail.com **எனும் மின் அஞ்சல் (இமெயில்) வாயிலாகவும் தெரிவிக்கலாம்.**

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே.அச்சகக்கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி – 517507.

கணவனாகப் பெற வேண்டும் என்று கடுந்தவம் செய்ய இலங்கை அரக்கனான இராவணன் வேதவதீயைக் கண்டான்.

காமத்தினால், அவள் தூய்மையைக் கெடுக்க எண்ணி நெருங்க, வேதவதீ தனது அடுத்த பிறவியில், அரக்கர் குலத்தையே தான் வேரோடு அழிக்க இருப்பதாக, அவன் முன் சபதம் செய்து,நெருப்பிலே இறங்கி, தன் வாழ்வை முடித்துக் கொள்கிறாள்.

அவளது புனித சரீரத்தை, அக்னிக் கடவுள், தன் மனைவியிடம் கொடுத்துப் பாதுகாத்து வர, இராமாவதாரத்தில், இராவணன் காமத்தால் பொய் யான தவக்கோலம் கொண்டு, சீதையைக் கவர்ந்து செல்ல வந்தபோது, அக்னிக் கடவுள், தான் இது வரை பாதுகாத்து வந்த வேதவதியைக் குடிசையில் வைத்துவிட்டு, மிதிலைச் செல்வியான சீதையைத் தான் எடுத்துச் சென்று பாதுகாத்து வந்தான்.

இராவணன் வீழ்ச்சி அடைந்து, இராமனால் சீதையின் அக்னிப் பிரவேசம் நடந்தபோது தன்னிடம் வீழ்ந்த வேதவதியையும், தன் பாதுகாப்பில் இருந்த மிதிலைச் செல்வியையும் இராமனின் திருவடியில் அர்ப்பணித்து இருவரையும் ஏற்க வேண்டுகிறான் அக்னி.

இராமன் ஏகபத்னீ விரதத்தை தான் எடுத்து உள்ளமையால், இப்பிறவியில் மிதிலைச் செல்வி ஒருத்தியையே தான் மனைவியாக ஏற்க முடியும் என்றும், வேதவதியைப் பத்மாவதி என்ற பெயரில், கலியுகத்தில் அர்ச்சாவதார நிலையில் திருமணம் செய்து கொள்வேன் என்றும் அக்னிக்குக் கொடுத்த வாக்கினை நிறைவேற்றுவதற்காக, திருவேங்கடவனாக வந்துள்ளான்” என்றும் திருமலை தலபுராணம் சொல்கிறது.

*திருவேங்கடம் திவ்ய தேசம் தொடர்ந்து தரிசிப்போம்...*

## ஸப்தகிரி ஜூன் 2025 விடைகள்

1. விஷ்வக்சேனர்.
2. நாராயணகிரி.
3. அமிர்தவல்லி.
4. திருமலையப்ப ஸ்வாமி.
5. பாரதியார்.
6. சோளிங்கர்.
7. ஸ்ரீஅர்த்தநாரீஸ்வரர்.
8. ஸ்ரீராமபிரான்.
9. அப்பளாயகுண்ட்டா.
10. ஆழ்வார் திருநகரி.
11. சதானந்த முனிவர்.
12. தை மாதம், ஹஸ்த நட்சத்திரம்.
13. பூதத்தாழ்வார்.
14. யோக நரசிம்மர்.
15. நம்மாழ்வார்.






## போட்டி எண். 35

**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி வி.பா.விபாஷா
மாணிக்கம்பாளையம் சாலை,
ஈரோடு.
2. செல்வன் எஸ்.கரிகரன்
புது பெருங்களத்தூர்,
சென்னை.
3. செல்வன் அ.ஆதித்தியா
சத்யமங்கலம், ஈரோடு
மாவட்டம்.

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

(நாலூரான்தனக்கு முத்தி நல்கினான் வாழியே) நாலூரான் என்பவன் ஒரு வைணவன். சோழ ராஜாவான க்ருமிகண்டனிடம் மந்திரியாயிருந்து வால்லப்யம் பெற்றவன். பெரிய நம்பியும் கூரத்தாழ்வானும் கண் இழக்கக் காரணமானவன். இப்படி கொடியவனான இவனுக்கு நரகமே பலிக்கும் என்று எண்ணி வருந்திய ஆழ்வான் பரந்த மனத்துடன் மகாபாபியையும் கைவிடமாட்டாத தயை உடையவராய் அவனுக்கு நன்மையை விரும்பினார். இதற்கு உரிய சமயத்தை நோக்கி இருந்தார். ஆழ்வான் வரதராஜஸ்தவம் அருளியவுடன் எம்பெருமானார் அதனை பேரருளாளன் முன்பு விண்ணப்பம் செய்து தலைக்கட்ட எண்ணி இருவரும் காஞ்சி சென்றனர். அங்கு எம்பெருமானார் சில அன்பர்களோடு வார்த்தையாடிக் கொண்டிருந்தபோது பேரருளாளனும் திருச்செவி சாத்தி ப்ரஸந்நனாய், "வாரீர் ஆழ்வானே. நம் பக்கலில் உமக்கு விருப்பமானதைக் கேளும்" என்று அருளப் பாடிட்டு கேட்க, ஆழ்வான் எம்பெருமானார் திருவுள்ளப்படியே கண் வேணும் என்று கேட்காமல், நான் பெற்ற லோகம் நாலூரானும் பெறவேணும் என்று வேண்ட, "அப்படியே பெறக்கடவன்" என்று பேரருளாளன் வரம் அளித்தருளினான். ஆழ்வானும், பெரிய பெருமாளாலே தம்முடைய ஸம்பந்தி ஸம்பந்திகளுக்கெல்லாம் பெரிய வீட்டை ப்ரஸாதிக்கும்படியான பெருமையைப் பெற்று உடையவருடனே மடமே எழுந்தருளினார். உடையவரும் இவர் பிறருடைய வளர்ச்சியில் ஊற்றமுடையவராய் கூரத்தாழ்வான் பக்கல் பொறுக்கமுடியாத அபராதம் பண்ணின நாலூரான் திறத்தும் வரம் வேண்டினபடியைக்கண்டு,

**"அன்று சனகன் திருமகளார்க்கு அல்லல் இயற்றிய அரக்கனை முன், இன்று போய் வா எனும் இறைவன் என் ஆழ்வானுக்கு இணை ஒவ்வான், அன்று தன்னை நலிவித்த நாலூராற்கு நலம் புரிந்தோன் என்றும் வாழ்க வாழ்க"** என்று திருவுள்ளம் பூரித்து ஸ்தோத்ரம் செய்தார் என்றும் **"தன்னளவில் தீமை செய்த நாலூரான் தனக்கும் தான் பெற்ற உலகம் அருள் செய்தான் வாழியே"** என்றும் மற்றுமுள்ளவர்கள் அநுஸந்தித்ததை ராமாநுஜ திவ்ய சரிதையில் அநுபவிக்கத் தக்கதாகும். இது பற்றியே நாலூரானுக்கு முக்தி நல்கினவரான கூரத்தாழ்வானுக்குப் பல்லாண்டு பாடுவோமாக.

(ஏராரும் தையில் அத்தத்தில் இங்கு வந்தான் வாழியே) ஏர் – அழகு, ஆர்தல் – நிறைதல். அழகு நிறைந்த தை மாதம். தை மாதம் மகர மாஸம் என்று வடமொழியில் வழங்கப்படும். தை மாதத்துக்கு அழகாவது பரம விரக்தர்களான திருமழிசை ஆழ்வாரும் எம்பாரும் அவதரித்தமையாகும். **"தை ஒரு திங்கள்"** என்று ஆண்டாள் கொண்டாடும் படியான ஏற்றமுடைய புஷ்ய மாதம். மகர



அப்பிள்ளை அருளிய
ஆழ்வார் ஆசார்யர்கள்
வாழித்திருநாமமும் உரையும்

# கூரத்தாழ்வான்

- ஸ்ரீ உ.வே. டாக்டர்
மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை,
9841884972

ஸப்தத்துக்கு நன்மையை உண்டாக்குகிற மாதம் என்றும், மாதங்கள் எல்லாவற்றுக்கும் சோபையைத் தரும் மாதம் என்றும் சொல்லுவர். ஹஸ்த நக்ஷத்ரத்துக்கு அதிதேவதை சூரியன். இந்த மாதத்தில் அவதரித்ததனால் ஆழ்வான் உலகுக்கு நன்மையை உண்டாக்குகிறார். இராமாநுசர் சிஷ்ய கோஷ்டிக்கு சோபையைத் தந்து அருளுகிறார் என்றும் சொல்லுவர். ஹஸ்த நக்ஷத்ரத்தில் தோன்றியதால் சூரியன் போல் உள்ளிருளான அறியாமையைப் போக்குகிறார் என்றும் சொல்லத்தகும்.


மேலும், தை மாதம் மக நக்ஷத்ரத்தில் அவதரித்த திருமழிசையாழ்வாரைப் போல் புற மதத்தவரைப் புறம் கண்டு பரதத்வ நிர்ணயம் செய்தது வெள்ளிடைமலை. ஸ்ரீ சத்தஸத்வம் தொட்டாசார்ய ஸ்வாமி அருளிய கூரநாத பஞ்சாசத்தில் தை மாத அத்தத்தில் நடைபெறும் ஆழ்வான் அவதார உற்சவத்தை ஐந்து சுலோகங்களால் உணர்த்துவதை அஸ்மதாசார்யர் ஸ்ரீஉ.வே.தி.அ. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி உரை கொண்டு அநுபவிக்கலாம். ஆழ்வானுடைய அர்ச்சாவதார திருமேனியின் இயற்கை அழகும், திருப்பரிவட்டம், தாமரைமணி, துளசிமணி மாலைகள், கிரீடம் முதலிய பற்பல திருவாபரணங்கள், புஷ்பமாலைகள் ஆகியவற்றால் உண்டாகிற செயற்கை அழகும், இவற்றோடு தை மாதம் நடைபெறும் அவதார உற்சவத்தில் காலை மாலை வேளைகளில் பெரிய தோளுக்கினியானில் ஏறி அருளி வேதமோதும் அந்தணர்களால் சூழப்பற்று திருவீதி உலா வருதலும், தை மாத ஹஸ்தத்தன்று சந்தனம், புஷ்பமாலை இவற்றைத் தாம் பூசி அணிந்து, சர்க்கரைப்பொங்கல் முதலிய பலவகைப் பிரஸாதங்களைத் தாம் அமுது செய்து, எல்லா மக்களுக்கும் விநியோகம் செய்வர். உற்சவத்தின் மாலை வேளைகளில் ஸர்வாபரணபூஷிதராய், வைதிக ஒளி நிறைந்த பெரிய தோளுக்கினியானில் எழுந்தருளி இருந்து, தம்மைச்சூழ ஸ்ரீவைணவர்கள் உபய வேத பாராயணம் செய்து கொண்டு எழுந்தருளுவர். ஹஸ்த நக்ஷத்திரத்தன்று விசேஷமாக சந்தனகாப்பும், புஷ்பமாலைகளும் தாம் சாத்திக் கொண்டு எழுந்தருளுவர். அப்படிப்பட்ட ஆழ்வானுக்கு பல்லாண்டு பாடுவோமாக.

(எழில் கூரத்தாழ்வான் தன் இணையடிகள் வாழியே). எழிலாவது உயர்ச்சி. அதாவது மேன்மை. ஆழ்வானுக்கு மேன்மையாவது ஞானம், பக்தி, வைராக்யம் ஆகியவையாகும். எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யம் அருளும்போது போதாயன வ்ருத்தி க்ரந்தத்தைத் திருவுள்ளத்தில் தரித்திருந்து அவருக்கு உசாத்துணையாக இருந்தமையால் ஞானமும், பகவத் குணங்களில் ஆழங்கால்பட்டு ஆழ்வான் என்ற திருநாமம் பெற்றதால் பக்தியும், கூரத்திலுள்ள எல்லா செல்வங்களையும் விட்டு, தேவியார் மடியிலிருந்த தங்கப் பாத்திரத்தையும் புதரிலே எறிந்து இராமாநுசர் திருவடிகளே செல்வம் என்று அவர் பின்னே ஸ்ரீரங்கத்துக்குச் சென்றதனால் வைராக்யமும், தம்மைப் பகைத்த நாலூரானுக்கும் மோக்ஷத்தை விரும்பியதால் கருணை முதலான குணங்களும் உடையவர் என்றபடி.

மொழியைக்கடக்கும் பெரும்புகழான் வஞ்ச முக்குறும்பாம் குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான் என்று அமுதனார் அருளியபடியே ஒரு சொல்லையிட்டு வருணிக்க முடியாததாய், நித்யம் வளருமவையாய்ப் பரமபதம் அளவும் பெருகி வருகிற கல்யாண குணங்களையுடையவர் என்றும், வஞ்சகத்துக்குக் காரணங்களாய் குலம், கல்வி, நடத்தை ஆகியவற்றால் வரும் அகங்காரமாகிய முக்குழியிலே விழாதபடி தம்முடைய உபதேசத்தாலே தத்துவம், ஹிதம், புருஷார்த்தம் ஆகியவற்றின் உண்மை நிலையைப் பிறப்பித்து, அதிலிருந்து கடத்துமவரான ஆழ்வான் என்பர்.

மேலும் ஆழ்வான் என்றது எம்பெருமானுடைய குணங்களிலும், அவற்றை உள்ளபடியே அறிவிக்கின்ற நம்மாழ்வார் ஸ்ரீ ஸூக்திகளிலும் ஆழங்காற்பட்டு கண்ணும் கண்ணீருமாக அருந்து மூர்ச்சை அடைந்ததை சீடர்கள் மூலம் கண்ட எம்பெருமானார் அவர் முதுகைத்தட்டி ஆழ்வான் ஆழ்வான் என்று உணர்த்த இவரும் எழுந்தாராம். ஆதலால் உடையவர் ஆழ்வான் என்று அழைத்தது பற்றி இதுவே இவருக்கு திருநாமமாயிற்று. இவர் கூரத்தில் வாழ்ந்ததனால் கூரத்தாழ்வான் எனப்பட்டார். அத்தகையோருக்குப் பல்லாண்டு பாடுவோமாக.

வாழித்திருநாம உரை தொடரும்...



*அலசுவோம்... அறிவோம்... ஆதிகாவிய நாயகர்களை...*

# திரிஜடை என்னும் தெய்வமகள்

**– திரு.எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம், 94861 39685**

இவ்வுலகில், துன்பத்தில் துவண்டு நிற்பவர்களுக்கு, தங்கள் தோளில் சார்த்திக்கொண்டு நம்பிக்கை தருகின்ற வார்த்தைகள் கூறு வதைப் போன்ற ஒரு உதவி வேறு எதுவும் இல்லை என்பதை நமக்கு உணர்த்தும் ஸ்ரீமத்ராமாயணக் கதாபாத்திரமே திரிஜடை ஆவாள்.

சேற்றில் முளைத்த செந்தாமரையாக அரக்கர்களின் பூமியாகிய இலங்கையில் அவதரித்த அபூர்வப் பிறவியாகிய விபீஷணருக்கும் ஸரமைக்கும் பிறந்த மகளே திரிஜடை. இலங்கையில் உள்ள அசோக வனத்தில் வைக்கப்பட்டிருந்த சீதாபிராட்டிக்கு அவ்வரக்கர்களிடையே கிடைத்த ஒரே அன்புத்தோழியாகத் திரிஜடை விளங்கினாள் என்றால் அது மிகையாகாது.

ஸ்ரீசீதாபிராட்டிக்கு எதிர்காலம் குறித்த நம்பிக்கை ஊட்டியதுடன், தற்கொலை செய்துகொள்ளும் எண்ணத்தைக் கைவிட்டு ஸ்ரீராம பிரானின் வருகைக்காகக் காத்திருக்க ஊக்கம் கொடுத்ததும் திரிஜடை யின் நற்செயலேயாகும். வனவாசம் கிளம்பிய காலம் தொட்டு, ஸ்ரீராமபிரான், ஸ்ரீசீதாபிராட்டி, லட்சுமணர் ஆகிய மூவரும் ஒன்றாகவே கானகம் முழுவதிலும் சஞ்சரித்து வந்தனர்.

சூர்ப்பனகையின் கலகத்தால் ஸ்ரீசீதாபிராட்டியை அபகரிக்க எண்ணிய இலங்கேஸ்வரனின் சூழ்ச்சியால் மாரீசன் என்னும் அரக்கன் பொன்மான் வடிவமெடுத்துக் கானகத்தில் அங்குமிங்கும் திரிந்தான். பிராட்டியின் ஆசைக்கிணங்கப் பொன்மானைப் பிடித்துவர ஸ்ரீராமபிரான் கிளம்ப, சற்று நேரத்தில் அவரைத் தேடி லட்சுமணரும் கிளம்பினார். பர்ணசாலையில் தனித்திருந்த பிராட்டியைச் சந்நியாசியாக உருவெடுத்து வந்த இலங்கேஸ்வரன் தனது கபட நாடகத்தினால் பர்ணசாலைக்கு வெளியில் வரச்செய்து கவர்ந்து சென்று இலங்கையிலுள்ள அசோகவனத்தில் வைத்தான்.

தேவியைத் தேடித்திரிந்த ஸ்ரீராமபிரானும் லட்சுமணரும் ஒன்றாகவே இருந்த காரணத்தி னால், ஒருவருக்கொருவர் ஆறு தலாக இருந்ததுடன், ஒருவர் மனம் தளரும் பொழுது மற்றொ ருவர் நம்பிக்கையூட்டியபடி இருந்தனர்.

ஸ்ரீசீதாதேவியைத் தேடி வனமெங்கும் அலைந்து திரிந்த அவ்விருவருக்கும் கிஷ்கிந்தை யில் கிடைத்த அநுமனின் சந்திப் பும், சுக்கிரீவனின் நட்பும் மேலும் நம்பிக்கையூட்டின. சுக்கிரீவனுடைய வானரப்படை களை நாலாபுறமும் அனுப்புவ

தன் மூலம், ஸ்ரீசீதாபிராட்டியார் இவ்வுலகின் எப் பகுதியில் இருந்தாலும் அவரைக் கண்டுபிடித்து மீட்கலாம் என்ற நம்பிக்கை அவர்களின் மனங்களில் நங்கூரம் பாய்ச்சி நிலைகொண்டது. அதே சமயம், அபலையாகிய ஸ்ரீசீதாபிராட்டியாருடைய நிலைமையை நினைத்துப் பாருங்கள்.

மாவீரர்களாகிய கணவரும் மைத்துனரும் அவளுடன் இல்லாத நிலைமை. பெருங்கடலைத் தாண்டி ஆகாயமார்க்கமாகத் தான் கொண்டுவந்து வைக்கப்பட்டிருக்கும் இவ்விடம் அவர்களுக்குத் தெரியுமா, தெரிந்திருந்தாலும் அவர்களால் சமுத்திரத்தைக் கடந்து கட்டுக்காவல் மிகுந்த இவ்வரக்கர்களின் நகரத்திற்குள் நுழைந்து தன்னை மீட்டுச் செல்ல முடியுமா என்றெல்லாம் பல கவலைகள் பிராட்டியின் திருவுள்ளத்தை வாட்டின.

போதாக்குறைக்கு, இலங்கேஸ்வரன் அவ்வப் பொழுது அசோகவனத்திற்கு வந்து தன்னை மணந்து கொள்ளச் சம்மதிக்கும்படி மிரட்டல் விடுக்க,

## நந்தவன நாயகி



நந்தவனமே வாசனையுடனும், கண் பார்வைக்கு பச்சையான பசுமை நிறத்தால் குளுமை தருவதாலும், நந்தனான ஸ்ரீகண்ணனுக்கும், ஸ்ரீசாளக்கிராம மூர்த்தங்களுக்குமே தன்னை ஆராதிக்க வேண்டும் என்றபடி ஸ்ரீவிஷ்ணுவிடத்தில் வரம் பெற்றதாலும் நந்தனவன சுந்தரி என்ற பெயரை துளசி பெற்றது. நந்தன வனத்தில் ஜாதி புஷ்பம், மல்லிகை, மாலதி செண்பகம், நீலோத்பலம், பாரிஜாதம், ரோஜா போன்ற விசேஷமான புஷ்பங்கள் இருந்தாலும் துளசி ஒன்றே மஹா விஷ்ணுவிற்கு மிகவும் பிடித்தமானபடியால் நந்தவன சுந்தரி பெருமை பெற்றாள். பதார்த்த குண சிந்தாமணி என்ற நூலில்,

*“ஐயம் வயிறுளைச்சல் அஸ்திசுரந்தாகமும் போம்*
*பையசுர மாந்தம் பறக்குங்காண் - மெய்யாக*
*வாயின் அரோசகம்போம் வன்காரஞ் சூடுள்ள*
*தூய துளசிதனைச் சொல்”*

என்ற செய்யுள்படி மனிதர்களுக்கும் மருந்துப் பொருளாகவும் அமைகிறது. துளசியை நம் இஷ்டப்படி பறிக்கக் கூடாது. அதற்கும் மந்திரம் சொல்லி துளசி செடியின் சம்மதம் பெற்றுக் கொண்டு தளம் தளமாக இதழ்களாக பறிக்க வேண்டும்.

*துளஸ்யாம் அம்ருத ஜன்மாஸி சதா த்வம் கேசவ ப்ரிய|*
*கேசவார்த்தம் சிநோமி த்வாம் வரதா பவ சோபனே||*

என்று “துளசி மாதாவே நீ எப்போதும் கேசவ நாம ஜபம் செய்கிறாய், அந்த கேசவனுக்கு திருவாராதனம் செய்வதற்காகவே உன்னை எடுத்துக்கொண்டு போகிறேன்” என்று சம்மதம் பெற்று பறிக்க வேண்டும். துளசி வாசனையுடனும், கார்ப்பு சுவையுடனும் கிருஷ்ண துளசி, ராம துளசி, செந்துளசி, கற்பூர துளசி, கருந்துளசி எனப் பல வகைகள் உண்டு. துளசி உள்ள இடத்தில் விஷ ஜந்துக்கள், ஈ, கொசு வராது. சம அளவு துளசியும் சிறிது உப்பும் கலந்து படை என்ற சரும வியாதி மீது தடவினால் உடனே குணமாகிறது. *“வேம்பும் துளசியும் வீணாகாது”* என்ற பழமொழியும் உண்டு.

– திருநாங்கூர் ஜீ. சௌந்திரராஜன் பட்டாசாரி, புதுடில்லி.

விகாரமான உருவங்களுடன் அவ் வனத்தில் காவல் புரியும் அரக்கி களும் அச்சுறுத்திக்கொண்டிருக்க, உயிர்வாழ்வையே வெறுத்துத் தற் கொலை முடிவுக்கும் தள்ளப்பட்டாள் பிராட்டி.

அச்சமயங்களில் எல்லாம், கவலைப்படாதீர்கள் அம்மா! எப்படி யும் ஸ்ரீராமபிரான் உங்களை மீட்டுச் செல்வார், உங்கள் மனதைத் தளர விடாதீர்கள் என்று திரிஜடை ஆறுதல் கூறி வந்தாள்.

ஒரு சமயம் திரிஜடை தன் கனவில் ஸ்ரீராமபிரானும், ஸ்ரீசீதா பிராட்டியும் மங்கலகரமான ஆடை ஆபரணங்களை அணிந்து மலர் மாலைகளும் சந்தனமும் மணம் கமழத் தங்கமயமான தேரில் ஏறி வடக்கு திசை நோக்கிப் பயணித்த அதே வேளையில், இலங்கேஸ்வரன் தனது உடல் முழுவதும் எண்ணையைப் பூசிக்கொண்டு கழுதையின் மேல் ஏறி தெற்கு திசை நோக்கிப் பயணம் சென்றான்.

தான் கண்ட இக்கனவை உடனடியாகப் பிராட்டியிடம் கூறி அவளுக்கு நம்பிக்கை ஊட்டிய திரிஜடை, அங்கு காவல் காத்த அரக்கிகளுக்கும் எடுத்துக் கூறினாள். மேலும், நான் கண்ட இக்கனவு இலங்கேஸ்வரனின் அழிவையும், ஸ்ரீராமபிரானின் வெற்றியையுமே குறிக்கின்றது. ஸ்ரீசீதாபிராட்டியே இனி இந்த உலகம் முழுவதையும் ஆளப்போகும் மகாராணியாக விளங்கப்போகின்றாள். நீங்கள் அனைவரும் இப்பெருமாட்டியை அச்சுறுத்துவதை விட்டுவிட்டு இவளுடைய பாதங்களில் சரணம் அடையுங்கள் என்று அரக்கிகளுக்கு அறிவுரை கூறினாள் திரிஜடை.

இது மட்டுமா! புஞ்சிகஸ்தலா என்ற வானுலகப் பெண்ணை அவளுடைய விருப்பமின்றித் தீண்டியதால் இலங்கேஸ்வரனை பிரம்மதேவர் சபித்திருக்கின்றார். அச்சாபத்தின்படி, இனி எந்த ஒரு பெண்ணையும் அவளுடைய விருப்பமில்லாமல் அடைய முயன் றால் உடனடியாக அவன் மரணம் அடைவான் என்ற விவரத்தை ஸ்ரீசீதாபிராட்டியிடம் எடுத்துக் கூறினாள்.

திரிஜடை, தாயே! எங்கள் அரசனாகிய இலங்கேஸ்வரன் தன்னை மணந்து கொள்ளும்படி உங்களை மிரட்டிக் கொண்டிருப் பானே தவிர, அவன் ஒருபொழுதும் தங்களை வலுக்கட்டாயமாக

## குறுக்கெழுத்துப்புதிர் 109க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 பா | ர் | த் | த | சா | ர | தி | யா | க | பு | 3 ச | 4 வி |
| ண் | க | லா | பா | ன | மா | த | மு | 5 அ | | க் | ஸ் |
| ட | 6 வி | | 8 பு | ல் | லா | ங் | கு | ழ | | க | வ |
| 9 வ | ஸ் | தி | ர | ம் | | | | கி | 2 க | ர | ரூ |
| தூ | வ | 7 கா | | 10 வி | தே | னா | மு | 11 ய | ண் | ம் | ப |
| த | ரூ | ளி | து | த | 12 ஆ | | | பெ | ண | வ | த |
| ரா | 13 ப | ங் | வ | ர் | ய | பி | 14 கோ | ண் | ன் | டி | ரி |
| க | க | க | டா | ப் | ர் | | தை | வ | ணி | வ | ச |
| க் | வ | ன் | ட் | ப | | | | டி | ம | ன் | ன |
| ர் | த் | | 15 எ | | | | | வ | க் | றி | |
| 16 க | 17 ஸ்ரீ | ம | த் | பா | க | வ | த | ம் | 20 ரு | ன் | |
| | 18 கு | பே | ர | ன் | பு | த | ல் | வ | ர் | 19 க | ள் |

## திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜஸ்வாமி பவித்ரோத்ஸவம்

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 02-09-2025 | செவ்வாய் | --- | அங்குரார்ப்பணம் |
| 03-09-2025 | புதன் | பவித்ர பிரதிஷ்டை | |
| 04-09-2025 | வியாழன் | பவித்ர சமர்ப்பணம் | |
| 05-09-2025 | வெள்ளி | பவித்ரோத்ஸவம் நிறைவு | |

அடைய முடியாது. தாங்கள் அஞ்சவேண்டாம்! என்று சொல்லி பிராட்டியின் அச்சத்தைப் போக்கி மாபெரும் உதவி புரிந்தாள்.

இன்னொரு சமயம், மாயாஜால முறையில் ஸ்ரீசீதாபிராட்டியின் தகப்பனாராகிய ஜனக மகா ராஜரைப் போன்ற உருவம் ஒன்றைப் படைத்த இலங்கேஸ்வரன், அவ்வுருவத்தை அசோக வனத்திற்கு அழைத்துச் சென்றான்.

அன்பு மகளே சீதா! உன் கணவனால் இவ்வளவு தூரம் வந்து கட்டுக்காவல் நிறைந்த இவ்விடத்திலிருந்து உன்னை மீட்டுச்செல்ல முடியாது.நீ இந்த இலங்கேஸ்வரனையே மணந்து கொள்! என்று அந்த மாய உருவம் கூறியது கேட்ட பிராட்டி, தன் தந்தை இப்படிப்பட்ட அறிவுரையாக் கூறுவது? என்று மனம் வருந்தினாள்.

பின்னர் நடந்ததை அறிந்து அவ்விடத்திற்கு வந்த திரிஜடை, கவலைப்படாதீர்கள் தாயே! நிச்சயமாக இது அரக்கர்களின் மாயாஜாலம் தான். தாங்கள் இதற்கெல்லாம் மயங்காதீர்கள்! என்று உண்மையை எடுத்துக் கூறினாள். ஸ்ரீசீதா பிராட்டியும் மனத்தெளிவும் ஆறுதலும் அடைந்தாள்.

யுத்தம் தொடங்கிய பின்பு, அரக்கர் படைகளுக்குத் தோல்வி நிச்சயம் என்பது உறுதியான பொழுது, ஸ்ரீராம பிரானும் லட்சுமணரும் கொல்லப்பட்டது போன்ற தோற்றத்தை மாயா ஜாலத்தால் உருவாக்கி இலங்கேஸ்வரன் அதனைப் பிராட்டி காணும்படிச் செய்தான்.

இதைக் கண்ட பிராட்டியோ தன்னுடைய கணவரும் மைத்துனரும் கொல்லப்பட்ட



## வரலக்ஷ்மியே வாருமம்மா

தொகுப்பு : விஜயலட்சுமி நட்ராஜன், சென்னை
8248003302

*தாயே ...வரலக்ஷ்மி வாருமம்மா !*
*சௌபாக்கியம் தரும் தாயே...*
*வரலக்ஷ்மி வாருமம்மா !!*

*மங்களம் தந்திடும் வஸுதாரிணி !*
*மஹாவிஷ்ணுவின் ஹ்ருதய நிவாஸினி !!*

*தாமரை மலரினில் வீற்றிருப்பாயே !*
*தஞ்சம் அடைந்த என்னை காப்பாயே !!*

*கற்பின் கனலே கருணை மழையே !*
*காதலின் உருவே ஜானகி வடிவே !!*

*பத்மநாபன் மனம் அறிந்திடுவாயே !*
*பார்வையால் உலகை காத்திடுவாயே !!*

*சங்கரர் போற்றிய சந்திரவதனியே !*
*தேசிகர் துதித்த தேவதர்ஷினியே !!*

*காலைமாலை விளக்கேற்றிடுவேனே !*
*கனகதாரா உனை போற்றிடுவேனே !!*

*குடும்பம் தழைத்தோங்க அருள் புரிவாயே !*
*குணவதி உன் மகளை வாழ்த்திடுவாயே !!*

*மங்கையர் வாழும் நெறி தந்தாயே !*
*மாதவன் மார்பில் உறையும் வைஷ்ணவியே !!*

*வணங்கிடும் மாந்தர்க்கு வளம் அருள்வாயே !*
*வேண்டும் வரமளிக்கும் ஸ்ரீ வர லக்ஷ்மியே !!*

*தாயே வரலக்ஷ்மி வாருமம்மா !*
*தயை அருளும் ஸ்ரீவர லக்ஷ்மியே !!*

*தாயே வரலக்ஷ்மி வாருமம்மா !*
*தேவி வரலக்ஷ்மி வாருமம்மா !!*

*வரமருளும் வரலக்ஷ்மி வாருமம்மா !*
*அன்னை வரலக்ஷ்மி வாருமம்மா !!*

## ஏறு போல் நட

**புதிய ஆத்திசூடி 8**



"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்
நிமிர்ந்த ஞானச் செருக்கு"

என்று பெண்களுக்கான பண்புகளாகக் கூறினாலும் ஆண்களுக்கும் பொதுவாகத்தான் சொல்லி வைத்தார் பாரதி. "ஏறு" என்றால் எருது, காளை மாடு. உழவுக்குப் பயன்படும் காளைமாடு நிமிர்ந்து நடக்கும். வண்டி சரியாக ஓட வேண்டுமென்றால் காளை நிமிர்ந்து ஓட வேண்டும். தவறு செய்தால்தான் தலைகுனிவு ஏற்படும். குனிந்து நடப்பது கோழைத்தனம். நாம் நிமிர்ந்து நடக்கும்போது நமது மார்பு விரிவடைகிறது. பார்வை நேராகிறது. அப்போது நாம் தெளிவாக உலகக் காட்சிகளை புரிந்து கொள்ள, அறிவு விசாலமாகிறது. தன்னம்பிக்கை ஏற்படுகிறது. அதனால் வெற்றி நம் வசப்படுகிறது. ஆண் குழந்தைகளும் சரி, பெண் குழந்தைகளும் சரி தலை நிமிர்ந்து, நெஞ்சை உயர்த்தி, கைகளை வீசி நடக்க வேண்டும். அதனால் கம்பீரம் ஏற்படும். உடல் வனப்பு அதிகமாகும். வானமே வசப்படும் என்ற நம்பிக்கை ஏற்படும். இதனால்தான் பாரதி "ஏறுபோல் நட" என்று கூறினார்.

- டாக்டர் கவிஞர் இரா. உமா பாரதி, சென்னை, மகாகவி பாரதியார் வம்சாவளி, 73389 97938

தாகவே நம்பிப் புலம்பத் தொடங்கினாள். இராவணன் போர்க்களத்துக்குத் திரும்பிச் சென்ற பின்பு, அரக்கர்களின் மாயவித்தையைப் பற்றி மீண்டும் பிராட்டிக்கு நினைவு ஊட்டிய திரிஜடை ஸ்ரீராமபிரானும், லட்சுமணரும் உயிருடன் இருப்பதையும் எடுத்துக் கூறி அவளைத் தேற்றினாள்.

உயிர்வாழவே முடியாத பெரிய பாலைவனத்தில் பயணம் செய்யும் ஒருவருடைய கண்ணில் கனிகள் நிறைந்து நிழல் தருகின்ற மரங்களும், குளிர்ந்த நீர் நிறைந்த நீர்நிலையும் தன்னகத்தே கொண்ட பாலைவனச் சோலை அளிப்பதைப் போன்ற இன்பத்தை ஸ்ரீசீதாபிராட்டியின் திருவுள்ளத்திற்கு அளித்த திரிஜடையின் பேருதவியே அப்பிராட்டியை உயிருடன் வைத்து இருந்து இறுதியில் ஸ்ரீராமபிரானுடன் சேர்த்துவைத்தது என்றால் அது மிகையாகாது.

எனவேதான், ஸ்ரீசீதாபிராட்டியார் ஸ்ரீராமபிரானுடன் அயோத்தியை நோக்கிக் கிளம்பும் முன்பு தன்னை வணங்கி நின்ற திரிஜடையை வாயார வாழ்த்துகின்றாள்

*வணங்கு நுண்இடைத் திரிசடை வணங்க வான் கற்பிற்கு*
*இணங்கர் இன்மையாள் நோக்கி 'ஓர் இடர் இன்றி இலங்கைக்கு*
*அணங்குதான் என இருத்தி!' என்று ஐயன் மாட்டு அணைந்தாள்*
*மணம் கொள் வேல் இளம் கோளரி மானம் மீப் படர்ந்தான்*

- கம்பராமாயணம் யுத்த காண்டம்

ஒப்பில்லாத கற்பு நெறிக்கு உடையவளாகிய ஸ்ரீசீதாபிராட்டி, வளைந்த நுண்ணிய இடையை உடைய திரிஜடை தன்னை வணங்கி நின்ற திரிஜடையை அன்புடன் நோக்கி, திரிஜடையே, நீ யாதொரு துன்பமும் இன்றி இந்த இலங்கை நகரைக் காக்கும் தெய்வப் பெண்ணாக விளங்குவாயாக! என்று ஆசீர்வதித்து விடை பெற்றதைக் கூறும் இந்தக் கம்பராமாயணப் பாசுரம் ஒன்றே திரிஜடையின் பெருமைக்குச் சான்றாக விளங்குகின்றது என்றால் உண்மையிலும் உண்மையாகும்.

**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி**

**பக்தர்களுக்கு அறிவிப்பு**

வெடிப்பொருட்கள், துப்பாக்கி, கை துப்பாக்கி, படை ஆயுதங்கள் தகுந்த உரிமம் உள்ளபோதும் திருமலைக்கு கொண்டு வருவது தடைசெய்யப் பட்டுள்ளது. தயவு செய்து யாத்திரிகர்கள் மேற்குறிப் பிடப்பட்டவற்றை கொண்டு வர வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

–தலைமை கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு அலுவலர்



# ஆகஸ்ட் 2025
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

தொழில் துறையில் விரயம் அதிகமாகும். குழந்தைகளால் சந்தோஷம் உண்டு. குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். புதிய முயற்சியில் வெற்றி உண்டு. பெற்றோர் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். சொத்து பிரச்சனை தீரும். கணவன்-மனைவி குழப்பங்கள் தீரும். பயணத்தின்போது எச்சரிக்கை தேவை. வரவும் செலவும் சரியாக இருக்கும் மாதமிது.

**ரிஷபம்**

குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். தொழிலில் அலைச்சல், வளர்ச்சி, லாபம் உண்டு. குடும்பத்தாராருக்கு ஆரோக்கியமும், நன்மையுமுண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெற்று, வேலைவாய்ப்பைப் பெறுவர். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு, மேலதிகாரிகளின் நட்பு கிட்டும். வீடு-மனை, புது வாகனம் வாங்கும் யோகம் உண்டு. எதிர்பார்த்த நல்ல பலன்கள் கிட்டும் மாதமிது.

**மிதுனம்**

தொழிலில் வேலைப்பளு அதிகமாகி காரியங்கள் தாமதமாக நடக்கும். இறை தரிசனம் கிட்டும். குடும்பச் சூழல் அமைதியாகவும், குழந்தைகளால் சந்தோஷமும் உண்டு. மனைவி ஆரோக்கியம் நன்றாக இருந்தாலும், பெற்றோர் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மேலதிகாரிகளால் பிரச்சனை ஏற்பட்டு சரியாகும். மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். தாமதமானாலும் நன்மை பெறும் மாதமிது.

**கடகம்**

தந்தை ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொழில் துறையில் பணம் முடக்கம் இருந்தாலும் உங்கள் புத்திசாலித்தனத்தால் சாதிப்பீர். தொழில் துறையில் செலவு அதிகமாகும். மாணவர்கள் முயற்சி இருந்தால் மட்டுமே தேர்வில் வெற்றி உண்டு. பேச்சில் கவனம் தேவை. ஆரோக்கியத்தில் நல்ல மருத்துவம் பெற்று மேம்படும். போதுமான முன்னேற்றத்தைப் பெறும் மாதமிது.

**சிம்மம்**

மனைவி ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. கணவன்-மனைவி பிரச்சனை ஏற்பட்டுப் பின் சரியாகும். வீடு, மனை வாங்குவதில் காலதாமதமாகும். தொழிலில் செலவும், உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப்பளுவும் அதிகமாகும். விவாதங்களைத் தவிர்க்கவும். குடும்பச் செலவுகள் அதிகமாகும். மாணவர்கள் படித்தால் உயர்வு உண்டு. எச்சரிக்கையோடு செயல்பட வேண்டிய மாதமிது.

**கன்னி**

தொழிலில் போட்டி, பொறாமை அதிகமாகும். திருஷ்டியால் ஆரோக்கியத் தொய்வுண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். லாப நோக்கு வெற்றியும், புதிய முயற்சிகளில் காலதாமதமாக வெற்றியும் கிட்டும். தூக்கம் இராது. கணவன்-மனைவி கருத்துவேறுபாடு ஏற்பட்டுப் பின் சரியாகும். மாணவர்கள் கடுமையாக உழைத்து நல்ல மதிப்பெண் பெறுவர். தெய்வ அருளால் முன்னேறும் மாதமிது.

**துலாம்**

தொழிலில் புதிய முயற்சிகள் செய்யலாம். பழைய பாக்கிகள் வசூலாகும். மனைவி ஆரோக்கியத்தில் சிறுபின்னடைவு, வீட்டில் வாகனங்கள் ரிப்பேர் போன்றவற்றால் செலவினங்கள் அதிகமாகும். மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். திருமணம் கைகூடும். தேர்வில் வெற்றி, புதிய முயற்சியில் வெற்றி கிட்டும். யாத்திரை செல்வீர். எதிர்பார்த்த நல்ல முன்னேற்றம் பெறும் மாதமிது.

**விருச்சிகம்**

குழந்தைகளுக்கு கல்விச்செலவு அதிகமாகும். வேலைப்பளு அதிகமாகும்.வாடகை வீட்டிலிருப்போர் இடமாற்றம் செய்ய நேரிடும். வயிறு உபாதை உண்டாகும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. திருஷ்டி காரணமாக காரியங்கள் தாமதமாகும். பூர்வீகச் சொத்து விவாதங்கள் தவிர்ப்பது நலம். கடன் பரிவர்த்தனை தவிர்ப்பது நலம். எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய மாதமிது.

**தனுசு**

தொழிலில் புதிய முயற்சிகள் செய்யவும். நல்ல லாபம், முன்னேற்றம் உண்டு. குடும்பத்தில் சுபகாரியம், திருமணம் நடக்கும். பொருளாதார சிக்கல் தீரும். கணவன்-மனைவி அன்யோன்யம் உண்டு. தாய் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். நண்பர்களால் பிரச்சனை உண்டு. ஆரோக்கிய குறைபாடு நீங்கும். நல்ல யோகமான மாதமிது.

**மகரம்**

இளைய சகோதரன் மற்றும் தங்களது ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மனைவி ஆலோசனை வழங்குவார். கடன் பரிவர்த்தனை தவிர்ப்பது நன்று. பூர்வீகச் சொத்து குறித்து பேசாமல் இருப்பது நன்று. குழந்தைகளின் கல்விக்கு செலவு அதிகமாகும். மாணவர்கள் கடுமையாக உழைத்தால் நல்ல மதிப்பெண்கள் கிட்டும். கடும் முயற்சியில் முன்னேறும் மாதமிது.

**கும்பம்**

கோபப்படும் சூழ்நிலை அதிகமாகும். தொழிலில் முடக்கம் அதிகமாகும். ஆரோக்கியத்தில் மற்றும் பேச்சில் எச்சரிக்கை தேவை. இறை தரிசனம் கிட்டும். சகோதர வழியில் சிறு பிரச்சனை ஏற்பட்டுப் பின் சரியாகும். வாழ்க்கை துணை ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குழந்தைகளின் கல்விக்கு செலவாகும். மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய மாதமிது.

**மீனம்**

தொழிலில் வேலைப்பளு அதிகமாகும். நண்பர்கள், உறவினர்கள் உதவுவர். பழைய பாக்கிகள் வசூலாகும். பணபுழக்கம் தாராளமாகவும், குழந்தைகள் புத்திசாலித்தனமாகவும் இருப்பர். கணவன்-மனைவி சிறு கருத்து வேறுபாடு ஏற்பட்டுச் சரியாகும். மாணவர்கள் மறதியால் மதிப்பெண்கள் குறையலாம். பெற்றோர் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். முயற்சியால் வெற்றி பெறும் மாதமிது.

மாணாக்கர் (மாணவர்கள் ) தலை , இடை , கடை என மூன்று வகைப்படுவர்.

தலை மாணாக்கர் என்பவர் அன்னத்தையும் ஆவையும் போன்றவர்; அன்னப்பறவை பாலை பருகும்போதே நீரை ஒதுக்கி விட்டுப் பாலை மட்டும் பருகும். அதுபோலத் தலை மாணாக்கர் பாடங்கேட்கும் போதே குற்றங்களை ஒதுக்கி விட்டு குணங்களை மட்டும் ஏற்றுக்கொள்வர்.


மேலும், ஆவாகிய பசு புல்லை வயிறார மேய்ந்து பின்பு அதனைச் சிறிது சிறிதாக அசையிட்டு விழுங்கும். அதுபோலத் தலை மாணாக்கர் நூற்பொருளை உளமாரக் கேட்டுப் பின்பு பசு உண்ட புல்லை சிறிது சிறிதாக அசையிட்டு விழுங்குவது போல், தனிமையில் இருக்கும் போது அதனை நினைவுக்குக் கொண்டு வந்து பாட சாலையில் ஆசிரியர் பெருமான் கற்பித்த கருத்துக்களை தனது சிந்தையில் நிலையாக பதிய வைத்துக் கொள்வர்.

இடை மாணாக்கர் என்பவர் மண்ணையும், கிளியையும் போன்றவர்; மண்ணாகிய நிலம் உழவனின் முயற்சிக்கு ஏற்பப் பயனளிக்கும். அதுபோல் இடை மாணாக்கர் தனது முயற்சிக்கேற்ப அறிவு பெறுவர். கிளியானது தனக்குச் சொல்லிக் கொடுத்த சொல்லையன்றி வேறொன்றையும் அறியாது. அதுபோல் இடை மாணாக்கர் தமக்குக் கற்பித்த பொருளையன்றி வேறொன்றையும் அறியாதவர் ஆவர்.

கடை மாணாக்கர் என்பவர் இல்லிக்குடம், ஆடு, எருமை போன்றவராவர்; இல்லிக்குடம் எனும் ஓட்டைக்குடம் தன்பால் வார்க்கப்படும் நீரை வார்க்கும் போதே ஒழுக விட்டு விடும். அதுபோலக் கடை மாணவர் தமக்குக் கற்பிக்கப்படும் பொருளைக் கேட்கும் போதே கைவிட்டு விடுவர்.

ஆடு தான்மேயும் செடியில் தழை நிறைய இருந்தாலும் வயிறார மேயாமல் செடிகள் தோறும் சென்று சிறிது , சிறிதாக மேய்ச்சலில் ஈடுபடும். அதனைப் போலக் கடை மாணவர் தாம் கற்கும் ஆசிரியரிடம் திறமையான புலமை நிறைந்திருந்தாலும், அதனை உளமாரக் கற்காமல் பல ஆசிரியரிடம் சென்று, சிறிது சிறிதாகக் கற்பர். எருமைமாடு குளத்து நீரைக் கலக்கிப் பருகுவது போலக் கடை மாணவர் ஆசிரியரது அறிவைக் கலக்கி (வருத்தி)க் கற்பர். சுருக்கமாகச் சொன்னால் கடை மாணாக்கர் என்பவர் நல்ல குணங்களை ஏற்காமல் குற்றங்களை மட்டும் ஏற்றுக்கொள்வர் என்று மூன்று வகையான மாணாக்கர்கள் பற்றி அருளாளர் பவணந்தி மகரிஷி இயற்றிய நன்னூல் காண்டிகை உரை எடுத்து இயம்புகிறது.

**இக்கதையின்நீதி:**
**சிறார்களே! நீங்கள் என்றென்றும் தலை மாணாக்கர்களைப் போன்று இருந்து சாதனைகள் பல புரிந்து சிறப்புற்று வாழ்ந்திடுங்கள்.**



# மூன்று வகை மாணாக்கர்கள்

– திரு. சதா ஸ்ரீஹரிஹரன்,
கும்பகோணம்,
9488241383

சிறுவர் உலகம்

# பல்சுவைப் பகுதி

புள்ளிகளை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்



படத்தைப் பாருங்கள் !



வண்ணம் தீட்டுங்கள் !!



இந்தச் சிறிய யானைக்குப் பசி எடுக்கிறதாம்! இந்தச் சக்கரத்தின் மையத்தில் உள்ள உணவை எடுக்கச் செல்லவிருக்கிறது! அதற்கு பாதையைக் காட்டி உதவிடுங்கள்!!

பாதையைக் கண்டு பிடி!





இங்கு கொடுக்கப்பட்டுள்ள சித்திரங்களை வராஹர், கிருஷ்ணர், லக்ஷ்மி என வரிசை படுத்திடலாம். வாருங்கள்!!

விடை :
வராஹர் - 1,3,5 : கிருஷ்ணர் - 6,8,9
லக்ஷ்மி - 2,4,7

வினாடி வினா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-37

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. வேதாந்த தேசிகருக்கு ஹயக்ரீவ மந்திரத்தை உபதேசித்தவர் ..........
2. திருவேங்கடம் அடை நெஞ்சே எனப் பாசுரமிட்டவர் ..........
3. திருமலையில் பவித்ரோத்ஸவம் நடைபெறும் மாதம் ..........
4. திருச்சி அம்மா மண்டபப் படித்துறையில் காவிரிக்கு சீர் வரிசை வழங்குபவர் ..........
5. பாமரர்களுக்காக ஸ்ரீகிருஷ்ண பகவான் அருளியது ..........
6. பரிமுகன் என்றழைக்கப்படும் பெருமான் ..........
7. திருமலையில் முதல் வழிபாடு ஏற்கும் பெருமான்..........
8. ஞானமூர்த்தி என்றழைக்கப்படும் அவதாரம் ..........
9. தை மாதம், ஹஸ்த நட்சத்திரத்தில் அவதரித்த ஆழ்வார் ..........
10. குன்றம் ஏந்தி குளிர் மழைக் காத்தவன் யார் ..........
11. அபார என்னும் சொல்லின் பொருள்..........
12. வராக சரம சுலோகம் யார் யாருக்கு அருளியது ..........
13. திருப்பதி அலிபிரி பாதாள மண்டபம் அருகில் உள்ள மந்திரம் ..........
14. மகாலட்சுமியின் வாகனமாக மேற்கு வங்க மக்கள் கூறுவது ..........
15. மீனோடாமை கேழலரி குறளாய் எனப் பாசுரமிட்டவர் ..........

## போட்டிக்கான நிபந்தனைகள்




- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்தியக் குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்தப் பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்விதத் தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.08.2025.

**விடையை எழுதுங்கள்!**

**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |




சக்கரத்தைச் சுற்றுங்கள்!

அதே வண்ணக் கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!




குழந்தைகளே! ஸ்ரீகிருஷ்ணா தன் அவதாரத்தில் எந்தெந்த அசுரர்களை வென்றார் என பார்ப்போம்.

**விடைகள்**

1) பூதனை, 2)குபேரரின் புதல்வர்கள்–நளகூபன், மணிக்கிரீவன் , 3)அகாசுரன், 4) த்ருணவர்தன், 5) கேசி, 6) பகாசுரன், 7) சகடாசுரன், 8) கம்சன்.

**கணித விளையாட்டு**

இங்கு புத்தகத்தில் உள்ள கணித வினாவிற்குப் பொருத்தமான எழுதுகோல்களின் எண்ணிக்கை உள்ள விடையைப் பொருத்துக




1) iv, 2) vi, 3) i, 4) iii, 5) ii

**விடைகள்**



குழந்தைகளே!
நலமாக இருக்கிறீர்களா?
வேகமாக ஓடுவதினால் என் பெயரால் வேகத்திறனை அளக்கும் அலகு (ஆங்கிலத்தில் ஹார்ஸ் பவர்).
தசாவதாரத்தில் திருமாலின் பத்தாவது அவதாரம் கல்கியுடன் தொடர்புடையவன் நான். வேதங்களை பாதுகாக்கும் திருமால் வடிவான ஹயக்ரீவர் என் போன்ற திருவதனமுடையவர்.
திருக்கோயில்களில், முதன்மையாக திருமலையில் (இறுதி வாகனம்) என் மீது தெய்வத் திருமேனிகளை எழச் செய்து திருவீதி உலா வருவர்.

மழலைச் செல்வங்களே! மேலே குறிப்பிட்டது மற்றும் மேலே உள்ள சித்திரத்தின் அடிப்படையில் நான் யார் என்று கண்டுபிடியுங்கள் பார்ப்போம்...


விடை : குதிரை

சித்திரக் கதை

# மூத்தவனுக்கே முதல் வணக்கம்!

கதை மூலம் :கலாரத்னா டாக்டர். கே. ரவிச்சந்திரன்
சித்திரம் :திரு.து.சிவாஜி





தூரத்தில் கணபதி ஒரு பிராமணச் சிறுவன் வடிவில் இருந்தார்.
குழந்தாய்! எனக்கு ஒரு உதவி செய்வாயா? சூரிய அஸ்தமனம் ஆரம்பமாயிற்று. சந்தியா வந்தனம் முடித்துவிட்டு வருகிறேன். அதுவரை இந்த ஜோதிர் லிங்கத்தை உன் கைகளில் வைத்து கொண்டிரு.
இதற்கு நான் எதற்கு. அந்த கரையில் வையுங்கள் ஐயா...
முடியாது குழந்தாய். இந்த லிங்கத்தை கைகளில்தான் வைத்திருத்தல் வேண்டும்.
சரி தாருங்கள் ஐயா. ஐயோ இந்த லிங்கத்தின் எடை மிகவும் அதிகமாக உள்ளதே?
ஐயா! என்னால் முடிந்தவரை கையில் சுமந்து கொண்டிருப்பேன். சுமக்க முடியவில்லை எனில் மூன்று முறை தங்களை அழைப்பேன். உடனே வரவில்லை என்றால் அதன் பின்னர் இந்த லிங்கத்திற்கு நான் பொறுப்பல்ல.
அழைக்கும் முன்பாகவே நான் வந்து விடுகிறேன்
இராவணா! ஓ... இராவணா!
மூன்றாவது முறையும் அழைக்கின்றேன் இரா...வ...ணா...
சிவலிங்கத்தை பூமியின் மீது சிறுவன் வைத்து விட்டான்.
குழந்தாய்! நீ என் விஷயத்தில் விக்னேஸ்வரனானாயே... ஆத்ம லிங்கத்தை பூமியின் மீது வைத்து விட்டாயே...
இராவணா! கணபதியை முதலில் வணங்காததால் இவை யாவும் நடந்தது. தெய்வம் உனக்கு தண்டனை வழங்கிற்று. நீ இனி செய்திட வேண்டியது ஏதுமில்லை. இலங்கைக்குச் செல்.
இராவணா! உன் தூய பக்தியினால் என்னை மகிழ்ச்சி அடையச் செய்து ஆத்ம லிங்கம் பெற்றதால் உன் வரலாறு அமரத்துவம் பெற்றது. இன்று முதல் இந்த கோகர்ண திருத்தலம் பூ கைலாசமாகப் புகழ் பெறும். இங்கு வரும் பக்தர்கள் முதலில் விக்னேஸ்வரனையே பூஜிப்பர்.
முற்றும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
(பெரிய எழுத்துக்களில்) _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட / ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/- (12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசீது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: சந்தாதாரர் கையொப்பம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடைத் திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-2233333
2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஒ., வரைவோலை, ஐ.பி.ஓ., டி.டி.-யை "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம்,
தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri R.V. Vijayakumar, B.A., B.Ed., and Published by Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D. P.G.Dip. in JMC. on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.,P.G.Dip. in JMC.



30–06–2025 முதல் 02–07–2025 வரை ஸ்ரீநிவாச மங்காபுரம் ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு நடைபெற்ற சாக்ஷாத்கார வைபோத்ஸவம். அதுபோது சேஷ, அனும, கருட வாகனங்களில் ஸ்வாமி தனித்தும், உபயதேவியருடனும் எழுந்தருளிய திருக்காட்சிகள்.






23–06–2025 அன்று திருமலையில் ஸ்வாமி லட்டு பிரசாதத்தைக் கூடுதலாக பெறுவதற்கு தி.தி.தே. அறிமுகப்படுத்திய யு.பி.ஐ. வசதியுடன் கூடிய க்யோசிக் இயந்திரம். இந்த இயந்திரத்தின் வாயிலாக கூடுதல் லட்டு டோக்கன்களைப் பெறும் பக்தர்கள்.





21–06–2025 அன்று உலக யோகா தினத்தை முன்னிட்டு திருப்பதியில் தி.தி.தே. நிர்வாகக் கட்டிட வளாக மைதானத்தில் யோகா பயிற்சி செய்த தி.தி.தே ஊழியர்கள். இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட தி.தி.தே. கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு.சிஎச்.வெங்கைய சௌதரி ஐ.ஆர்.எஸ். அவர்கள், பொறுப்பாண்மைக் குழு உறுப்பினர்கள் திருமதி பனபாக லக்ஷ்மி அவர்கள், திரு.ஜி.பானுபிரகாஷ் ரெட்டி அவர்கள், தி.தி.தே. திருப்பதி இணைச் செயலாட்சித் தலைவர் திரு.வி வீரபிரம்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள் மற்றும் சி.வி.எஸ்.ஓ.

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-07-2025 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 5th of Every month.



ஸ்ரீவிநாயக சதுர்த்தி 27-08-2025